உ
சிவமயம்

# 2வது
# உலகத்திருமுறைப் பெருவிழா மலர் 2014

# 2nd International Thirumurai Festival and Research Conference 2014



*Sponsored by* **London Sivan Kovil Trust**

&

*Supported by* **Malaysia Hindu Sangam**

Held in London

19th - 21st September 2014

## Following Temples & Organisations involved in Organising the 2nd International Thirumurai Festival & Conference, London 2014.

**Sponsored by**
London Sivan Kovil Trust, London SE13 5ES, UK.

**Supported by**

Malaysia Hindu Sangam, Malaysia.
Saiva Munnetta Sangam, London E12 6AB, UK.
Shree Ghanapathy Temple, London SW19 8PU, UK.
Sri Selva Vinayagar Temple, Essex IG1 4BN, UK.
Enfield Nagabhushani Amman Temple, London N9 9PZ, UK.
Shri Kanaga Thurkkai Amman Temple, London W13 9AE, UK.
London Sri Murugan Temple, London E12 6AF, UK.

## Steering Committee:

Chairman
**Dr. T. Sriskandarajah**

Vice Chairman
**Dr. S. Rajasundaram**

Secretary
**Mr. K.V. Kanesamoorthy**

Treasurer
**Mr. V.R. Ramanathan**

Youth Committee
**Dr. Sharavanan Jeyanathan**
**Mr. Kumaran Sriskandarajah**

Coordinators
**Dr. S. Jeyanathan**
**Mr. S. J. Fatimaharan**

Research Secretary
**Dr. K. Sivakumar**

Cultural Secretary
**Mr. S. Ananathiyagar**

Committee Members
**Dr. S. Maheswaran**
**Mr. S. Balasingam**
**Dr. S. Sivathasan**

Punn Isai Adviser
**Thiru Samy Thandapani**

==========================================

# 2வது

## உலகத்திருமுறைப் பெருவிழா மலர் 2014

# 2nd International Thirumurai Festival and Research Conference 2014

*Sponsored by:*
**London Sivan Kovil Trust**
4A, Clarenden Rise, London SE13 5ES
United Kingdom

&

*Supported by*
Malaysia Hindu Sangam
No: 67, Jalan PJS 1/48
Taman Petaling Utama 7
46150 Petaling Jaya, Selanger Darul Ehsan, Malaysia

*Held*
19th - 21st September 2014
London

==========================================

உ
திருச்சிற்றம்பலம்




## திருஞானசம்பந்தர் அருளிய
## 1ம் திருமுறையின் 1ம் திருக்கடைக்காப்பு
## 1st Hymn of 1st collections of Thirumurai

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

thoadudaiyasevi yanvidaiyae'riyoar thoove'nmathisoodik
kaadudaiyasuda laippodipoosiyen nu'l'langkavarka'lvan
aedudaiyamala raanmunai :naadpa'ni:n thaeththavaru'lseytha
peedudaiyapira maapuramaeviya pemmaanivanan'rae.

தோடணிந்த திருச்செவியை உடைய உமையம்மையை இடப்பாகத்தே உடையவனாய், விடை மீது ஏறி, ஒப்பற்ற தூய வெண்மையான பிறையை முடிமிசைச்சூடி, சுடுகாட்டில் விளைந்த சாம்பற் பொடியை உடல் முழுதும் பூசி வந்து என் உள்ளத்தைக் கவர்ந்தகள்வன், இதழ்களை உடைய தாமரை மலரில் விளங்கும் நான்முகன், படைத்தல் தொழில் வேண்டி முன்னை நாளில் வழிபட அவனுக்கு அருள்புரிந்த பெருமை மிக்க பிரமபுரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானாகிய இவன் அல்லனோ! (The Lord has an ear on which a lady`s jewel earring is worn. He rides on a bull, having worn a spotlessly pure white crescent moon of a single phase. He smeared himself with the ash from the cremation ground, which has the nature of a forest. The thief who has captivated my mind, this person is really the great one who resides gladly in Piramapuram possessing greatness, where the Lord bestowed his grace on Piraman. who is seated in a (lotus) flower having petals, who bowed to him and worshiped him, in the distant past.)


09.05. 642 வியாழக்கிழமை அன்று திருஞானசம்பந்தர் அருளியது
(Recited by St. Thiruganasampanthar on 09.05.642 Thursday )

வெளியீடு (Publisher) : Thirumurai Steering Committee
2nd World Thirumurai Festival & Research Conference
London -2014
London Sivan Temple, London SE13 5ES, UK
tflondon2014@hotmail.com

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
24 -வது குரு மகாசன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609803
நாகை மாவட்டம்.
தொலைபேசி : 04364 - 232021





நாள்: 05-09-2014

## அருள் வாழ்த்துரை

*நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க*
*கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க.*

பதிகள் தொறும் சென்றேத்தி பயில்மூவர் தமிழ்மாலைப்
பதிகமெலாம் அங்கங்கே பாடிஉளம் களிகூரும்
பதிகரோடும் எனைக்கூடப் பணித்தருளாய் இமையவர்தம்
பதிகளுக்கும் பதியாகிப் பதிக்கலைசைப் பதியானே.

- மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிய
கலைசைப் பதிற்றுப்பத்து அந்தாதி.

முழுமுதற் பரம்பொருளாகிய சிவபெருமான் திருவருளைப் பெறுவதற்குச் சிறந்த சாதனமாக உள்ளவை நம் பன்னிருதிருமுறைகளே ஆகும். நம் திருமுறைகள் பல அற்புதங்களை விளைவித்துள்ளன. உள்ளன்புடன் திருமுறைகளை ஓதிச் சிவபெருமானை வழிபட்டால் வாழ்வில் வேண்டிய பேறுகள் அனைத்தையும் பெறலாம்; முடிவில் பிறவாப் பெருநிலையாகிய சிவானந்த முத்தியினையும் பெறலாம். இவ்வுண்மையினை,

**இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்**
**அம்மை யேற் பிறவித்துயர் நீத்திடும்**

என்னும் அப்பர் தேவாரத்தால் அறியலாம்.

சிவவழிபாட்டு நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியன திருமுறைகளில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

**விளக்கினார் பெற்றஇன்பம் மெழுக்கினால் பதிற்றியாகும்**
**துளக்கிநன் மலர்தொடுத்தால் தூயவிண் ஏறலாகும்**
**விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்**
**அளப்பில கீதஞ்சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே**

**- அப்பர் தேவாரம் ( பொது ).**

என்று சரியையும்,

**நறைமலிதரும் அளறொடுமுகை நகுமலர் புகைமிகு வளரொளி**
**நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடும் அடியவர்**
**குறைவில பதம்அணை தரஅருள் குணமுடை இறைஉறை வனபதி**
**சிறைபுனல் அமர்சிவ புரமது நினைபவர் செயமகள் தலைவரே.**

**- சம்பந்தர் தேவாரம் ( திருச்சிவபுரம் )**

என்று கிரியையும்,

**தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள், நாடொறும்**
**நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயொர் நால்விரல்**
**மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே**
**ஆடுவன் ஆடுவன் ஆமாத்தூர்எம் அடிகளே.**

**- சுந்தரர் தேவாரம் (திருஆமாத்தூர்)**

என்று யோகமும்,

**இன்றெனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து**
**எழுகின்ற ஞாயிறே போன்று**
**நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்**
**நீ அலால் பிறிது மற்றின்மை ;**
**சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்துஒன்றாம்**
**திருப்பெருந்துறைஉறை சிவனே !**
**ஒன்று நீ அல்லை ; அன்றி ஒன்றில்லை**
**யார் உன்னை அறியகிற்பாரே !**

**- திருவாசகம் (கோயில் திருப்பதிகம்)**

என்று ஞானமும், காட்டப்பெற்றுள்ளமை சில சான்றுகளாகும். இவற்றில் மேலும் தெளிவுபெற சித்தாந்த சாத்திரங்களைப் பயிலவேண்டும். சைவ சித்தாந்தக் கருத்துக்களைச் சாரமாகத் தொகுத்து வழங்கும் முறையில்

**பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைப்போல் பசுபாசம் அநாதி**
**பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்**
**பதிஅணுகில் பசுபாசம் நிலாவே.**

என்று **பத்தாம்திருமுறையாகிய திருமந்திரம்** எடுத்துரைப்பது நினைந்து போற்றுதற்குரியது.

இத்தகைய அருஞ்சிறப்புகளுக்குரிய திருமுறைகளின் பெருமையினை உலகறிந்து பயன்கொள்ளும் முறையிலே **"இரண்டாவது உலகத்திருமுறைப் பெருவிழா"** இலண்டன் மாநகரில் 19, 20, 21-09-2014 ஆகிய நாட்களில் சீரும்சிறப்புமாக நடைபெற உள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம். இலண்டன் அன்பர்களின் சிவநெறிப்பணிகள் பாராட்டுக்குரியன.

இப்பெருவிழா இனிதே நடந்திடவும், திருமுறைகளின் பெருமையினை இளைய தலைமுறையினர் உட்பட யாவரும் உணர்ந்து சிவநெறி பின்பற்றிச் சிறக்கவும் வேண்டி

நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீஞானமாநடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

பெறுநர் : விழா பொறுப்பாளர்கள் ,
இரண்டாவது உலகத்திருமுறைப் பெருவிழா
இலண்டன்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 வது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001


" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே "



சைவத்தின் மேற்சமயம் வேறில்லை யதிற்சார்சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள் வாய்
மைவைத்த சீர்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய் வைத்தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே"

- சைவ எல்லப்ப நாவலர்.

சைவ சமயம் மிகத் தொன்மையானது சிவனோடு சம்பந்தமுடையது சைவ சமயம். இச்சமயம் காலம்தொறும் தோன்றியருளிய அருளாளர்களின் வாழ்வினாலும், வாக்கினாலும் வளர்ந்து ஓங்கிச் சிறந்துள்ளது. இச்சமயத்தின் தலைவனாக இறைவன் (சிவன்) திகழ்கிறான். இவ்இறைவனை அடையத்தக்க நெறிகள் இரண்டு. அவை பக்தி நெறி, ஞான நெறி என்பன. இதனை அன்பு நெறி, அறிவு நெறி என்றும் கூறப்பெறும். சமயாச்சாரியர்கள் தேவார திரவாசகங்களை அருளி அன்பு நெறியையும், சந்தானசாரியார்கள் சாத்திரங்களை அருளி அறிவு நெறியையும் மக்களுக்குப் போதித்து சைவ சமய நெறிகளை அறியச் செய்தனர். இவ்விருவகை நெறிகளும் இறைவனைக் காணுதற்கு அமைந்த இரண்டு கண்கள் போன்று விளங்கி வருகின்றன.

சைவ சித்தாந்தம் வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், திருமுறை, சாத்திரங்கள் வழி வந்தவை. வேதம் பொது நூல். ஆகமம் சிறப்பு நூல். இவற்றின் வழிவந்தவை பன்னிரு திருமுறைகளாகும்.

"திருமுறையே சைவ நெறிக்கருவூலம்
தென்தமிழன் தேன் பாகாகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான்
செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த
எழுதிஅருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதி மலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற்றாமல்"

என்னும் சிதம்பரம் தலத் தனிப் பாடல் ஒன்று விளக்குகிறது.

இத்தகு சிறப்புடைய சைவ சமயத்தின் வளர்ச்சிக்குத் துணைநின்ற திருவருள் செல்வர்களாகிய 27 ஆசிரியர்களால் அருளப்பெற்றது 12 திருமுறைகள்.

இத்திருமுறையின் கருத்துக்களையும், சிறப்புக்களையும் சைவத்தின் புகழையும் அனைவரும் தெரிந்து பின்பற்றி பயன்பெறும் வகையில் இலண்டன் மாநகரில் சிவன்கோயில் அறக்கட்டளை சார்பில் செப்டம்பர் திங்கள் 19ஆம் தேதி முதல் மூன்று தினங்கள் 2ம் உலகத் திருமுறை மாநாடும், பெருவிழாவும் நடத்துவது சிறப்பிற்குரியது.

இம்மாநாட்டின் நினைவாக மலர் ஒன்று வெளியிடுவதும் பயன்தரக்கூடியது. மலர் பக்தி மனம் கமழவும், மாநாடு சிறப்புடன் நடைபெறவும், மாநாட்டுக் குழுவினர், கலந்துகொள்ளும் அறிஞர்கள், சான்றோர்கள் மற்றும் அனைத்து அன்பர்களும் எல்லா நலமும், வளமும் பெற்று நீடு இனிது வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீசெந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

* * * * * *

## Some of Our National and International Delegates

**Blessings from the Atheenams**

Thiru Kailaya Paramparai Thiruvavaduthurai Atheena 24th Kurumahaa Sanithanam Srila Sri Ambalavaana Dheshika Paramachariya Swamigal

Thiru Kailaya Paramparai Dharumaiatheenak Kaddalai Kumara Swami Thambiraan Swamigal

**Guests of Honour**

Datuk Mohan Shan – *President of the Malaysia Hindu Sangam*

**Priests**

Sivasri Maheswara Kurukal – *Chief Priest, London Sivan Kovil*
Kailai Maa Munivar Naganatha Sivam Kurukal – *Chief Priest, London Murugan Temple*

Vasanthan Kurukal – Chief Priest, Katpaga Vinayagar Temple, Walthamstow
Sivasri Kamalanathan Kurukal – Chief Priest, Nagabhooshani Amman Temple Edmonton

**Speakers**

| | |
|---|---|
| Dr R Natarajan | – South India |
| Dr K Raphael Kobler | – Germany |
| Professor (Associate) Dr K P Nalasivam | – South India |
| Dr P Maruthanayagam | – South India |
| Dr R Lambodharan | – Canada |
| Pullavar Sivanathan | – London, UK |
| Mr K Sivakumar | – South India |
| Mr M Manivasakam | – South India |

**Musician**

Ponn Muthukumaran Othuvar Moorthigal – *Chidambaram, South India*

**Bharathanatyam Presentations**

Thirugnaanasambanthar
*by Students of Srimathi Sujatha Sathees, London Sivan Temple Bharathanatya School*

Thirunaavakarusar
*by Students of Srimathi Uma Chandradeva, London Tamil Centre*

Sundaramoorthy Swamigal, Vanthondan Vallaku,
*Students of Mrs Santha Annapuranai, Director of Sri Meenatchi Bharathanatya Palli*
Thiruvathirai Thirunaal Maanikavasagar *by Students of Srimathi Rajimohanaraj of the Saiva Munneta Sangam, Naalvar Tamil Academy*

உ
Love is God

# LONDON SIVAN KOVIL TRUST

**இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை**

Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr. S. Somasegaram

**Secretary:**
Mr. K.V. Kanesamoorthy

**Asst Secretary:**
Mr. V. Krishnanandharaj

**Treasurer:**
Mr. T. Arulthas

**Asst Treasurer:**
Mrs. V. Gengatharan

**Building & Finance. Sub Committee Chairman**
Dr. S.Rajasundaram

**Community Service. Sub Committee Chairman**
Mr. N.Sivasubramaniam

**Cultural Activity Sub committee Chairman**
Mr. S.Yogarajah

Dr. S.Navaratnam
Dr. S.Sivathasan
Dr.(Mrs.) V.M.Karunaharan
Mr. S.Sukumar
Mr. S.Parameswaran
Mrs. R.Sritharan
Mr. S.Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc
   Dartford Branch
2. Lloyds Bank plc
   Billericay Branch
3. Natwest
   Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co

Thiruchitrambalam

It is with the loving grace of the Almighty that I am pleased to provide this message for the 2nd International Thirumurai Festival and Conference on behalf of the London Sivan Kovil Trust and the Steering Committee.

We are fortunate to be hosting the 2nd International Thirumurai Festival and Conference in London, as it is an auspicious opportunity for devotees and followers of the Saiva faith to meet and interact with Saiva spiritual leaders and scholars from across the globe in an inclusive and nurturing environment. The conference provides a forum to discover and learn about the imperious Saiva Thirumurais and about the Saiva way of living and cultural aspects that are relevant for the current generations living here in the West.

The objective of the Conference is to raise awareness of the Thirumurais throughout the Tamil Saiva community at large. The Thirumurais are the bedrock of the Saiva faith and it is imperative that we encourage a greater degree of understanding so that we can integrate in a practical way the divine teachings into our own lives.

Awareness of the Thirumurais amongst the youth and second generation Tamils living in the West is particularly concerning for various Saiva bodies, and as such we have made efforts to address this. The Conference will be holding 'Youth Parallel Sessions', whilst the main conference proceedings are ongoing, targeted at youth and second generation Tamils. The Parallel Sessions will be held in English, and will focus upon specifically topical subjects that should be of interest to the Youth. Esteemed scholars will address the Youth Parallel sessions and give those attending the opportunity to ask questions.

The main Conference will be structured to focus and relate the Thirumurais to four major Saiva Temples: Chidambaram, Thiruvanaamalai, Thirukoneswaram and Thiruketheeswaram. There will be video presentations, singing, speeches, and dramas connected to these Temples. By focussing on these Temples, the hope is that those attending will take something more tangible from the Conference and be inspired to visit, or revisit, these Temples in the near future and learn more about our religion, Thirumurais and its application to our way of life.

On behalf of the Steering Committee and the London Sivan Kovil Trust, I would like to express my sincere thanks to all those who have helped in making this Conference possible. May Lord Arunachaleshwara and Goddess Abeetha Kujambal bless us all and guide us to their divine abode.

Anbe Sivam

**Dr T Sriskandarajah**
President,
London Sivan Kovil Trust
President, Steering Committee - 2nd World Thirumurai Conference 2014.

**OUR SERVICES: Temple Activities - Meditation - Library - Community Hall for Social Activities, Weddings and Cultural functions - Free Education for Language, Music & Culture - Funeral Religious Services.**




2nd World Thirumurai Festival & Research Conference 2014

(Hosted by London Sivan Kovil Trust. Charity Registration No: 1051516)


London Sivan Temple, 4A Clarendon Rise, London SE13 5ES

Mobile: 07440 188 112 Landline: 0208 318 9844

E mail: tflondon2014@hotmail.com Web: www.thirumuraifestivallondon2014.com


Thirumurai, My Life Companion

## உலகத் திருமுறைப் பெருவிழா 21ம் நூற்றாண்டின்

## பக்தி இயக்கத்திற்கான வித்தாக இறைவனருள்கவே!

எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநடம்
**எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கும்**
**தங்கும் சிவனருள் தன்விளையாட்டதே**

எங்கும் என்னிலும் உங்களிலும் இறைந்து இருக்கும் இறைவனின் திருச்சித்தமே "என்னையும் ஒருபொருளாக்கி" இல்லை இல்லை எம்மையும் ஒரு பொருளாக்கி தன்னையும் தன் தலைவனையும் அறியும் இந்த மானிடப் பிறவியைத் தந்துள்ளது. இதனால் எம் செயலின் - வினையின் பயனை அனுபவித்து முடிக்க இப்பிறவியில் என்றும் உள்ள அவன் என்றும் உள்ள என்னையும் உங்களையும் தோற்றுவித்து நிலைப்படுத்தி நிற்கிறான். இதுவே எம் வாழ்வு. இதுவே அவனை நாம் அடைவதற்கு அவனே அத்துவாவாகவும் – வழியாகவும் சொற்பிரபஞ்சமாகவும் பொருட்பிரபஞ்சமாகவும் அவன் நிற்கும், நாம் காணும் நிகழ்த்தும் வாழ்வு. அதனாலேயே இறைவனை அவன் அவள் அது என்றுரைத்தது சைவசித்தாந்தம். 'அது நீயானாய் - நான் அதுவாகிறேன் - என் ஆன்மா அதுவாகும் - என் ஞானம் அதுவாகும்' என்ற நான்கு வேதமகாவாக்கியத்தின் விரிவாகியது தமிழ். அந்தத் தமிழ் கேட்க இறைவனே இறங்கி வந்த வரலாற்றை – அந்தத் தமிழில் பாட இறைவனே அடியெடுத்துக் கொடுத்த வரலாற்றை - அந்தத் தமிழிலேயே தன் எண்ணத்தைக் கவியாகக் கடிதமாக எழுதிய வரலாற்றைக் கொண்டவர்கள் நாங்கள். அந்தத் தமிழில் இறைவி இறைவனைப் போற்றிய இன்தமிழ் மொழியின் எழுத்துப் பதிவே முதன் முதல் "திருமுறை" என்னும் சொல்லாட்சியைத் தோற்றுவித்தது.

ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை
பாடும் **திருமுறை** பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே

எனவே சக்தியே திருமுறை. சிவமே திருமுறையின் பயன் திருமுறையே வாழ்வின் ஒளி. திருமுறையே வாழ்வின் தவப்பயன். திருமுறையே தமிழர்க்குத் தனிநிலையிலும் பொதுநிலையிலும் துன்பம் துயரம் வறுமை அறியாமை போரின் கொடுமை நோயின் வன்மை மாற்றும் அருஞ்சத்தி. இந்தத் திருமுறை "கூற்றாயினாவாறு விலக்ககிலீர்...." என உயிர்த்துணையாக வாழ்வின் வழித்துணையாகப் பிறந்த 1400வது ஆண்டினை 2015ல் உலகு எதிர்கொள்ளும் மகிழ்ச்சியான காலத்தை நாமும் எதிர்கொள்ள இந்த உலகத் திருமுறைப் பெருவிழா மலேசியாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற மலேசிய இந்து சங்கத்தின் "உலகத் திருமுறை மாநாடு" வழி தொடர்கிறது. "உலகெலாம்" என இறைவனே அடியெடுத்துக் கொடுத்து உலகம் வாழ உயிர்கள் மகிழத் தந்த "இறையான் மகிழிசை" ஐரோப்பாவில் 21ம் நூற்றாண்டில் பரவிட நாம் திருமுறை ஆர்வக் குழுவினராகி உங்களுடன் உங்களில் எங்களில் வாழும் இறைவனுடன் பயணிக்கத் தொடங்கும் பெரும் ஆன்மீகப் பயணத்தின் வரலாற்றுச் சிறப்புமிகு 19-21 செப்டெம்பர் 2014ல் எல்லாம் வல்ல இறைவனின் திருவருளால் நம் பயணம் உலகிற்கு அமைதியும் உள்ளங்களுக்கு நிறைவும் தந்திட எல்லாரும் அவன் திருவடி சேர்ந்திட அவனருளாலே அவன் தாள் வணங்குகின்றேன்.

சூ.யோ. பற்றிமாகரன்

இணைப்பாளர்




2nd World Thirumurai Festival & Research Conference 2014
(Hosted by London Sivan Kovil Trust. Charity Registration No: 1051516)
**London Sivan Temple, 4A Clarendon Rise, London SE13 5ES**
Mobile: **07440 188 112** Landline: **0208 318 9844**
E mail: **tflondon2014@hotmail.com** Web: **www.thirumuraifestivallondon2014.com**
Thirumurai, My Life Companion



**Coordinators:**
Dr S Jeyanathan
Mr S J Fatimaharan

**Steering Committee:**

**President**
Dr T. Sriskandarajah

**Vice President**
Dr S. Rajasundaram

**Secretary**
Mr K. V. Kanesamoorthy

**Treasurer**
Mr V. R. Ramanathan

**Research Secretary**
Dr K. Sivakumar

**Cultural Secretary**
Mr S. Anandathiyagar

**Committee Members**
Dr S.Maheshwaran
Mr S. Balasingam

**Youth committee**
Dr Sharavanan Jeyanathan
Mr Kumaran Sriskandarajah

**Punn Isai Adviser**
Thiru Sami Thandapani (Resident Othuvar LSK)


## *Goals, Aims and the Vision*

This World Thirumurai Festival and Research Conference is a unique, historical, international showpiece which we are honoured to host in London. We in London are proud to continue the great work and vision that was created at the inaugural Conference in Malaysia, September 2013. My family and I were blessed to be present and part of those events celebrating our Religion, Language and Culture.

We are aware that Thirumuraigal have been in circulation since the 10th Century when they were re-discovered and classified by Nambiandar Nambi for the Chola King, Raja Raja Cholan. We know that next year signifies the 1400 year anniversary since Thirunaavukarasar momentously sang his first Thevaram, Kootraayina Vaaru, year 615. This performance was to relieve suffering he was subject to through intense abdominal pain. This also signifies the 900 years since Sekilar had the final verses of the 12th Thirumurai revealed to him through Divine Inspiration. Needless to say that Thirumuraigal are the main life wire and connection with our Ancient Cultural History and our Ancestors of Saivam and Tamil.

This Thirumurai Festival and Research Conference takes the initiative to create and raise the awareness of the greatness and eminence of Thirumurai to the wider public especially focusing on our Younger Generation in Europe and the World beyond. It also aims to ensure the advancement of Thirumurai in the 21st Century through research with scientific approaches and meaningful discussions.

We highlight the humanitarian thoughts and universal principles embodied in Thirumurai. We hope that this Thirumurai Conference will initiate a new era of awareness.

We hope that it will equip us with the insight, knowledge and tools to help practice and implement in our daily lives, as well as reveal the ethical nourishment embodied within Thirumurai.

This Thirumurai Conference seeks to strengthen the foundation of Thirumurai recitation not only within temples, but actually in our daily home prayers.

Research articles were invited, relevant to the current principles and practices of everyday life at present. This also inspires the awareness for Spiritual Aspirants regarding areas on the concepts of creation, God, Soul and the World. There were a wide range of topics discussed within the articles, which can be seen in the Conference Research Article Companion.

Today we are witnessing the Thirumurai festival and the serious involvement of Research Presentations and essentials in our daily life. We have Bharathanatyam Dance Dramas displaying the glory of the Saiva Saints; we have video presentations showing the magnificence and spiritual significance of some of our most sacred Temples in the world; we have Punn Isai Concerts and a wide range of talks on various aspects of Thirumurai.

My sincere thanks to all those eminent Saiva Researchers, Scholars and Philosophers across the globe who have contributed articles, attended and participated for the Conference, and you the delegates who help to create a collected Divine Atmosphere.

We present this *flower* in your hands to enjoy both its fragrance and beauty as it takes you further forward on your Spiritual Journey.

**Dr Sangarapillai Jeyanathan**
**Conference Coordinator**
**Second World Thirumurai Festival & Research Conference**
**London 2014**




2nd World Thirumurai Festival & Research Conference 2014

(Hosted by London Sivan Kovil Trust. Charity Registration No: 1051516)

**London Sivan Temple, 4A Clarendon Rise, London SE13 5ES**

Mobile: **07440 188 112** Landline: **0208 318 9844**

E mail: **tflondon2014@hotmail.com** Web: **www.thirumuraifestivallondon2014.com**

Thirumurai, My Life Companion



**Coordinators:**
Dr S Jeyanathan
Mr S J Fatimaharan

**Steering Committee:**

**President**
Dr T. Sriskandarajah

**Vice President**
Dr S. Rajasundaram

**Secretary**
Mr K. V. Kanesamoorthy

**Treasurer**
Mr V. R. Ramanathan

**Research Secretary**
Dr K. Sivakumar

**Cultural Secretary**
Mr S. Anandathiyagar

**Committee Members**
Dr S.Maheshwaran
Mr S. Balasingam

**Youth committee**
Dr Sharavanan Jeyanathan
Mr Kumaran Sriskandarajah

**Punn Isai Adviser**
Thiru Sami Thandapani (Resident Othuvar LSK)


திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!

**செயலாளர் செய்தி**

உலகத்திருமுறைப் பெருவிழா எல்லா மக்களதும் அமைதிக்கும் முன்னேற்றத்திற்கும் சிவனருள் வேண்டும் பெருவிழா. உலகெங்கும் திருமுறை தமிழ் இளையவர்களின் வாழ்க்கைத் துணையாகவேண்டும். திருமுறையே உயிர்த்துணை என்பதனை அவர்கள் உணர்ந்து வாழ உதவவேண்டும் என்ற நோக்கு உடன் இந்த திருமுறைப்பெருவிழா முன்னெடுக்கப்படுகிறது.

1. திருமுறைகளை இல்ல வழிபாட்டிலும் ஆலயவழிபாட்டிலும் உறுதியாய் இடம்பெறச் செய்தல்.
2. திருமுறைகளில் பொதிந்து கிடக்கும் சமய உண்மைகளை மேலும் வெளிக்கொணர்தல்.
3. திருமுறைகளின் மாண்பையும் சிறப்பையும் இன்றைய தலைமுறையினருக்கு உணர்த்துதல்.
4. திருமுறைகள் பற்றிய ஆய்வுகள் வழியும் கலந்துரையாடல்கள் வழியும் திருமுறைகளின் வளர்ச்சிக்கு வழிகோலல்.
5. திருமுறைகளின் வழி தமிழிசையையும் தமிழ் மொழியையும் மேம்படுத்தல்.
6. திருமுறைகள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகளை வாழ்வில் கடைபிடிக்க உந்துதல் அளித்தல்.
7. திருமுறைகளின் சிறப்பை அறிவதன் வழி தாங்கள் சார்ந்துள்ள சமயத்தின் பெருமையை உணர்த்துதல்.
8. திருமுறைகளின் உலகப்பெருநோக்கையும் மானிடம் போற்றும் தன்மையையும் உலகறியச் செய்தல்

என்னும் எட்டுப் பெருநோக்குகளுடன் மலேசிய இந்து சங்கத்தால் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட உலகத்திருமுறை மாநாட்டில் இலண்டனில் ஐரோப்பாக் கண்டத்திற்கான அடுத்த மாநாட்டை நடத்த வேண்டுமென்று இறைவனின் ஆணை பிறந்தது.

அதனை திருமுறையில் ஆர்வம் உள்ளவர்கள் குழுவாகச் சேர்ந்து முன்னெடுக்க முயன்ற பொழுது இலண்டன் சிவன் கோயில் சிவஞானம் பெருக்கும் இவ்விழாவை நடாத்த வேண்டுமெனக் கோரினர். சிவப்பணி தமிழ்ப்பணி இரண்டும் இணைந்த இந்த இறைப்பணிக்கு இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளைத் தலைவரும் அறங்காவலர்களும் தம்மாலான உதவிகள் அனைத்தையும் செய்திட முன்வந்தமையும் தெய்வத் திருச்செயலே. இந்த இறைபணியை முன்னெடுக்கும் திருமுறை முன்னெடுப்புக்குழுவுக்கும் சிவஞானம் பெருக்க பக்கத்துணையாய் நிற்கும் ஆலயங்களின் அறங்காவல் குழுக்களுக்கும் சிவனடியார்கள் மற்றும் தமிழ் அன்பர்களுக்கும நிதியும் மதியும் உடலுழைப்பும் தந்து அரும்பணியாற்றும் அனைவர்க்கும் சிவனருள் நிறைவாக அமையட்டும். இந்தச் சிவப்பணி செய்யும் திருமுறை முன்னெடுப்புக்குழுவின் செயலாளர் என்ற வகையில் எம்பிரான் அருளால் திருமுறைமாநாடும் திருமுறைப் பெருவிழாவும் என்ன நோக்கங்களுக்காகத் தொடங்கப் பெற்றனவோ அவை நிறைவேறி இம்மையிலும் மறுமையிலும் ஒவ்வொரு உயிரும் சிவனடி சார்ந்து பெருவாழ்வும் பெருமகிழ்வும் அடைய உண்ணாமுலையாளுடன் உறை அண்ணாமலையான் திருவருள் சித்திக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

க.வி. கணேசமூர்த்தி


செயலாளர்

மலேசிய இந்து சங்கம்
MALAYSIA HINDU SANGAM (5859-M)

"தொண்டு - Service"

NO. 67, JALAN PJS 1/48, TAMAN PETALING UTAMA 7, 46150 PETALING JAYA, SELANGOR. TEL : 603-7784 4668 / 4669 / 4244 FAX : 603-7784 7304
Email : info@hindusangam.org.my Website : http://www.hindusangam.org.my

**BENEDICTORY ADDRESS**



From the President of Malaysia Hindu Sangam

(The Initiator of the 1st World Thirumurai Conference 2013)

Tirucchirrambalam
Namassivaya valhga naathan taalh vaalhga
Imaippolhutum en nenjil neengathan taal vaalhga

Volumes can be written on the greatness of Thirumurai. The Tamils regards Thirumurai as in par with the Vedas. Thirumurai extols the glory and greatness of Lord Shiva. The philosophy and religion of the Thirumurai was primarily based on the Saivasiddhanta.

The tradition of singing the Thirumurai initiated by the Nayanmars started during the 7th and 8th centuries A.D. As a Bhakti Movement it had great impact in the history of Hinduism in Tamil Nadu. It upheld the superiority of Bhakti or devotion to God, as the simplest and the easiest mode of spiritual practice. The main contribution of the Nayanmars was counteracting the effects and spread of Jainism and Buddhism which at that period had lost the spiritual values and became mere heretical movements. The Nayanmars also through their Bhakti Movement helped spread the religion to the masses transcending all social barriers, such as caste, wealth or power. May Lord Shiva bless us that the same fervor will be rekindled among the Tamil Shaivites to bring our religion to every corner of the world.

Thirty-seven years ago, Malaysia Hindu Sangam started the propagation of Thirumurai in a humble way. School children were taught to sing the Thirumurai and later competitions were held at various levels. Today, we are proud that the chanting of Thirumurai has become a culture among the Tamil Shaivites in Malaysia. As a next move, Malaysia Hindu Sangam convened the 1st World Thirumurai Conference 2013 in Kuala Lumpur. Our efforts were well rewarded when the Tamil community in London has taken the beacon this year. We believe, soon, the culture of Thirumurai will spread among the Tamils in England and Europe.

I, on behalf of Malaysia Hindu Sangam wish success to the Steering Committee of the London Thirumurai and the London Shivan Temple for their sincerity, dedication for the work and above all for their courage to undertake this noble task. I earnestly pray that the conference will be a source of inspiration to the Tamil Shaivites all over the world.

thiruccirrambalam

vaya nyaanam vallaar marugar perumaan
uyar nyaanam unarnthu adi ulguthalaal
iyal nyaana cambandhana paadal vallaar
viyan nyaalamellaam vilangum pukaze.

Because of contemplating the Feet, realizing the
Supreme wisdom of the Lord of Thirumarugal,
Where people of wisdom subjected (to the Lord) live,
The able ThirunyAnacambandhan sung songs
Those who are capable, their fame will shine
Throughout the grand world.

Ever in the service of the Lord,

DATUK RS. MOHAN SHAN PMW., JMW.,AMK., BKM., PJK
PRESIDENT
MALAYSIA HINDU SANGAM

# சைவத்தமிழ் பெரியார் முனைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்களின் வாழ்த்துச்செய்தி

மலேசிய இந்துச் சங்கம் ஐரோப்பாவில் நடத்தும் இரண்டாவது அனைத்துலகத் திருமுறை மாநாடு சிறப்பாக அமைய அருள்மிகு சிவகாமி அம்மையார் உடனுறை ஆடல்வல்லான் அருள் பெருக்குவாராக.

ஐரோப்பாவின் அணுவுக்கு அப்பாலான முதன்மை அறிவியல் ஆராய்ச்சி நடுவமான சுவிற்சர்லாந்தின் சேர்ண் ஆராய்ச்சி நடுவத்தின் அருட் தலைவர் அருள்மிகு சிவகாமி அம்மையார் உடனுறை ஆடல்வல்லான்ஆவர். புகழ் பூத்த ஆய்வாளர்கள், நோபல் பரிசாளர் பலர் அருள்மிகு ஆடல்வல்லானின் ஆற்றலை உணர்ர்ந்து அவரது திருவுருவச் சிலை ஒன்றையே தம் ஆய்வக வாயிலில் வைத்துள்ளனர். போற்றி வருகின்றனர்.

அருள்மிகு சிவகாமி அம்மையார் உடனுறை ஆடல்வல்லான் புகழ் பாடுவன பன்னிரு திருமுறைகள். ஐரோப்பாவின் 44 நாடுகள் அனைத்திலும் சைவத் தமிழர் வாழ்கின்றனர். பன்னிரு திருமுறைகளைப் பயில்கின்றனர், பயிற்றுவிக்கின்றனர். சிறப்பாக 20 நாடுகளில் அருள்மிகு சிவகாமி அம்மையார் உடனுறை ஆடல்வல்லான் திருக்கோயில்களுள் அமர்ந்து அருள்பாலிக்கிறார்.

மலேசியாவில் கடந்த 35 ஆண்டுகளுக்கும் கூடுதலாக ஆண்டு தோறும் திருமுறைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட நிலையில் தொடங்கி, மாநிலப் படியில் முகிழ்ந்து, தேசிய நிலையில் சிறப்புறும் மாணவருக்குத் தங்கப் பதக்கம் வழங்குவர்.திருமுறையே தம் உயிர்த்துணை என மலேசியச் சைவர்கள் வாழ்ந்து வருவதற்கு, இளம் வயதிலேயே மலேசியச் சைவர்கள் திருமுறைகளைப் பயில்வது அடித்தளமாகும்.

சிங்கப்பூரிலும் திருமுறை மாநாட்டுக் குழுவினர் திருமுறைப் போட்டிகளை நடத்தித் திருமுறையைச் சைவர்களும் சீனர்களும் பயின்று பயன்பெற, வாழ்வாக்க வழிசெய்துளர்.

உலகளாவிய திருமுறைப் போட்டிகள் நடைபெறவேண்டும் என்பதே

மலேசிய இந்துச் சங்கத்தினரின் ஆவல். சிறப்பாகத் தலைவர் தாத்துகர் மோகன் சண் அவர்களின் தணியாத தாகம்.

ஐரோப்பாவில் இருந்து இந்த மாநாட்டுக்கு வந்துள்ள அனைவருக்கும் இந்த மாநாட்டின் அந்த நோக்கத்தைச் சொல்லியிருப்பர். மலேசிய, சிங்கப்பூர் நடைமுறைகளைப் பின்பற்றி, ஐரோப்பாவிலும் திருமுறைப் போட்டிகளைத் தொடங்கவேண்டும். மாவட்ட நிலையில் நடத்துங்கள், மாநில நிலையில் தொடருங்கள், நாடளாவிய போட்டியை நடத்துங்கள், ஐரோப்பாவிற்கான போட்டியை நடத்துங்கள். சைவத்தையும் தமிழையும் நம்மிடையே தக்கவைக்கவும், மற்றவர்களிடம் கொண்டு செல்லவும் இப்போட்டிகள் வழிகாட்டும்.

ஐரோப்பியப் போட்டியாளர், மலேசியப் போட்டியாளர், சிங்கப்பூர்ப் போட்டியாளர் கலந்து கொள்ளும் உலகத் திருமுறைப் போட்டியை முதலில் தொடங்குவோம். கரிபியன் உள்ளிட்ட வட அமெரிக்கர்கள், தெற்காசியர்கள், தென்சிழக்கு ஆபிரிக்கர்கள், ஆத்திரேலிய பசிபிக்கார் உங்களைத் தொடர்வார்கள்.

திசையனைத்தும் திருமுறைத் தமிழ் நிலைக்க, மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்க, ஐரோப்பாவில் நடைபெறும் இரண்டாவது அனைத்துலகத் திருமுறை மாநாடு ஆக்கவழியில் செயலாற்றுவதாக.

மாநாட்டை முன்னெடுத்த மலேசிய இந்து சங்கம், முன்னின்று நடத்தும் இலண்டன் சிவன்கோயிலார், அவர்களுடன் இணைந்து பணிபுரியும் மருத்துவர்கள், சைவ சமய ஆர்வலர்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்.

உலகின் நாடுகள் பலவற்றில் இருந்து வந்துள்ள தவத்திரு குருமகாசந்நிதானங்கள், தம்பிரான் சுவாமிகள், அறிஞர்கள், பேராளர்கள், கட்டுரையாளர்கள், சார்பாளர்கள், தொண்டர்கள், பார்வையாளர்கள் யாவரையும் வாழ்த்தி வணங்குகிறேன்.

இரண்டாவது அனைத்துலகத் திருமுறை மாநாடு சிறப்பாக அமைய அருள்மிகு சிவகாமி அம்மையார் உடனுறை ஆடல்வல்லான் அருள் பெருக்குவாராக.

நன்றி

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
**Saiva Munnetta Sangam (UK)**
*"Community Service Through Hindu Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.Tel / Fax: 020 8514 4732
www.saivamunnettasangam.com Registered Charity No: 292085
ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம்

*Vice- Patrons*
Dr. (Mrs) Indra Siva-yoham
Dr. V Balasegaram
Mr R Pathmanathan

*President & Trustee*
Mr Sathasivam Anandathiyagar

*Vice-President & Trustee*
Mr D Rabindramohan

*Hon. General Secretary & Trustee*
Mr S Niranjan

*Hon. Treasurer & Trustee*
Mr V R Ramanathan

*Trustees*
Mr V R Loganathan

Mr W Nagaratnam

Mr G Parameswaran

Mr C Sithamparapillai

Mr V C Vamananathan

*Building Project Secretary*
Mr S Balasingam

*Examination Secretary*
Mr V Jegendirabose

*School Secretary*
Mr S Kugarajah

*Religious Secretary*
Mr M Ravindradas

*Social Service Secretary*
Mrs P Sabaratnam

*Publication Secretary*
Mr V Sivanarutchelvar

*Membership Secretary*
Mr M Yasotharan

*Assistant Treasurers*
Mr M Indusegaran

Mr. S Thamboo

*Committee Members*
Mrs A Gunarasa

Mrs B Kanagasabesan

Mrs V Kanagenthiran

Mrs Vasantha Mahadevan

Mrs P Nadaraja

Mr S R Pasupathy

Mrs Sri Ponnuthurai

## வாழ்த்த வாய்பளிக்கும் திருமுறை

முழுமுதற் பொருள் சிவபெருமானை உணர்த்த பொதுவில் வேத ஆகமும் அவரவர் மொழியில் சிறப்பு அருள் உரைகளும் உள்ளன. தமிழ் அருளாளர்களால் இறைவன் முன் படைக்கப்பட்ட அருள்மொழி திருமுறைகளாகும்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே

என்று அப்பர் சுவாமிகள் பாடியதில் வாழ்த்துதல், நினைத்தல், வணங்குதல் என மூன்று குறிப்பிடப்பட்டுள்ளன. இறைவனை நினைக்க மனமும், வணங்க உடலும் வாழ்த்த நாவையும் அவனே தந்து அருள் செய்துள்ளான் என்கிறார்.
இதனை மனம், மொழி, மெய் என்று வரிசைப்படுத்துவர். மனத்தால் நினைத்தல், வாயால் வாழ்த்தல், உடலால் வணங்குதல் என்ற மூன்றில் இடையே நிற்கும் வாயால் போற்றுதல் தனிச் சிறப்புடையது. காரணம் கண்ணால் தெரிகின்ற ஒரு பொருளைத்தான் மனத்தால் எண்ணிப் பார்க்க முடியும். இறைவன் எல்லோராலும் கண்ணால் பார்க்கப்படும் ஒருவனல்ல. கண்ணுக்குத் தெரியாத ஒன்றை உடம்பால் வழிபடுவதும், கருத்தால் தொழுவதும் இலகுவல்ல.

அப்படியானால் இறைவனை மனிதன் உணர்வது எவ்வாறு என்பதற்கு திருமுறைகளே வழியாகின்றன. முன்பு தாம் செய்த நல்வினைப் பயனால், தவத்தின் முதிர்ச்சியால் பெரியவர்கள் ஒருசிலர் தமது அனுபவ உண்மைகளை அருளுரைகளாகத் தந்துள்ளார்கள். அந்த அருளாளர்கள், திருமுறை ஆசிரியர்கள் எங்களின் கைகளைப் பிடித்து தமக்குக் கிடைத்த பெருங்கருணை வெள்ளத்தில் எங்களையும் நனையச் செய்யும் முயற்சியே அவர்கள் தந்த திருமுறைகளாகும்.

திருமுறைகளின் இனிமையைக் காதால் கேட்டு விளங்கி அவ்வழியே இறைவனை முதலில் நினைக்கவும் உணரவும் வேண்டும் என்பது திருமுறை ஆசிரியர்களின் அவாவாகும். செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் - என்றார் திருவள்ளுவர். காதால் கேட்பதால் திருமுறைகள் தரும் பயனை நாயன்மார்களே தெளிவாகச் செல்லிவிட்டார்கள். இத்தகைய திருமுறைகளின் சிறப்பை இயன்ற வகையில் வெளிப்படுத்த எடுக்கப்படும் எல்லா முயற்சிகளும் வரவேற்கத்தக்கன.

இலண்டனில் நடைபெறும் இரண்டாவது உலகத் திருமுறைப் பெருவிழா திருமுறையில் உள்ள ஈடுபாடு காரணமாகவும், மக்களின் பொது நன்மையைக் கருத்தில் கொண்டிருக்கும் உயர்ந்த நோக்கத்தாலும் இடம்பெறுகிறது. ஒரு சிலரது இந்த உயர்ந்த நோக்கத்தில் நாங்களும் இணைந்து கொள்வதில் பெருமிதமடைகின்றோம். திருமுறையின் சிறப்பால் இந்த விழாவும் சிறப்படைந்து இதன் நோக்கங்கள் வெற்றியடைய இறைவனை வணங்கி வாழ்த்துகிறோம்.

வாழ்த்த வல்லார் மனத்துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெருமான் என்றி றைஞ்சியும்
ஆத்தம் செய்தீசன் அருள் பெறலாமே – திருமந்திரம்

இப்படிக்கு
ச ஆனந்தியாகர்
சதாசிவம் ஆனந்ததியாகர்

15.09.2014

உ
பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்
THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K
200A Archway Road, London N6 5BA, Tel: 020 8348 9835 | Fax: 020 8482 6508
Web: www.sivafedaration-uk.org | Email: admin@saivafedaration-uk.org
Correspondence: 2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 0208 527 3819

Chairman
Mr. M. Gopalakrishnan

Secretary
Mr. T.Selvaratnam

Treasurer:
Mr. K. Nagarajah

Vice Chairman
Mr.S. Ramachandran

Asst. Secretary
Mr. K.V. Kanesamoorthy

Asst.Treasurer:
Mr. R. Kunasingam

Committee
Mr.S.Selvarajah
Mr.D. Rabindramohan
Dr. S. Maheswaran
Mr. K. Baskeran
Mr. M. Perinpanathan
Dr. T.G.V. Sritharan
Dr. T. Sriskandarajah
Mr. E. Suntharalingam
Mrs. R. Surenthiran
Mr. M. Mohanadas
Mr.S.Anandathiyagar

Affiliated Temples
SRI GHANAPATHY TEMPLE
123-125 EFFRA ROAD
WIMBLEDON, LONDON SW19 8PU.

SRI KANAGA DURKA AMMAN KOVIL
5 CHAPEL ROAD, WEST EALING,
LONDON W13 9AE.

HIGHGATEHILL MURUGAN TEMPLE
200 A ARCHWAY ROAD,
LONDON N65BA.

SRI RAJARAJESWARI AMMAN TEMPLE,
4 DELL LANE, STONELEIGH,
SURREY, KT17 2NE.

LONDON SIVAN KOVIL
4A CLARENDON RISE
LEWISHAM
LONDON, SE13 5ES.

CRAWLEY SRI SWARNA KAMADCHI AMMAN TEMPLE
6 UNIT, 1B STEPHENSON WAY,
THREE BRIDGES, CRAWLEY,
WEST SUSSEX, RH10 1TN.

SRI KATPATGA VINAYAGAR TEMPLE
2-4 BEDFORS ROAD
WALTHAMSTOW
LONDON, E17 4PX.

ARULMIGU SRI SIVAGAMI SAMETHA
SITHAMBARESWARAR SANNITHI,
2 SALISBURY ROAD
MANOR PARK LONDON, E12 6AB.

LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE
299-303 LEY STREET, ILFORD, IG1 4BN.

SRI SITHI VINAYAGAR THEVASTHANAM
CARISMA BULDING
59B REAR OF STATION ROAD
HARROW, MIDDLEX, HA1 2TY

## திருமுறை தினமும் திக்கெட்டும் தித்திக்கட்டும்

உலகம் முழுவதும் சைவ சமயத்தை உவந்து வாழும்தமிழ் அன்பர்கள் அனைவர்க்கும் பொதுவான அருட் சக்தி கொண்டவை திருமுறைகள் ஆகும்.. ஆழமான கருத்துக்களும் ஆன்மீக அலைகளைக் கொண்டவையுமாகும். இவற்றின் உண்மையை உலக அறியச் செய்வதற்கு திருமுறை பற்றிய மகாநாடுகள் அவசியமாகிறது. இளம் சிறார்கள் மேலை நாடுகளில் மாற்று நாகரிகங்களுள் மயங்கி விடாமல்விழாமல் தடுத்து மனத்தை நல்வழிப் படுத்தும் மகிமை உடையவை திருமுறைகள்

அவற்றைப் பற்றிய அறிவினை இங்கு நடைபெறும் இரண்டாவது உலகத் திருமுறை மகாநாடு மகிழ்வுடன் வெளிப்படுத்தும் என நம்புகிறோம். தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இம்மகாநாடு இளையோர் புரிந்துகொள்ளும் வகையில் நடைபெறும் என்பது வரவேற்கத்தக்கது.

இங்கிலாந்தைப் பொறுத்த அளவில் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட கோவில்கள் உண்டு.இவற்றுள் ஆரம்பகாலத்தில் ஐந்து கோவில்கள் இணைந்து பிரித்தானிய சைவத் திருக் கோவில் ஒன்றியமாக செயற்ப்பட்டது.பின்பு சென்ற வருடம் வரை பத்துக் கோவில்கள் சேர்ந்தன. மேலும் இவ்வருடம் முதல் மேலும் பதினோரு கோவில்கள் இணைந்து சிறப்பான சைவத் திருக்கோவில் ஒன்றியமாக மிளிரும் இவ்வேளையில் நாயன்மார்களின் ஆசி அனைவர்க்கும் கிடைக்க இம்மகாநாட்டில் இனிமை இலங்கும் என சைவத்திருக்கோவில் ஒன்றியம் தெய்வப் பேரருளை வேண்டுகிறது.

பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் திருஞானசம்பந்தர் அவதாரம் பற்றி குறிப்பிடும்போது.
தொண்டர் மனம் களி சிறப்பத் தூய திருநீற்றின் நெறி எண்திசையும் தனி நடப்ப ஏழ் உலகும் களி தூங்க எனப் போற்றுகிறார். இதன்படி சைவத் தொண்டர்கள் மனம் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் ஆலயங்களில் பண்ணிசை பரவ வேண்டும். விரத நாட்கள் ஒரேநாளில் நடைபெற வேண்டும் இவ்விடயத்தில் அனைத்து ஆலய நிர்வாகங்கள் சிவாச்சார்யர்கள் உபயகாரர்கள் அடியார்கள் முன்வரவேண்டும். அப்பொழுதான் முழுமையான பலன்களை அடையலாம்.

அத்துடன் ஆதரவு அற்றவர்களுக்கு அருள் வேண்டி பிரார்த்திப்பதுடன் பொருள் உதவியும் உவந்தளிக்க ஆலயங்கள் மேலும் கருணை கொள்ள வேண்டும்.

இத்திருமுறை மகாநாடு மாண்புற நடைபெறவும் இம்மகாநாட்டில் அனைத்து ஆலயங்களில் இருந்தும் அடியார்கள் சிறார்கள் அணிதிரள வேண்டும் என்றும் அன்போடு பிரித்தானிய சைவத்திருக்கோவில் ஒன்றியம் வரவேற்கிறது

வாழ்க தமிழ் வளர்க சைவம் வனப்புடன் பரவுக பண்ணிசை

திரு.மு.கோபாலகிருஷ்ணன்
தலைவர் பிரித்தானிய சைவத்திருக் கோவில் ஒன்றியம்

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

# HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)

## ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE

61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ

Tel: 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org **Charity No: 1143043**


## வாழ்த்துரை

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் திருவருள் துணைநிற்க.

இலண்டன் மாநகரில் 2வது அகில உலக திருமுறை மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம். பரம் பொருளாகிய இறையருளை நாம் பெறுவதற்கு உறுதுணையாக விளங்குபவை திருமுறைகளாகும். இருபத்தியேழு அருளாளர்களால் அருளப்பட்ட திருமுறைகளை போற்றி பாதுகாப்புடன் எதிர்கால சந்ததியினர் மத்தியில் திருமுறை பற்றிய விழிப்புணர்வையும் திருமுறை பொக்கிஷங்களையும் உலகறியச் செய்யும் இம்முயற்சிக்கு எமது வாழ்த்துக்கள்.

இறைவனின் இருகண்களாக வேதங்களும் திருமுறைகளும் விளங்குகின்றன. வேதசிவாகம கருத்துக்களை உள்ளடக்கியதாகவே திருமுறைகள் விளங்குகின்றன. சைவ சித்தாந்த உண்மைகளையும் திருமுறைகளின் நாம் காணலாம். திருமுறைகள் வேதசிவாகமங்களை போற்றி பாடுவதைக்காணலாம்.

திருமுறைகள்பாடி நிகழ்ந்த அற்புதங்கள் பலவுள்ளன. சைவ வாழ்க்கையின் உயரிய கருத்துக்களை உள்ளடக்கிய திருமுறைகளை போற்றும் வகையில் நடாத்தப்படும் இம்மாநாடு சிறக்க வாழ்த்தி எம்மை ஆழும் என்பீல்ட் நாகபூசணி அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க வளமுடன்

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)
சிவாச்சாரியர்கள் அடியார்கள்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

உ
Love is God
**LONDON SIVAN KOVIL TRUST**
**இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை**
Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr. S. Somasegaram

**Secretary:**
Mr. K.V. Kanesamoorthy

**Asst Secretary:**
Mr. V. Krishnanandharaj

**Treasurer:**
Mr. T. Arulthas

**Asst Treasurer:**
Mrs. V. Gengatharan

**Building & Finance. Sub Committee Chairman**
Dr. S.Rajasundaram

**Community Service. Sub Committee Chairman**
Mr. N.Sivasubramaniam

**Cultural Activity Sub committee Chairman**
Mr. S.Yogarajah

Dr. S.Navaratnam
Dr. S.Sivathasan
Dr.(Mrs.) V.M.Karunaharan
Mr. S.Sukumar
Mr. S.Parameswaran
Mrs. R.Sritharan
Mr. S.Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc Dartford Branch
2. Lloyds Bank plc Billericay Branch
3. Natwest Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co

உ

## அருளாசியுரை

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகராக விளங்குகின்ற ஸ்ரீஅபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமானது திருவருளோடு நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத்திருமுறை மாநாடு இம்மாதம் 19ம், 20ம், 21ம் திகதிகளில் இங்கு நடைபெறவிருப்பதையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். திருமறையும், திருமுறையும் இறைவனது இரு கண்களாகும். இதுவே எமது சமயத்தின் அடிப்படை ஆதார நூல்களாகும். திருமறையில் சொல்லியிருக்கும் விடயங்களின் தேன் துளிகள் திருமுறையில் செறிந்திருப்பதை நாம் காணலாம். இவ்விரண்டும் எமது சமயத்தில் திருவருட் பொக்கிஷங்களாகும். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களுடன் ஐந்தாம் வேதமாய்ப் போற்றப்படுவது திருமுறைகளாகும். இவ்வகையில் எமது சமயத்தின் கருவூலமாக விளங்கும் திருமுறைகளுக்கென உலகரீதியில் ஒருமகா நாட்டினை நடாத்தி திருமுறைகளின் பெருமைகளை நாம் அறிவதும், அத்துடன் எமது இளம் சமுதாயத்தினருக்கு அதனை விளங்க வைத்துப் போற்றி வணங்குகின்ற செயல்கள் மிக அவசியமான ஆணித்தரமான ஒன்றாகஅமைகிறது. இறைவனது திருவருளைப் பெற்ற அருளாளர்களினால் பாடப்பெற்ற திருமுறைகளுக்கு மாநாடு நடாத்துவதும், இம்மாநாட்டில் ஆன்மீக சொற்பொழிவாற்ற பல அறிஞர்களைப் பங்களிப்புச் செய்திருப்பதும், வருங்கால எமது சமுதாயத்தினருக்கு விளங்குகின்ற வகையில் ஆங்கில மொழி மூலம் சொற்பொழிவுகளை ஏற்படுத்தி அதன் மூலம் விழிப்புணர்ச்சியை உண்டாக்கும் தன்மையும் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். மேலும் இதுபோன்ற நல்ல ஆக்கபூர்வமான நிகழ்வுகளை நடாத்தி நல்லறிவு பெறவும், இவ்வுலகம் எங்கும் அன்பும் சமாதானமும் நிலவவும், எல்லோருக்கும் இறையருள் பரிபூரணமாகக் கிடைக்கப் பெற்று நல்வாழ்வு வாழவும் இலண்டன் லூயிஷம் சிவபுரம் என்னும் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஅபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமானது திருமென்மலர்ப் பாதங்களைப் பணிந்து போற்றி வணங்கி எமது மனமார்ந்த நல்லாசியினைக் கூறுகிறோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

**இங்ஙனம்,**
**சிவஸ்ரீ.சபா.மகேஸ்வரக்குருக்கள்**
**(பிரதம குருக்கள்)**
**இலண்டன் சிவன் கோயில்**
**லூயிஷம்**

18.09.2014

**OUR SERVICES: Temple Activities - Meditation - Library - Community Hall for Social Activities, Weddings and Cultural functions - Free Education for Language, Music & Culture - Funeral Religious Services.**

உ
சிவமயம்
பிள்ளையார் துணை
"சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும்"
இலண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்
LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE
299 - 303 LEY STREET ILFORD, ESSEX IG1 4BN TEL / FAX :- **0208 911 8934**
WWW.SRISELVAVINAYAGAR.ORG.UK E-Mail:- info@sriselvavinayagar.org.uk

07/09/2014

இலண்டன் திருமுறைக்கழகம் இரண்டாவது திருமுறை மாநாட்டை இலண்டனில் நடாத்த இருப்பதை கேள்வியுற்று மிகுநத ஆனந்தமடைந்தேன்.

எமது மூதாதையர்கள் எவ்வளவோ துன்பத்துக்கு மத்தியிலும் உருவாக்கி கட்டிகாப்பாற்றி வந்த பல விஷயங்களை நாம் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டோம். வாழ்வியலுக்கு வழிகாட்டும் திருக்குறள் போல், ஆன்மிகவியலுக்கு வழிகாட்டும் திருமுறையை திருப்திகரமாக நாம் முதன்மைப்படுத்துவது கிடையாது. இதை உணர்ந்தோ என்னவோ இலண்டன் திருமுறைக் கழகம் இரண்டாவது மாநாட்டை இலண்டனில் நடத்துவது என்று முடிவெடுத்து செயல்ப்படுவது மிகுந்த ஆனந்தத்தை அளிக்கிறது.

ஒரு மாநாட்டை நடத்துவதற்கு மிகுந்த பணமும், மனித வலுவும் தேவை என்பதை அனுபவரீதியாக உணர்ந்தவன் என்ற முறையில், மேற்படி திருமுறை மாநாடு அதன் நோக்கத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு எம்மால் ஆன அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவோமாக.

நல்ல விடயங்களை செய்வோர்க்கு நல்லவர்கள் என்றும் துணை வருவார்கள் என்பது காலம் தந்த பாடம்.

எல்லாம் நல்லபடி நடக்க ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமான் பேரருள் என்றும் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு இரண்டாவது திருமுறை மாநாடு சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி
செல்வா செல்லத்துரை
ஸ்தாபாகர், அறங்காவலர்
ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்.

FOUNDER & PRESIDENT
Mr. S. Selvarajah

HON. SECRETARY
Mrs. N. Surendran

HON. TREASURER
Mrs. A. Sathiyamoorthy




# B Vasanth Kurukkal B.A (Hons)

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்

சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்

ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

Home: 18, Chingford road, Walthamstow, London, E17 4PJ

Temple: 0208 527 3819 Home: 0208 523 3802 Mob: 0790 370 7878 Email: vasanthan@live.co.uk


## திருமுறைத் திருவிழா திருவருள் பெருகட்டும்

சைவத் தமிழ் மக்களுக்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதம் பன்னிரு திருமுறைகள்.இறைவனே அடி எடுத்துக் கொடுத்த திருமுறை தான் பாடிய திருமுறை அவரே எழுதிய திருமுறை என்ற பல்வேறு நிலைகளில் திருமுறைகளின் பெருமைகளைக் காணலாம்.

திரு என்பதற்கு பல கருத்து உண்டு அதேபோல் முறை என்பதற்கும் பல கருத்து உண்டு ஒருவகையில் திரு என்பது தெய்வத் தன்மை கொண்டது என்ற கருத்தும் முறை என்பது நூல், உறவு என்ற கருத்துக்களும் உடையது.தெய்வத்துடன் நாம் உறவு வைப்பதற்கு அல்லது தொடர்பு வைப்பதற்கு ஏற்ற நூல் என்ற கருத்தையும் நாம் பெறலாம்.இறைவன் பல்வேறு வடிவங்களில் இருப்பது போல் பல்வேறு முறைகளில் அருளைத் தருகிறார். இறைவன் பல்வேறு வடிவினன் என்பதை நானாவித உருவாய் நமையாள்வான் என்றார் சம்பந்த சுவாமிகள்.

சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நிலைகளில் நாயன்மார்கள் அருளைப் பெற்றிருக்கிறார்கள்.தொண்டு செய்வதால் அருள் பெறலாம் வழிபாட்டில் இருப்பதால் அருள் பெறலாம் அல்லது தியானம் முதலிய செயல்களால் அருள் பெறலாம்.எதுவாக இருந்தாலும் தூய மனதும் அன்பும் இருக்க வேண்டும்.தூயமனதில்லாமல் செய்யும் காரியம் அழுக்குப் பாத்திரத்திற்குள் பால் விட்டதாகிவிடும்.

நாயன்மார்களின் தூய அன்புதான் அவர்கள் அருட்பாடல் பாடுவதற்கும் அற்புதங்கள் செய்வதற்கும் காரணமாகஇருந்தது.அவர்களின் அற்புத பாடல்களை ஓதுவதால் அல்லது அன்போடு செவிமடுப்பதால் இறையருள் கூடுகிறது.பல துன்பங்கள் மத்தியில் தான் நாயன்மார்கள் இறை அருளைப் பெற்றுள்ளார்கள் என்பதை அவர்களது பாடலால் அறியலாம் .எனவே நாம் சிறிது நேரம் வணங்கிவிட்டு இறைவனிடம் பெரிதாக எதிர்பார்ப்பது மிகத் தவறாகும்.அல்லது பல இன்னல்கள் எமை சந்திக்கும் போது இறைவனை நாம் கும்பிட்டும் பலன் இல்லை என்று எண்ணுவதும் பிழையாகும்.

இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உன் கழல் தொழுது எழுவேன் என்றார் ஆளுடைய பிள்ளை.துன்பம் துடைப்பீர்கள் அன்பன் அணி ஆரூர் நான் பொன் மலர்தூவ இன்பம் ஆகுமே.என்றும் ஆறுதல் கூறுகிறார் சம்பந்த சுவாமிகள் துன்பம் நமக்கு இருக்கும் ஆனால் தொடர்ந்து வழிபட்டு இன்பத்தை தேடுங்கள் என்பது தான் சமய உண்மை..நோயிலும் பிணியிலும் நாம் அகப்பட்டு இருப்பது சாதாரணமே. நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி என்றும் கூறுகிறார்.

இதேவேளை அன்பில்லாத வஞ்சனையுடைய மனிதர்களுக்கு இறைவன் அருள் கிட்டாது.கரவாடும் வன்நெஞ்சர்க்கு அரியானை. என்று அப்பர் சுவாமிகளும் ஓராதார் உள்ளத்தில் ஒளிக்கும் ஒளியானே என்று மணிவாசகரும் விளம்பினார்கள்.

நாம் செய்த வினை தீர இறைவழிபாடு ஒன்றே எமக்கு துணை செய்யும். .முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்.என வாசகரும் பந்தித்த வல்வினை தீர்க்கவல்லானைப் பசுபதியை என அப்பரும் நவில்கிறார்கள்.அவ்வினைக்கு இவ்வினை என்ற சம்பந்தர் உய்வினை நாடாது இருப்பது உந்தமக்கு ஊனமென்றே என அறிவுறுத்துகிறார்.வரும் பெரும் வல்வினை என்றிருந்து எண்ணி வருந்தலுற்றேன் எனப்பாடும் சுந்தரமூர்த்திசுவாமிகள் பிறவி வேர் அறுக்கும் கரும்பினை கழுமல வள நகர்க் கண்டு கொண்டேனே.என்கிறார்.

உன்கையில் பிள்ளை உமக்கே அடைக்கலம் என நாம் எம்மை இறைவனிடம் முழுமையாக ஒப்படைக்க இருக்கும் அருமையான சொத்து திருமுறைகள் அவற்றை தெளிவு படுத்தும் பேரு விழாவாக விளங்கும் திருமுறைப் பெருவிழா சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பெரும் தளமாக அமையட்டும்

சிவஸ்ரீ.பா.வசந்தக் குருக்கள்

OM MURUGA

இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO: 271097

78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF

TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407

www.londonsrimurugan.org

BOARD OF TRUSTEES
Mrs. L. Sivajoti (Chairman)
Mr. V.E. Palaniappan
Mr. G. Ramadass
Mr. R.C.A. Anpananthar
Mr. S. Narashiman

PRESIDENT
Mr. S. Sampathkumar

VICE PRESIDENTS
Mrs. S. Krishnasamy
Mr. R. Renganathan

SECRETARY
Mr. P. Dakshinamoorthy

ASST. SECRETARY
Mr. R. Panneerselvam

TREASURER
Mrs. P. Raguvaran

ASST. TREASURER
Mr. G. Sathiamoorthy

EXECUTIVE COMMITTEE
Mr. A. Gopal
Mrs. M. Gopalnathan
Mrs. Malliga Ramadoss
Mr. I. Muthu
Mr. R. Narayanan
Mr. G. Poominathan
Mrs. R. Ramachandran
Mr. Ravi Ramasamy
Mrs. R. Sekaran
Mr. M Sivam
Mr. R. Sukumaran
Miss. V. Thambyrajah
Mr. M. Thenappan
Mr. P. Uthayakumar

**15.09.2014**

திருமுறை மாநாட்டு அமைப்புக் குழு

**திருமுறைப்பெருமை திக்கெல்லாம் பரவட்டும்**

பழமைக்கும் மனித நேயத்திற்கும் புகழ்பெற்ற இங்கிலாந்து நாட்டின் இலண்டன் மாநகரில் சைவசமய கோட்பாடுகளையும் சிறப்பினையும் சிவனின் பேராற்றலையும் எளிய மக்களும் உணர்ந்து உய்யும் வண்ணம் அருளாளர்களால் அருளப்பெற்ற பன்னிரு திருமுறையை போற்றி மாநாடு நடைபெறுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

மனித வாழ்க்கையை செம்மையாக்குவதில் முக்கிய பங்காற்றும் சமய நல்வழிகளில் மக்களை அழைத்துச் செல்வது மிகமுக்கியமானதாகும். அரசர்களும், ஆதீனங்களும் போற்றிப் பாதுகாத்த திருமுறைப் பெருமையை உலகெங்கும் அறியச் செய்கின்ற சமயவிற்பன்னர்களின் இத் தொண்டு மிகவும் போற்றத்தக்கதாகும்.

சமயக்குரவர்களாகிய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் முதலிய அருளாளர்களால் பாடப்பெற்ற திருமுறை திருப்பதிகங்கள் நமது மனதை தெளிவு படுத்தி இறையருளை எளிதாக அனுபவிக்க வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இலண்டனில் செப்டம்பர் 19, 20, 21 தேதிகளில் நடைபெறும் திருமுறை மாநாடு சிறப்பாக நடந்தேறி மேன்மை கொள் சைவ நீதி உலகெல்லாம் விரிந்து சிறந்திட எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப்பெருமானை வணங்கி வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்

சிவ சம்பத்குமார்
தலைவர்
அறங்காவலர்கள் மற்றும் நிர்வாக குழுவினர் சார்பாக




Aum Muruga

# BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST

## உயர்வாசற்குன்று முருகன் கோவில்

Established 1974, Registered Charity No : 269067
200A Archway Road, London N6 5BA.
Tel : 020 8348 9835. Fax : 020 8482 6508.
E-mail : admin@highgatehillmurugan.org
Web: www.highgatehillmurugan.org



**Board of Trustees**

*Chairman:*
Mr. S.M.Srikantha

*Secretary:*
Mr. K. Nagarajah

*Treasurer:*
Mr. A.Vairavamoorthy

Mr. C.Canagasundaram
Dr. V.P.Narayana Rao
Mr. K.Nithyananthan
Mr. M.Perinpanathan

*Bankers:*
Nat West Bank plc
Barclays Bank plc
State Bank of India

*Solicitors*
M/S Wimal & Co


இரண்டாவது உலகத் திருமுறைப் பெருவிழா இலண்டன் மாநகரில் செப்டம்பர் 19ஆந் திகதி 20ஆந் திகதி 21ஆந் திகதிகளில் நடைபெறுவதனையிட்டு அம்மலருக்கு ஆசி உரை வழங்குவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இம்மாநாடு இதற்கு முன்னர் முதன்முறையாக மலேசியா நாட்டில் நடைபெற்றது. இலண்டனில் நடைபெறுவதனால் இங்கு வாழ் அன்பர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தயாரிக்கவும் அதனை ஒப்படைக்கவும் இலகுவாக இருக்கும். அத்துடன் மாநாட்டில் அன்பர்கள் பங்கு பற்றவும் வசதியாக இருக்கும்.

பல நூற்றண்டுகட்கு முன்னர் நம்பியாண்டார் நம்பி என்னும் புண்ணியவான் திருமுறைகளைத் தொகுத்து வகுத்து பலருக்கும் புரியும் வண்ணம் அமைத்துக் கொடுத்தனால் இன்றைய சமுதாயம் பயன் பெறக்கூடியதாக உள்ளது. 11 திருமுறைகளாக இருந்த அருட்பாடல்கள் 12ம் நூற்றண்டில் வாழ்ந்த சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்துடன் பன்னிருத் திருமுறைகளாகத் திகழ்கின்றது.

27 அடியார்களாற் பாடப்பெற்ற பன்னிரு திருமுறைகளின் தொகுப்பே திருமுறையாகும். ஆலயங்களில் இத்திருமுறைகளை ஆலய குருமார்கள் இளஞ்சிறார்களுக்குப் புரியும் வண்ணம் விளங்கப்படுத்தல் வேண்டும். இம்முயற்சியில் எங்கள் ஆலயமும் ஏனைய சைவ ஆலயங்களும் இத்திருமுறைகளை இளஞ்சிறார்கள் படித்துப் பயன் பெறச்செய்தல் வேண்டும்.

இம்மாநாட்டிற் பங்குபெற்றுவதற்கு ஈழத்திலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் அறிஞர்கள் வருவதனையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றோம். ஏனெனில் இங்கு வாழ் மக்கள் அந்த அறிஞர்களின் உரைகளைக் கேட்டுப் பயன்பெறுவர்.

இம்மாநாடு சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல உயர்வாசற்குன்று முருகப்பெருமானை வேண்டுகின்றேன்.

"எல்லோரும் இன்புற்றிருப்பது அன்றி வேறொன்றும் அறியேன்".

ஆண்டவன் இறைபணியில்

க. நாகராசா

Est 1992

# SATHY ESTATES

***Sales & Lettings***



## Landlords

- *Rent Guaranteed*
- *Competitive Rents*
- *Short or long lets*
- *Over 22 years' experience*
- *Peace of mind*

22 years

## Tenants

- *Wide range of properties available*
- *Full Property Management*
- *Evening & Weekend viewings available*

**Harlesden Office**
220 High Street
Harlesden, NW10 4SY
Tel: **020 8961 9613**
Fax: **020 8961 9614**
harlesden@sathy.co.uk

**Harrow Office**
119 Headstone Road
Harrow, HA1 1PG
Tel: **020 8861 1011**
headstone@sathy.co.uk

**Stanmore Office**
306 Honeypot Lane
Stanmore, HA7 1DY
Tel: **020 8204 9444**
Fax: **020 8204 2666**
stanmore@sathy.co.uk



# ஜோதி

நலமான உள்ளம் மகிழ்வான வாழ்வு

## HELP LINE & COUNSELLING SERVICES

உடலுக்கு மட்டுமல்ல
உள்ளத்திற்கும்
நெருக்கடிகளுண்டு!!!
விபரீதம் ஏற்படும்
முன் உதவியை
நாடுங்கள்!!!



☎ 0203 3710 006

1.00 pm - 9.00 pm

இது ஒரு இலவச அந்தரங்க சேவை

Ahilan Foundation, Charity Number : 1134912



# *Shree Ghanapathy Temple*

*125 – 133 Effra Road, London SW19 8PU*
***Tel: +44 (0)20 8542 7482 / 8542 2267***
www.ghanapathy.co.uk

*"Serving the Community since 1981"*

**It is with great pleasure that I give this message on the very special occasion of the 2nd World Thirumurai Festival and Research Conference. Following on from the success of the inaugural conference in Malaysia, we are very much looking forward to taking part in the 2nd conference and congratulate the main organisers for having the courage, devotion and enthusiasm to undertake such a mammoth task.**

**Their vision for this conference has been to reveal the greatness of Thirumurai to the current generation of Hindu Saivite children growing up in the UK. And over the next 3 days of the conference, we will be able to see our children blossom through the depiction of faith, devotion and unconditional love expressed in these most ancient of tamil devotional hymns.**

**We must also thank the London Sivan Temple, for being the main Temple to support this ambitious project. They had the foresight to bring to London our most respected Othuvar, Sri Sami Thandapani, who has been responsible for elevating Thirumurai - from very simple tunes sung in the Temple, to a classical art form, sung in the traditional Pann. Standing alongside pure Carnatic pieces in an arangetram, they are now sung with eagerness by young Tamil children and youth during our Temple festivals. These hymns, when sung with feeling and devotion, soothe the soul and bring tears to the eyes of the devotees and are an integral part of Saivite worship. We are blessed that he has been teaching the adults and children in our Temple every week for the last 14 years and we will always regard him as one of the London Sivan Temple's greatest contributions to our Saivite faith here in London.**

**Our best wishes and warmest congratulations to all who have been involved in organising and helping with this conference. Those who attend will have the rare opportunity to listen to the speeches of great scholars, hear the voices of wonderful Othuvars bring to life the words that have been spoken and will see how this is being translated and carried forward into the lives of our next generation of children that have been born and brought up here in the UK.**

**May our beloved Lord Ghanapathy shower His choicest Blessings for the success of this conference and the good work that will continue long after the conference has finished, in order to nurture the seeds of our great Saiva religion, culture and traditions that have been planted in the hearts of our children here in the UK.**

**Sincerely,**
**In humble service to our beloved Lord,**

**Mrs. Geetha Maheshwaran**
**(Co-ordinator, Shree Ghanapathy Temple)**

Om Shakthivel Om

# Shakthi Vel Temple

## இரண்டாவது உலக திருமுறை பெருவிழா 2014

இன்றை கால கட்டத்தில் எமது சமயம் அடுத்த தலை முறையை வழி நடத்துவதற்கு வழிகாட்டிகள் இல்லாது ஒன்றுமோ செய்ய முடியாத நிலை நேர்ந்துள்ளது இத்தருணத்தில்.

சக்தி வேலன் ஆலயம் எமது சமூகத்தின் வளர்ச்சியையும், சமய வழிகாட்யாயையும் இன்றைய சமூகத்திற்கும் அடுத்து வரும் சந்ததிகளுக்கும் ஒரு வழிகாட்டியா கஉ ள்ளது. அதே போன்று.

இரண்டாவது உலகத்த திருமுறை பெருவிழா எதிர் கால இளைஞர்களின் சைவ சமயத்தின் ஒரு வழி காட்டியாகவே இவ் விழா அமையும் என்பதற்கு ஐயமில்லை. இப் பெருவிழா அமையும் என்பதற்கு ஐயமில்லை. இப் பெருவ-ிழா மென்மேலும் வளர்ந்து எம்மின மக்களும் எல்லா இனத்தைவரையும் போற்றும் விழாவாக அமைய வேண்டும்.

நன்றி

இங்ஙனம்
சக்திவேலன் ஆலய நிர்வாகம்.

Shakthi Vel Hindu Association
657 Green lanes, Hornsey, London, N8 0QY Tel: 02036408113/ 07429516874.
Email: omshakthivelan@gmail.com. Website: www.shakthivel.co.uk

Clayhall Osteopathic Health Clinic



Are You in Pain ?

Headaches
Frozen shoulders
Arthritis
Back pain
Lower limb pains
Neck pain
Disc problems
Whiplash injuries
Tennis elbow

Ms. S. Muralitharan BSc (Hons) Ost.Med
&
Associates
*REGISTERED OSTEOPATHS*
*(Practitioners available by appointment)*

NHS
REFERRALS ACCEPTED

SPINAL HEALTH CHECK 25 % OFF
(Please Quote : OSTEO17)

420 Clayhall Avenue, Ilford, IG5 0SH

020 8220 4254

www.clayhallosteopaths.com

the villagers

VILLAGERS CATERING
SUPPLIERS LTD





CALL FOR ORDERS 02070961216

123 FRANCIS AVENUE,
ILFORD, ESSEX IG1 1TT

CONTACT DETAILS;
Mob: 07725003856, 07800903135
EMAIL ID:villagerscsltd@gmail.com

# வாழ்த்துரை

**போற்றிசெ யந்தண் கயிலைப் பொருப்பனை**
**நாற்றிசைக் குந்நடு வாய்நின்ற நம்பனைக்**
**காற்றிசைக் குங்கமழ் ஆக்கையைக் கைக்கொண்டு**
**கூற்றுதைத் தான்தன்னைக் கூறிநின் றுய்மினே** - திருமந்திரம்

"இரண்டாவது உலகத் திருமுறைப் பெருவிழா" இலண்டன் மாநகரில் 19, 20, 21.09.2014 ஆகிய நாட்களில் சிறப்புற நடைபெற உள்ளமை சிவபெருமான் திருவருட்பெருக்கே ஆகும்.

திருமுறைகளைக் ஓதிச் சிவநேயம் வளர்த்து வந்தால் இம்மை, மறுமைப் பயன்களும், அழிவில்லாத ஆனந்த வீடு பேறும் கிடைத்தல் திண்ணம்.

"நீடு செல்வந்தராகி இவ்வுலகினில் நிகழ்தரு புகழாரே" (திருக்கோட்டூர்-9)
என்று இம்மைப்பயனும்,
"புணர்ந்தமிழ் பத்தும் இசையால் உரை செய்வார் பெறுவர் பொன்னுலகமே"
(திருமயிலாடுதுறை)
என்று மறுமைப்பயனும்,
"சொல்லார் தமிழ்மாலை செவிக்கு இனிதாக
வல்லார்க்கு எளிதாம் பிறவாவகை வீடே" (திருக்குரங்கனில் முட்டம் -11)

என்று வீடுபேறாகிய முடிவான பெரும்பயனும் சம்பந்தர் வோரத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளமை காத்தக்கது. ஆகையால் திருமுறைகளை ஓதிவருதலும் அவற்றின் பொருளைப் படிமுறையில் உணர்ந்து வருதலும் திருமுறைகளின் அளவில்லாப் பெருமைகளைப் பேசுதரும், கேட்டும் பெரும்பேறுகளை எய்தும் மார்க்கத்தில் நம்மைச் செலுத்தும் அருள்மயமான புண்ணியச் செல்களாகும்.

இத்தகைய உயர்ந்த சிவபுண்ணியச் செயல்கள் உலகாவிய முறையில் நடைபெற இந்தத் திருமுறைப் பெருவிழா வழிவகுக்கின்றது. எனவே இவ்விழா நிகழ்வு போற்றிப் பாராட்டுதற்குரியது. இலண்டன் மாநகரச் சிவநேயச் செல்வர்களை இந்தத் திருவருள்மயமான திருணத்தில் மகிழ்கின்றேன்.

இரண்டாம் உலகத்திருமுறைப் பெருவிழா பொலிவுற நிகழ்ந்து உலகெங்கும் சிவநேயம் பெருகித் துயர்தீர்ந்து நிம்மதியும் மகிழ்ச்சியும் மேலோங்க வேண்டுமென, குருமுதல்வர் ஸ்ரீநமசிவாயமூர்த்திகளின் குருவருள் விளக்கமாகத் திகழ்ந்தருளிவரும் திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்து நான்காவது குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறேன்.

சு.குஞ்சிதபாதம்
(ஆதீனப்புலவர் - திருவாவடுதுறை ஆதீனம்)

## வாழ்த்துரை

இந்தியத் திருமண்ணில், தென் தமிழ்நாட்டில் பிறந்துள்ளோம் என்பதே நம்மை பெருமிதம் கொள்ளச் செய்கின்றது. கலைகளாகட்டும் ஆன்மீகமாகட்டும் வானசாத்திரமாகட்டும் கணிதமாகட்டும், மருத்துவமாகட்டும் எல்லாவற்றிற்கும் தொடக்கமாக இருப்பது தென் தமிழகமே. படையெடுத்துவந்த பரங்கியரையும் வடபுலத்தவரையும் வியப்பில் மூழ்கடிக்கச் செய்யுமளவுக்குக் கட்டிடக் கலைகளும் கோயிற் சிற்பங்களும் ஓவியங்களும் ஆகிய எல்லா வளங்களும் இங்கே நிறைந்துள்ளன.

இன்றளவும் இறை பக்தி என்ற அளவில் எதனையும் துணிந்து மேற்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தையே சிறுவர் தொடங்கி பெரியவர்கள் வரை காண முடிகின்றது. அந்த அளவு பக்தியில் ஊறித்திளைத்த நம் நாட்டு பெரியவர்கள் புலம் பெயர்ந்துவிட்டாலும் ஆன்மீகத் தாகம்கொண்டு இளையோரை ஈடுபடுத்துவதென்பது காலத்தால் போற்றுதற்குரியது.

வேதங்களுக்கு நிகராகப் போற்றப்படும் சைவத் திருமுறைகள் எவையெவை என்பதை இளையோர்கள் அறியவும் இதில் தோய்ந்திருக்கக்கூடிய ஆழமான ஆன்மநேயத்தைப் புரிந்து கொள்ளவும் செழுமைமிக்க வாழ்வியல் விழுமியங்களை தெரிந்துகொள்ளவும் இளைஞர்களை ஊக்கப்படுத்த இம்மாநாடு நடத்தப்படுவது காலத்தின் அவசியமாகும். இத்தகைய சிறப்புமிக்க திருமறைகளுள் ஒன்றான மாணிக்கவாசகரின் திருவாசகத்திற்கு கிறித்தவ பாதிரிமார்களும் தங்களது மனதைப் பறிகொடுத்ததுண்டு. தம் உயிர் பிரிந்த பின் தமது கல்லறையில் திருவாசக நூலோடு இட்டு புதைக்க வேண்டும் என்று தணியாத ஆவல்கொண்ட அருள்தந்தையார் சேசுசபைக்குரு இருதயம் இஞ்ஞாசியார் என்பவர் எனது ஆன்மீக குரு என்பதில் எனக்குப் பெருமிதம் உண்டு. **"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ"** என்னும் மாணிக்கவாசகரது பாடலாகட்டும், **"இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும்"** என்ற சம்பந்தர் பாடலாகட்டும், காரைக்காலம்மையாரது **"அற்புதத் திருவந்தாதியாகட்டும்"** படிக்குந்தோறும், நினைக்குந்தோறும், பாடிப் பரவுந்தோறும் ஆழ்ந்து தோய்ந்து அகவொளியைக் காண நமக்குள்ளான ஒரு தேடலுக்கு இட்டுச் செல்வதை உணரமுடிகின்றது.

இத்தகையத் தமிழ் வேதத்திற்கு உலகலாளாவியப் பெருவிழாவினை இரண்டாவது முறையாக எடுப்பது பெரிதும் போற்றுதற்குரியது. இந்த எண்ணத்தை லண்டன் மாநகரில் விதைத்த மலேசிய தமிழ்ச்சங்க பெருமக்களை வணங்குகின்றேன். இம் மாநாட்டின் நோக்கம் சிறப்பாக நடந்தேற உழைத்த ஆய்வறிஞர்கள், ஆன்மீகப் பெரியோர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட அன்பர்களுக்கு என் நெஞ்சாரந்த பாராட்டுக்களை வழங்கி மகிழ்கின்றேன்.

முனைவர் மார்கரெட் பாஸ்டின்
முதல்வர்
கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620001




With best wishes for a successful conference

**darren estate**

15 Kingston Road, Wimbledon, London SW19 1JX

Sales, Letting

&

Property Management

Tel: 020 8542 1717

Fax: 020 8543 4030

Website: www.darrenestate.com

Email: letting@darrenestate.com

# WARAN & COMPANY
## SOLICITORS

Established 1994

IMMIGRATION
HOUSING
LITIGATION
CONVEYANCING
FAMILY

Lancaster House 583 High Road
Tottenham London N17 6SB
Telephone 020 8808 2397
Facsimile 020 8801 8818
DX 58512 Tottenham 1
eMail waransolicitors@gmail.com

*"We aim to deliver an efficient and reliable service of the highest standard. Quality and competency are our priority"*

Scan this QR code
with your smartphone

**MR S K NAGESWARAN** LL.B, ATTORNEY AT LAW

**MRS P NAGESWARAN** LL.B (HONS), LL.M (LONDON)

ஓம் நவசிவாய



# சுவாமி பரமானந்தா

சத் தர்மா ஆசிரமம், கொல்லிமலை, நாமக்கல்
தமிழ் நாடு 637 411.

## வாழ்த்துக்கள்

2014ம் ஆண்டு செப்டம்பர் மாதம் லண்டனில் நடைபெறும் இரண்டாம் உலக தமிழ் முறை மற்றும் ஆராய்ச்சி மாநாடு சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்கி வாழ்த்துகிறேன்.

தமிழுக்கும் சைவ மதத்திற்கும் மாபெரும் பெருமை சேர்க்கும் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ள் அனைத்து நல்லிதயங்களுக்கும் எல்லாம் வல்ல சிவபெருமானின் அருள் என்றென்றும் கிடைக்கப் பெற்று சிறப்புற பெருவாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

இப்புண்ணிய காரியத்தில் பங்கேற்று சிவனின் அருளைப் பெற உள்ள லண்டன்வாழ் தமிழ் மக்களுக்கு வாழ்த்துக்கள்.

சுவாமி பரமானந்தா

இப்படிக்கு,

சுவாமி பரமானந்தா
சத் தர்மா ஆசிரமம், கொல்லிமலை, நாமக்கல்,
தமிழ் நாடு 637 411.

ஓம் நவசிவாய

Nalli® CHINNASAMI CHETTY
SILK CLOTH & PIECE-GOODS MERCHANTS
9, Nageswaran Road, (Opp. Panagal Park), T.Nagar, Chennai - 600 017. INDIA.
Phone : 44-2434 4115, 44-4260 4567 Fax : 44-2434 3062 E-mail: inquiry@nalli.com Website : www.nalli.com

# வாழ்த்துரை

*25. 8. 2014*

புலம்பெயர்ந்தபோது இலங்கைத் தமிழர்கள் தங்களுடன் தமிழ் மொழிக்கும் இனத்திற்கும் உரிய சமய, கலை, இலக்கிய, பண்பாட்டு அம்சங்களை எடுத்துச்சென்று புகுந்த நாடுகளில் அவற்றை பேணிப் பரப்புவதுடன் அடுத்த தலைமுறைக்கும் சரியாக அறிமுகப்படுத்துகிறார்கள் என்பதைப் பல வருடங்களாக அறிவேன். தென்னாடுடைய சிவன் எந்நாடுடைய சிவனாவது தங்களால் என்பது இறையருள்.

சைவத் திருமுறைகள் சம்பந்தமாக திரு. மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட இங்குள்ள அன்பர்களும் லண்டனில் உள்ள இலங்கைத் தமிழர்களும் செய்துவரும் சமயப் பணி சிறப்பானது என்பதை பத்திரிகையாளர் திரு. மகாலிங்க சிவம் மூலம் அறிந்திருக்கிறேன். தலைமுறை தலைமுறையாகப் பன்னிரு திருமுறைகள் எடுத்துச் செல்லப்படவேண்டும் என்பதில் தங்களுக்குள்ள அக்கறையைப் பாராட்டுகிறேன்.

இப்போது லண்டன் சிவன் கோயில் ட்ரஸ்ட் சார்பில் நடத்தும் பன்னிருதிருமுறை மாநாட்டில் கலந்துகொள்ளத் தமிழ்நாட்டிலிருந்து ஆதீனங்களையும் அறிஞர்களையும் அழைத்திருப்பது இங்குள்ள தமிழர்கள் அனைவரும் வியந்து பாராட்ட வேண்டிய பணி. என்னுடைய இப்போதைய தொழில் நிர்பந்தங்கள், முன்னதாக ஒப்புக்கொண்ட விழாக்கள் காரணமாக நான் தங்கள் மாநாட்டில் கலந்துகொள்ள இயலவில்லை. மாநாடு சிறப்பாக நடைபெற என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களின் அனைத்து முனைவுகளுக்கும் இறையருள் துணை நிற்பதாக.

நல்லி குப்புசாமி செட்டி

Our Speciality : SILK SAREES
First and the Finest




தரமான தங்கத்துக்கு சிறந்த இடம்

# லட்சுமி ஜீவல்ர்ஸ்

276 High Street North
London E12 6SA
UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3440

தமிழவை
Thamizhavai
14 Elmer Gardens Isleworth Middlesex TW7 6HB
Telephone: 07801383920
www.thamizhavai.com admin@thamizhavai.com

# திருமுறைகள் காட்டும் தமிழ்க் கவிமரபு

நிகழும் ஜெய வருடம் புரட்டாதித் திங்கள் (ஆங்கிலத்திற்கு செப்டம்பர் மாதம்) இலண்டனில் நிகழவுள்ள திருமுறை மாநாட்டினையொட்டி... 'திருமுறைகள் காட்டும் தமிழ்க் கவிமரபு' எனும் தலைப்பிலான இக்கட்டுரையைப் பதிவு செய்ய விழைகின்றேன்.

'தமிழ்க் கவிமரபு' என்ற சொற்றொடர் சுட்டி நிற்கும் கருப்பொருள்கள் இரண்டு. ஒன்று... தமிழ்க் கவிதையின் ஊற்றாக விளங்கும் தமிழ்க்கவித்துவ மரபு... மற்றையது அவ்வூற்றிலிருந்து ஆற்றுவெள்ளமாகத் தோற்றமெடுக்கும் தமிழ்க் கவிதைமரபு.

நவீன...சமகாலத்தில்...தமிழ்க்கவித்துவ மரபும் சரி... தமிழ்க்கவிமரபும் சரி...பற்பல விதமான சவால்களையும் சவுக்கடிகளையும் சந்தித்து வருவதை யாம் மறுப்பதற்கில்லை. அரச நிறுவனப் பாதுகாப்புகளுக்கும் பரிந்துரைகட்கும் அப்பாற்பட்ட நிலையில் உலகெலாம் ஓங்கிநிற்கும் தமிழுக்கும் தமிழருக்கும் விழுமியக் கட்டுப்பாடுகளையும் கவிதை இலக்கிய கட்டுக்கோப்புக்களையும் வரைவிலக்கணங்களையும் வழங்கக்கூடிய வல்லமையும் சக்தியும் எமது முன்னோர் நமக்களித்துச் சென்ற பனுவல்களுக்கேயுண்டென யான் முற்றுமுழுதாக நம்புகின்றேன்!

இதன்வழி....திருமுறைகள் தம்முள்ளே தாங்கிநிற்கின்ற தமிழ்க் கவிமரபு பற்றிய ஒரு சில செய்திகளை...ஈண்டு தர முயல்கிறேன்!

கவித்துவத்தின் களமாகக் கருதப்படுகின்ற கவியுள்ளத்தின் அடையாளங்களை இனங்காணுவதும்...அவ்வுள்ளத்தின் அறிவு..ஞானம்... உணர்வு.. அதிர்வு...அனுபவ வெளிப்பாடுகளின் தகைமைகளை கற்றுணர்வதும் இக்கட்டுரையிரையின் முதற்பகுதியாகும்.
அறிவு... ஆய்வின் வழி...இயக்கம் பெறுவது! அறிவில் மலர்வது தத்துவம் என்றும் உணர்வில் எழுவது அச்சம் என்றும்...கனிவது அச்சம் கடந்த பக்தி என்றும் கற்றுணர்ந்தோர் கருதுவர்.
அனுபவம்... அறிவையும் உணர்வையும் அதிர்வையும் கடந்து செல்கின்ற தன்மைத்தது எனலாம்.

அன்பு..அருளாகக் கனிவது போல்... அறிவு.. ஞானமாக ஒளிர்கிறது! அருளும்... ஞானமும் பக்தியாகப் பிரகாசிக்கிறது!

தத்துவ ஞானம்... பக்திநெறி இவற்றின் ஓசைப்பொருளாக... தமிழ் வெள்ளம் கவியுள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கிறது! இதன் காரணமாகவே... உயிர்ப்புள்ள கவிதை தனக்குரிய சந்த...தாள ஓசை...வரம்புகளோடு பிறக்கின்றன. திருமுறைகளையும் ஏனைய பக்திப் பனுவல்களையும் சமய குரவர்களும் ஞானியரும் எழுதியதாக யாம் கூறுவதற்கில்லை! பண்ணிசையோடு...பாடிப் பரவினரென்றே நம்பக்கிடக்கிறது!

'அகத்தினிலே ஒளியுண்டானால் வாக்கினில் ஒளியுண்டாகும்' என்பான் எங்கள் கவிஞானி. புலவனின் அகவொளியே கவிதையின் ஆக்க ஒளியென்பது மறுக்கமுடியாத ஒரு கூற்றெனலாம். காலங்கடந்து நிற்கும் வல்லமை கொண்ட கவிதைகளைத் தருகின்ற சக்தி தெய்வ ஞானம் வாய்த்தவர்கட்கே வந்தமையும் என்பதை வரலாறு காட்டி நிற்கிறது.
வாக்கிற்கும் வார்த்தைக்கும் சக்தியுண்டென்பது நம்முன்னோரின் நம்பிக்கை. வாய்மைவழி பிறக்கின்ற அகத் தூய்மை சத்தியத் தன்மையுள்ள சக்திதருகின்ற வாக்கினையும் வார்த்தைகளையும் தோற்றுவிக்கின்றன என நம்ப முடிகிறது.

கவித்துவத்தின் வல்லமையைத் தத்துவக்கண்ணோடு பார்த்தல் அறிவுடைமையாக இருக்கமுடியாது! மாபெரும் காவியங்களைப் படைத்த பெரும் புலவர்கள் எல்லாம் தத்துவஞானியரல்லர்.

இதனாற்றான்...சங்கப்புலவர்களின் கவிதைகளாயினும் சரி... தெய்வப் புலவர்களின் பக்திப்பாடற் திரவியங்களாயினும் சரி...இன்றும் கேட்போரையும் படிப்போரையும் உயிர் வரையூடுருவிச்சென்று உட்புகுந்து இயக்கி இறையனுபவத்தையும் கவியனுபவத்தையும் ஏற்படுத்துவதை யாம் கண்டுகொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது.

இனி யாம் கவிதை மரபிற்கு வருவோமாயின் தொல்காப்பியச் செய்யுளியல் முதல் யாப்பிலக்கண மரபுகள் அனைத்தையும் தம்முள்ளே தாங்கி நிற்கின்ற பெருமை தமிழ்த் திருமுறைகளுக்கேயுண்டென்பதை யாம் மறுப்பதற்கில்லை!

வெண்பாவா? விருத்தப்பாவா? அகவற்பாவா? ஆசிரியமா? கலித்துறையா? அத்தனை பாக்களுக்கான கவிதைமரபுகளையும் காட்டிநிற்பதோடன்றிக் கட்டிக்காத்து நின்று நாளைய சந்ததிக்கும் கையளிக்கவல்ல இறைமையைக்கொண்டவை திருமுறைகளேயெனின் அது மிகையாகாது!

இத்தனைக்கும் மேலாகத் தமிழர் விழுமியங்களையும் வாழ்வியல் நம்பிக்கைகளையும் சைவ சித்தாந்தத் தத்துவ விளக்கங்களையும் சித்தமலம் நீங்கிச் சிவமாகும் திருநெறிகளையும் செப்பிநிற்கும் சிறப்புக்குரியவையும் திருமுறைகளே என்று தீர்க்கமாகத் துணிந்துரைக்கமுடியும்.

மேலாக.. உலகமேம்பாட்டுக்கான.. உலக ஒருமைப்பாட்டிற்கான.. வழிகாட்டலையும் வழங்கி.. வையத்துள் வாழ்வாங்கு வாழவும்... மானிடப் பிறவியின் போதே... மாதேவன் பெருங்கழற்பேற்றினையனுபவிக்கும் பேரானந்த வாழ்வு பெறவும் தெய்வநெறி காட்டும் தேன்தமிழோசை... திருமறையோசையே என்று தெளிவு பெற இக்கட்டுரை அடியெடுத்துக் கொடுக்கிறது..

மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுக்களுக்கான சான்றுகளும் கவிவரிகளும் தொடர்ந்து சமர்ப்பிக்கப்படவுள்ள பிரதான கட்டுரையின் உள்ளடக்கத்தில் நிறுவப்படவுள்ளன!
வாழிய நந்தமிழ்! வளர்க தமிழ்த் தொண்டு!

அன்புடன்

புலவர் நல்லதம்பி சிவநாதன்
10-08-2014

ஆன்றோர் அறிவும் சான்றோர் சால்பும்
தோன்றாத் துணையாய்க் கொண்டது அவையே!

Love is God

# INTERNATIONAL HINDU YOUTH FORUM LONDON

14 Norton Road, Wembley, HA0 4RF, Mobile: 07411354315
e-mail: kajanan2008@gmail.com

Patrons :

Sivasri: Vasanthan Kurukkal

Sivasri: Kamalanatha Kurukkal

Thiru: K. V. Kanesamoorthy

Thiru: S. Sri Rangan

Thiru: S. Karunai Lingam

Committee Members:

**Chairman:**
S. Ganesh Kumar

**Vice Chairman:**
S. Sripathaman

**Secretary:**
B. Paranthaman

**Joint Secretary:**
J. Gajinaath

**Treasurer:**
Ms K. Nerojee

**Joint Treasurer:**
Missas Ajitha

இரண்டாம் உலக சைவத்திருமுறை மாநாடு சிறப்புற வாழ்த்துகின்றோம்

சைவ சமய நூல்களில் சிறப்பு மிக்க நூலாக திருமுறைகள் விளங்குகின்றன " திரு "என்பது சிறப்புடையது "முறை "என்பது ஒழுங்கு என பொருள் பட்ட நிலையில் "ஒழுங்குபடுத்தப்பட்ட சிறப்புடைய பாடல்களின் தொகுப்பே திருமுறைகளாகும்" அத்தகைய திருமுறைகள் சைவசமயத்தின் சிறப்பை வெளிப்படுத்துவது மட்டுமன்றி சைவசமயத்தின் பொக்கிஷமாகவும் விளங்குகின்றது.

"மனிதன் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டுபவை திருமுறைகள் "அத்திருமுறைகளை இறை பக்தியுடன் மனதார உருகி பாடுகின்றபோது நம்மை பீடித்திருக்கின்ற கொடிய துன்பங்கள் எல்லாம் நீங்கிவிடும்.அத்தகைய திருமுறைகளின் பெருமையினை பறை சாற்றும் வகையில் லண்டன் மாநகரிலே இடம் பெறுகின்ற இரண்டாம் உலக சைவத்திருமுறை மாநாடு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

"நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம், வான்பற்றி நின்ற
மறைப்பொருள் சொல்லிடின், ஊன்பற்றி நின்ற உணர்வுறும் மந்திரம்,
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே."

எஸ்.கணேஸ்குமார்

சர்வதேச இந்து இளைஞர் பேரவை
லண்டன்

# திருமுறைகளில் பிள்ளையார் தத்துவம்

சைவப்புலவர்,சைவ சித்தாந்த பண்டிதர் .சிவஸ்ரீ பா.வசந்தக்குருக்கள் B.A(Horns)
கற்பகபதி கற்பக விநாயகர் கோவில் வோல்தம்ஸ்ரோ

சைவ சமயத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதர்க்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு கிடைத்த அருட் களஞ்சியம் பன்னிரு திருமுறைகள். இவை இறைவன் புகழை அல்லது அற்புதங்களை திருத்தல மகிமைகளை. மட்டும் பாடவில்லை. மனித வாழ்வில் மேற்கொள்ளவேண்டிய அறம் சார்ந்த சிந்தனைகள் வழிபாடு செய்ய வேண்டிய முறைகள் துன்பங்களில் இருந்து விடுபடும் நிலை,போன்ற பல செய்திகளை அருள்வாக்காக தருகின்றன.

சிவனே எமது மூலப் பரம்பொருள் என்றாலும் பல்வேறு தெய்வ வழிபாடு எமக்கு உண்டு. ஏகம்சத் விப்ரா பகுதா வதந்தி என்று வேதம் சொல்வதும் யாதொரு தெய்வங்கண்டீர். அத்தெய்வமாகி மாதொருபாகனார் வருவார் என்று சித்தாந்தம் கூறுவதும் தெய்வங்கள் பலவற்றை போற்றும் மரபு உண்டு. புலம்பெயர் நாடுகளில் பல கோவில்கள் உருவாகின்றன. பிள்ளையார் கோவில்கள் முருகன் கோவில்கள் துர்க்கையம்மன் கோவில்கள் சிவன் கோவில்கள் ஐயப்பன் கோவில்கள் ஆஞ்சநேயர் கோவில் இப்படிப் பல.. இன்னும் சொல்லப் போனால் பிள்ளையார் கோவில்கள் அதிகம் உண்டு. எல்லாக் கோவில்களிலும் பிள்ளையார் உண்டு. குறிப்பாக இங்கிலாந்தில் லண்டனில் மட்டும் ஐந்து பிள்ளையார் கோவில்கள். லண்டனுக்கு வெளியில் மூன்று பிள்ளையார் கோவில்கள். ஏறக்குறைய எட்டுக் கோவிலுக்கு மேல் பிள்ளையார் கோவில்கள் உண்டு. மேலை நாடுகளிலும் தமிழ் நாடு ஈழம் போன்ற நாடுகளிலும் மட்டுமன்றி வீ டுகளிலும் பிள்ளையார் வழிபாடு மிக அதிகம். அது மாத்திரமின்றி கல்யாண அழைப்பிதழ்கள் பரிசுப் பொருட்கள் போன்ற பல சந்தர்ப்பங்களில் பிள்ளையார் வருகிறார்.

எந்த ஒரு கவி பாடினாலும் சமயச் சார்பாக இருக்கும்போது பிள்ளையார்க்கு காப்பு பாடுகிறார்கள். திருமுறைகளுக்கு பின் வந்த அருளாளர்கள் சைவ சித்தாந்திகள் எல்லோரும் பிள்ளையார் போற்றுதலை செய்துள்ளார்கள்.

திருமுறைகளை கண்டு பிடிப்பதில் பொல்லாப் பிள்ளையார் உதவினார் என்பது வரலாறு. மகாபாரதம் எழுதியது முதல் பல இடங்களில் பிள்ளையாரை தொடர்புபடுத்துகிறார்கள். வள்ளி கல்யாணம் அவ்வையாருக்கு அருளியது. சிவன் தேர் அச்சு முறித்தது. விஷ்ணுக்கு அருளியது ராவணனுக்கு அனுக்கிரகம் செய்தார். அகத்தியர் இந்திரன் போன்றவர்கள் அருள் பெற்றது இவ்வாறு பல உண்டு.

புராணங்களில் பல இடங்களில் வியந்து போற்றப்படுவதுடன் பார்க்கவ புராணம் பிள்ளையார் பற்றிய புராணமாக அமைந்துள்ளது. வேதங்களில் ஜேஷ்ட ராஜா அதாவது மூத்தவன் என்ற பொருளில் துதிக்கப்படுகிறார். உபநிஷத்தில் கணபதி உபநிடதம் உண்டு. ஆகமங்களில் விநாயகரை குட்டி கும்பிட்டு வழிபாடாற்ற வேண்டும் என்றும் எவ்வழிபாடானாலும் விநாயக வழிபாட்டுடன் ஆரம்பிக்க வேண்டும் என்றும் கட்டளை உண்டு.

இவ்வாறு வேதம், புராணம், இதிகாசம், உபநிடதம், ஆகமம் சித்தாந்தம் அருட்கவிகள் போன்ற எல்லா துதி நூல்களிலும் வந்த பிள்ளையார் திருமுறைகளிலும் வந்துள்ளார் என்பதால் விநாயக வழிபாட்டின் அவசியம் அறிவுறுத்தப்படுகிறது.

சைவத்திருமுறைகள் சிவனை குறிப்பிடும் அதேவேளை பிள்ளையார் முருகன் அம்மன் விஷ்ணு பிரம்மா துர்க்கை லட்சுமி சரஸ்வதி தட்சணாமூர்த்தி வைரவர் ரபத்திரர் ஐயப்பன் நடராஜர் போன்ற தெய்வ மூர்த்தங்களையும் சுட்டிக்காட்டியுள்ளன. சம்பந்த சுவாமிகள் கோளறு பதிகத்தில் திருமகள் கலையதூர்தி செயமாது என துர்கை லட்சுமி சரஸ்வதி தெய்வங்களை கூறுகிறார் அத்துடன் காளி பற்றிய குறிப்பும் உண்டு மூன்றாம் திருமுறையில் வல்லை வரு காளியை வகுத்து என்று சக்தி வடிவங்களை கூறுகிறார். பைரவர் பற்றி அப்பர் சுவாமிகள் தரித்ததோர் கோலகால பயிரவனாகி என்கிறார். தக்கன் வேள்வி தகர்த்தவன் என வீரபத்திரரையும் குறிப்பிடுகிறார். மேலும் ஐயப்பனை சாஸ்தா என்று கூறுவோம். அப்பர் சுவாமிகள் சாத்தன் என்று ஆறாம் திருமுறையில் சாத்தனை மகனாய்க் கொண்டார் என்கிறார். பண்டு நால்வருக்கு அறமுரைத்தருளி என்ற பாடலால் தட்சணாமூர்த்தி வடிவம் புகழப்படுகிறது. மணிவாசகரால் நடராஜ வடிவம் போற்றப்பட்டது. எமது சைவ ஆலயங்களில் அருள் அலைகளும் கூடும் என்பதனையே திருமுறைகளும் கூறுகின்றன. இதனாலேயே நாயன்மார்களும் இத் தெய்வ சக்திகளின் பெயர்களை பாடியுள்ளனர்.

பின்வரும் திருமுறைகளில் விநாயகர் பற்றிய பாடல்களை அறியலாம். பலபாடல்கள் இருந்தாலும் விரிவஞ்சி சில பாடல்கள் தரப்படுகிறது. திருஞானசம்பந்தர் திருக்கழுமலம் தலத்தில் பாடிய பாடலில் பிடியதுவாய் ஒற்றைச்சேர் முற்றற் கொம்புடைத்தடக்கை என பிள்ளையர் ஒரு தந்தத்துடன் வீற்றிருக்கும் காட்சியை முதலாம் திருமுறையில் காட்டுகிறார். இரண்டாம் திருமுறையில் கரியின் மாமுகமுடை கணபதி. எனவும் அருளினார்.

அப்பர் சுவாமிகள் கலமலக் கிட்டுத்திரியும் கணபதி என்னும் களிறும் என நான்காம் திருமுறை யிலும் கைவேழ முகத்தானைப் படைத்தார் போலும் என ஐந்தாம் திருமுறையிலும் மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன் எனவும், கோவாய இந்திரனுள் விட்டாராகக் குமரனும் விநாயகனும் என ஆறாம் திருமுறையிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எண்ணிலியுண் பெருவயிறன் கணபதி ஒன்றறியான் என்று விநாயகர் பக்ஷன பிரியர் பெருவயிறு உடையவர் என்று ஏழாம் திருமுறையில் அருளுகிறார் எட்டாம் திருமுறையில் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் அச்சு முறிந்தது என்று உந்தீபற என மறைமுகமாக கூறுகிறார். ஒன்பதாம் திருமுறையில் அனகனே குமர விநாயக ஜனக என்று சிவனைப் போற்றும் திருவிசைப்பா உண்டு. ஐந்து கரத்தனை என பத்தாம் திருமுறையும் பதினோராம் திருமுறையில் பல பாடல்களும் முக்கியமாக விநாயகப் பெருமான் தாய் தந்தையை சுற்றிவந்து மாம்பழம் வேண்டிய பாடல் கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே வம்பனைய மாங்கனியை நாரையூர் நம்பனையே தன்னவலம் செய்து கொளும்தாழ் தடக்கை யாயென் நோய் பின்னவலம் செய்வதன்னோ பேசு என வினாயகரின் பெருமை பேசப்படுவதுடன் எம்மை வந்து தாக்கி அவலம் செய்யும் முன்வினைகளை தீர்க்க வேண்டும் என்றும் வேண்டப்படுகிறது. திருமுறைகளில் அநேகமான இடங்களில் பிள்ளையாரையும் முருகனையும் இணைத்துப் போற்றப்படுகிறது. இன்று பல ஆலயங்களில் மாம்பழத் திருவிழா பிரசித்தம்.

பன்னிரண்டாம் திருமுறையில் தடக்கை ஐந்துடை தாழ்செவி நீள்முடிக் கடக்களிற்றினை என்று சேக்கிழாரும் போற்றுகிறார்.

விநாயக வழிபாடு மெய்ஞான நிலையில் போற்றப்பட்டாலும் விஞ்ஞான கோட்பாடுகளும் அடங்கி யுள்ளது. மக்களின் வாழ்க்கை முறையும் அடங்கியுள்ளது.

யானைமுகம் அற்புத தத்துவம். அறிவுக்கும் ஆற்றலுக்கும் நீண்ட ஆயுளுக்கும் உரியது. யானை ஞாபக சக்தி அதிகம் கொண்ட தெய்வீக சாத்வீக மிருகம். நிலத்தில் ஊசி விழுந்தாலும் எடுக்கும். பெரிய பனை மரத்தையும் முறிக்கும் ஆற்றல் கொண்டது. அதே முகத்துடன் விளங்கும் கடவுள் விநாயகப் பெருமானை தொழுதால் நல்லறிவு ஆற்றல் நீண்ட ஆயுள் பெறலாம். இவ்வளவு ஆற்றல் கொண்ட யானை தாவர உணவு உண்ணும் ஜீவன். சைவ மக்களுக்கும் சைவமாக இருக்க வேண்டும். அதுவும் வழிபாட்டுக் காலங்களில் மிகவும் அவசியம் என்பதை பிள்ளையார் வழிபாடு உணர்த்துகிறது.

விநாயகப் பெருமான் தந்தம் ஒன்றுடன் இருப்பது திருமுறைகளில் கூறப்பட்டுள்ளது. பாரதம் எழுத கயமுக அசுரனைக் கொல்ல தந்தம் பாவித்தார் ஒன்று. அறிவுக்கும் மறுமுறை தீய சக்தியின் அழிவுக்கும் பயன்படுத்தப்பட்டது. நல்லது வளர வேணும். தீயது அழிய வேண்டும். அப்படி வாழ்ந்தால் மகிழ்ச்சி உண்டு. அதுதான் மோதகம். மோதகம் என்றால் சந்தோசம். ஆற்றல் என்றால் வல்லமை. இதனால் வல்லபா சக்தி என்று விநாயகப்பெருமானுடன் இணைத்துக் கூறுவார்கள். அறிவுக்கு புத்தி அவசியம். நல்ல புத்தி மூலம் சித்தி அடையலாம். அதனால் சித்தி புத்தி என்பவையும் விநாயகருடன் இணைக்கப்பட்டன. தந்தம் யானைக்கு அழகு அதனை உடைப்பது தியாகம் ஒவ்வொரு மனிதனுக்கும் மற்றவனுக்கு ஏதொவொரு வகையில் உதவ வேண்டும் என்ற தியாக உணர்வும் செயலும் வேண்டும்.

பெரிய வாய் இருந்தாலும் தனது கையால் பொத்தி அடக்கம் அவசியம் என்பதையும் விநாயகர் காட்டுகிறார். பெரிய வயிறு உயிர்களின் வாழ்க்கைக்கு உணவு அவசியம் என்பதைக் குறிப்பிடுகிறது. யானை பெரிய மிருகமாக இருந்தாலும் கட்டுப்பாடு உடையது. எனவே எமக்கு கட்டுப்பாடு அடக்கம் என்பது அவசியம். அத்துடன் அறிவுடனும் ஆற்றலுடனும் செயற்பட்டால் வெற்றி நிச்சயம் என்பதை சொல்வதே விநாயகர் வழிபாடு.

நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலை ஞானம் கற்கும்
சரக்கன்று காண் என்றார் உமாபதி சிவச்சார்யார்

ஞானக் கொழுந்தினை புந்தியில் வைப்போம் என்றார் திருமூலர்

எனவே விநாயகர் கணபதி என்ற சொற்களுடன் திருமுறைகளில் போற்றப்படும் பிள்ளையாரைப் போற்றுவோம் பிணி துடைப்போம்.

திருச்சிற்றம்பலம்

# 2வது உலகத்திருமுறைப் பெருவிழாவும் ஆய்வு மாநாடும்

**1ம் நாள் நிகழ்வுகள் (வெள்ளி 19 செப்டெம்பர் 2014)**
**இடம்: இலண்டன் சிவன் கோவில்**

காலை நிகழ்வுகள்

| | |
|---|---|
| 08.30 - 08.50 | தொடக்கப் பூசை இலண்டன் சிவன் கோவில் |
| 08.50 - 09.00 | நால்வர் திருவுருவங்களைச் சிவன் நிலையத்திற்குக் கொண்டு செல்லல் |
| 09.00 - 09.05 | ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கான பூசை இலண்டன் சிவன் கோயில் தலைமைக்குரு மகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் நடைபெறும் |
| 09.05 - 09.10 | மங்கள விளக்கேற்றல் |
| 09.10 - 09.15 | திருமுறைக்கொடியினை ஏற்றல் |
| 09.15 - 09.35 | பண்ணிசை சிவன் கோயில் ஓதுவார் திரு தண்டபாணி தேசிகரும் மாணவர்களும் |
| 09.35 - 09.40 | ஆசியுரை சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் இலண்டன் சிவன் கோயில் தலைமைக்குருக்கள் |
| 09.40 - 09.50 | வரவேற்புரை – மருத்துவர் ச.ஜெயநாதன் / 'செந்நெறிச் செம்மல்' சூ.யோ. பற்றிமாகரன் (திருமுறை முன்னெடுப்புக்குழு இணைப்பாளர்கள்) |
| 09.50 - 09.55 | மாநாட்டுத் தொடக்கவுரை – முனைவர் மு.சிறிஸ்கந்தராசா, தலைவர் இலண்டன் சிவன் கோவில் அறக்கட்டளை, தலைவர் திருமுறை முன்னெடுப்புக் குழு. |
| 09.55 - 10.05 | ஆசியுரை – திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 24வது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் |
| 10.05 – 10.15 | ஆசியுரை திருக்கைலாய பரம்பரை தருமபுரி ஆதீன கட்டளை, குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் |
| 10.15 – 10.35 | சிறப்புப் பேச்சாளர் ஆர். நடராஜன் |
| 10.35 – 10.55 | தேநீர் நேரம் |
| 10.55 – 11.15 | பண்ணிசை செல்வி மாதுங்கி உதயக்குமார் மற்றும் செல்வி சாம்பவி உதயக்குமார். |
| 11.15 – 11.40 | சிறப்புப் பேச்சாளர் முனைவர் கே. பி. நல்லசிவன் |
| 11.40 – 12.00 | சிறப்புப் பேச்சாளர் திரு மணிவாசகம் |

மதிய நிகழ்வுகள்

| | |
|---|---|
| 12.00 – 12.40 | முதன்மைப்பேச்சு - திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 24வது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் |
| 12.40 – 13.40 | மதிய உணவு |
| 13.40 – 14.00 | இரு ஆய்வுக்கட்டுரைகள் வாசிப்பு |
| 14.00 – 14.25 | சிறப்புப் பேச்சாளர் முனைவர் ஆர் நடராஜன் |
| 14.25 – 14.50 | முனைவர் பி. மருதநாயகம் |
| 14.50 – 15.15 | சிறப்புப் பேச்சாளர் முனைவர் கே. சிவக்குமார் |
| 15.15 – 15.45 | மூன்று ஆய்வுரைகள் தமிழில் |
| 15.45 – 16.15 | பண்ணிசை – சிதம்பரம் ஓதுவார் பொன் முத்துக்குமாரன் |
| 16.15 – 16.30 | முடிவுரைகள் மருத்துவர் எஸ். ராஜசுந்தரம் / திரு சூ.யோ. பற்றிமாகரன் நிகழ்ச்சிகள் |

ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் கந்தையா சிவக்குமார்.

அறிவிப்பாளர் திரு விமல் சொக்கநாதன்

## 2வது நாள் நிகழ்வுகள் (சனிக்கிழமை 20ம் திகதி செப்டெம்பர் 2014)
### இடம் : செட்ஜ்ஹில் (Sedgehill) பள்ளியின் கேட்போர் கூடம்

காலை நிகழ்வுகள்

| | |
|---|---|
| 9.00 - 9.10 | நால்வர் திருவுருவங்களைச் செட்ஸ்ஹில் பள்ளி மண்டபத்திற்குக் கொண்டு செல்லல் |
| 9.10 - 9.15 | மங்கள விளக்கேற்றல் |
| 9.15 - 9.20 | திருமுறைக்கொடியினை ஏற்றல் |
| 9.20 - 9.40 | பண்ணிசை ஓதுவார் திரு தண்டபாணி தேசிகரும் ஸ்ரீகணபதி ஆலய மாணவர்களும் |
| 9.40 - 9.45 | வரவேற்புரை – மருத்துவர் எஸ். ராஜசுந்தரம் கட்டிடம் / நிதி உப குழுவின் தலைவர் இலண்டன் சிவன் கோயில் மற்றும் திருமுறை முன்னெடுப்புக்குழுவின் துணைத்தலைவர்)) |
| 9.45 – 9.55 | வரவேற்புரை–டாத்தோ ஆர். எஸ். மோகன் சான், தலைவர், மலேசிய இந்து சங்கம். |
| 9.55 – 10.00 | மாநாட்டுத் தொடக்கவுரை – முனைவர் து. சிறிஸ்கந்தராஜா, தலைவர் இலண்டன் சிவன் கோவில் அறக்கட்டளை மற்றும் தலைவர் திருமுறை முன்னெடுப்புக் குழு |
| 10.00 - 10.10 | ஆசியுரை – கைலாயமாமுனிவர் நாகநாதசிவம் குருக்கள், தலைமைக்குருக்கள் இலண்டன் முருகன் கோவில் |
| 10.10 – 10.20 | மாநாட்டு ஆய்வரங்கக் கட்டுரைகள் தொகுப்புக் குறித்து மீள்பார்வை – முனைவர் பி. மருதநாயகம் |
| 10.20 - 10.50 | ஆசியும் முதன்மை உரையும் திருக்கைலாய பரம்பரை தருமபுரி ஆதீன கட்டளை, குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் |
| 10.50 – 11.10 | சிதம்பர நடராஜா திருக்கோயில் காணொளிக் காட்சிகள் அறிமுகம் |
| 11.10 – 11.30 | தேநீர் நேரம் |
| 11.30 – 12.00 | பரதநாட்டியம் -திருவாதிரைத் திருநாள் - சைவமுன்னேற்றச்சங்க நால்வர் தமிழ் அக்கடெமி |
| 12.00 – 12.20 | சிறப்புப் பேச்சாளர் முனைவர் நடராஜன் |
| 12.20 – 12.40 | திருவாவடுதுறை ஆதீனத்தின் சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தின் பயிற்சியினை முடித்த மாணவர்களுக்கான "சைவசித்தாந்த இரத்தினம்" பட்டமளிப்பினைத் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 24வது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளுவார். |
| 12.40 – 13.40 | மதிய உணவு |
| 13.40 – 14.00 | பண்ணிசை – செல்வி ஆர்த்தி நாகரெட்னம் மற்றும் செல்வி சுந்தரம்மா மகேசுவரன். ஸ்ரீகணபதி கோயில். |
| 14.00 – 14.20 | திருக்கேதீஸ்வரம் ஆலயம் காணொளிக் காட்சி அறிமுகம் |
| 14.20 – 14.30 | தமிழில் பேச்சு – திரு. கனேஸ்குமார் |
| 14.30 – 14.40 | ஆங்கிலத்தில் பேச்சு – திரு குமரன் சிறிஸ்கந்தராசா |
| 14.40 – 15.00 | முனைவர் இறபேல் உரை |
| 15.00 - 15.20 | தேநீர் நேரம் |

(இளையவர்களுக்கான சமாந்திர நிகழ்ச்சிகள் 15.10க்கு ஆரம்பம்)

| | |
|---|---|
| 15.20 – 15.40 | பண்ணிசை கே. குமரேசன் திருமுறைச் சங்கம் இலண்டன். |
| 15.40 – 15.55 | வசந்தன் குருக்கள் தலைமைக்குரு ஸ்ரீகற்பக விநாயகர் கோயில், வோல்த்தம்ஸ்டோ, |
| 15.55 – 16.05 | ஆய்வுக்கட்டுரை தமிழில் |
| 16.05 - 16.15 | ஆய்வுக்கட்டுரை தமிழில் |
| 16.15 – 16.40 | சிறப்புப் பேச்சு முனைவர் கே. பி. நல்லசிவன் |
| 16.40 – 17.05 | சிறப்புப் பேச்சு பேராசிரியர் முனைவர் பி. மருதநாயகம் |
| 17.05 – 17.30 | சிறப்புப் பேச்சு செந்தமிழ் அரசு கே. சிவக்குமார் |
| 17.30 – 18.00 | பண்ணிசை – சிதம்பரம் பொன் முத்துக்குமார ஓதுவார் |
| 18.00 – 18.30 | பரதநாட்டியம் திருஞானசம்பந்தர் அபிநயநாட்டியம் ஸ்ரீமத் சுஜாதா சதீஸ் இலண்டன் சிவன் கோயில் பள்ளி |

18.30 - 18.45 நிறைவுரைக் குறிப்புக்கள் அறிவிப்புக்கள், மருத்துவர் எஸ்.ராஜசுந்தரம் / மருத்துவர் க.சிவக்குமார் / மருத்துவர் ச. ஜெயநாதன்

18.45 - 19.30 இரவுணவு

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் கந்தையா சிவக்குமார்

அறிவிப்பாளர் திரு விமல் சொக்கநாதன்

## 3வது நாள் நிகழ்வுகள்
## (ஞாயிற்றுக்கிழமை 21ம் திகதி செப்டெம்பர் 2014)
## இடம் : செட்ஜ்ஹில் (Sedgehill) பள்ளியின் கேட்போர் கூடம்

காலை நிகழ்வுகள்

09.00 - 09.05 மங்கள விளக்கேற்றல்

09.05 - 09.10 திருமுறைக்கொடியினை ஏற்றல்

09.10 - 09.30 பண்ணிசை ஓதுவார் திரு தண்டபாணி தேசிகர் அவர்களும் ஓதுவார் சிதம்பரம் பொன் முத்துக்குமாரன் அவர்களும்

09.30 - 09.40 வரவேற்புரை – மருத்துவர் ச. ஜெயநாதன் / 'செந்நெறிச் செம்மல்' சூ.யோ பற்றிமாகரன் (திருமுறை முன்னெடுப்புக்குழுவின் இணைப்பாளர்கள்)

09.40 - 09.45 வரவேற்புரை – திரு. வீ. கந்தசுவாமி ANS, PJK உபதலைவர், மலேசிய இந்து சங்கம்.

09.45 - 09.50 மாநாட்டுத் தொடக்கவுரை – மருத்துவர் எஸ். ராஜசுந்தரம் கட்டிடம் / நிதி உப குழுவின் தலைவர் இலண்டன் சிவன் கோவில் அறக்கட்டளை மற்றும் தலைவர் திருமுறை முன்னெடுப்புக் குழு

9.50 - 10.00 ஆசியுரை சிவஸ்ரீ கமலநாத குருக்கள், தலைமைக்குரு, நாகபூசணி அம்மன் கோவில். எட்மண்டன், இலண்டன்

10.00 – 10.30 ஆசியும் முதன்மை உரையும் திருக்கைலாய பரம்பரை தருமபுரி ஆதீன கட்டளை, குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்

10.30 - 10.50 திருவண்ணாமலைக் கோயில் காணொளிக்காட்சிகள் அறிமுகம்

10.50 – 11.10 தேநீர் நேரம்

11.10 – 11.35 சிறப்பு ஆங்கிலப் பேச்சு பேராசிரியர் முனைவர் பி. மருதநாயகம்

11.35 – 11.50 பண்ணிசை கீர்த்தனா வசந்தன் குருக்கள், லலனா வசந்தன் குருக்கள்

11.50 – 12.05 பண்ணிசை, செல்வன் கபிலன் மருதராஜா செல்வி சுருதி சுரேசன்

12.05 – 12.35 பரதநாட்டியம் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் - வன்தொண்டர் வழக்கு - ஸ்ரீமீனாட்சி பரதநாட்டியப் பள்ளியின் இயக்குநர் திருமதி சாந்தா அன்னபூரணி அவர்களின் மாணவிகள் வழங்குகின்றனர்.

12.35 – 13.35 மதிய உணவு

13.35 – 14.05 பண்ணிசை – மருத்துவர் சரவணன் ஜெயநாதன் .

14.05 – 14.25 சிறப்புப் பேச்சு மருத்துவர் ஆர் லம்போதரன்

14.25 – 14.35 கவிஞர் வாழ்த்துரை புலவர் நல்லதம்பி சிவநாதன்

14.35 – 14.55 "திருக்கோனேஸ்வரம்" ஆலயம் காணொளிக் காட்சி அறிமுகம்

14.55 – 15.15 தேநீர் நேரம் (இளையவர்களுக்கான நிகழ்ச்சிகள் 15.10க்கு ஆரம்பம்)

15.15 – 15.45 பரதநாட்டியம் திருநாவுக்கரசர், நாட்டிய அபிநயம் இலண்டன் தமிழ் நிலையத்தின் ஸ்ரீமத் உமாசந்திர தேவா வழங்குகின்றார்.

15.45 – 15.55 ஆய்வுக்கட்டுரை தமிழில்

15.55 – 16.15 பண்ணிசை, சைவமுன்னேற்றச் சங்க நால்வர் அக்கடெமி மாணவர்கள்

16.15 – 16.35 சிறப்புப் பேச்சு திரு மணிவாசகம்

16.35 - 16.55 சிறப்புப் பேச்சு முனைவர் நடராஜன்

16.55 – 17.25 பண்ணிசை – சிதம்பரம் ஓதுவார் பொன் முத்துக்குமாரன் அவர்கள்

17.25 – 17.45 நிறைவுரைக் குறிப்புக்கள் (திருமுறை முன்னெடுப்புக்குழுவினர் உடன் ஆதீனச் சுவாமிகளும் சிறப்புப் பேச்சாளர்களும் பங்கேற்பர். கந்தபுராணக்காப்புச் செய்யுள் உடன் உலகத் திருமுறைப் பெருவிழா 2014 நிறைவு பெறும்)

17.45 - 18.30 இரவுணவு

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் கந்தையா சிவக்குமார்
அறிவிப்பாளர் திரு விமல் சொக்கநாதன்

இளையவர்களுக்கான சமாந்திர நிகழ்ச்சிகள்
(சனிக்கிழமை 20ம் திகதியும் ஞாயிறு 21ம் திகதியும் இடம்பெறுவன)

நிகழ்வுகளை நடாத்தும் புலமையாளர்கள்

பேராசிரியர் பி. மருதநாயகம், முனைவர் ஆர். நடராஜன், மருத்துவர் லம்போதரன், முனைவர் பி. கே. நல்லசிவன்

20ம் திகதி செப்டெம்பர் 2014 சனிக்கிழமைக்குரிய தலைப்புக்கள்

அமர்வு 1: மதியம் 15.10 மணி முதல் 16.30 மணிவரை

1) திருமுறையின் அடிப்படைகள் அறிமுகம் (Introduction and Basics of Thirumurai)
2) திருமுறைகளும் கடவுளின் இருக்கையும் (Thirumurai and the Existence of God)

அமர்வு 2: மதியம் 16.40 மணி முதல் 18.00 மணிவரை

3) திருமுறைகளும் பெண்களின் வகிர்பாகமும் (Thirumurai and the Role of Women)
4) திருமுறைகளும் விஞ்ஞானக் கோட்பாடுகளும் (Thirumurai and Scientific Concepts)

21ம் திகதி செப்டெம்பர் 2014 ஞாயிற்றுக்கிழமைக்குரிய தலைப்புக்கள்

அமர்வு 3: மதியம் 15.10 மணி முதல் 16.30 மணிவரை

5) திருமுறைகளும் நாங்கள் எப்படி வாழவேண்டும் என்பதும் (Thirumurai and How we are Expected to Live)
6) திருமுறைகளும் நுண்கலைகளும் (Thirumurai and the Fine Arts)

அமர்வு 4: மதியம் 16.40 மணி முதல் 18.00 மணிவரை

7) Thirumurai and Suffering
8) Thirumurai and the Concept of why We are Here

- ஓவ்வொரு அமர்வும் 1மணி 20 நிமிடங்கள் வரை இடம்பெறும் (Note each session will last for 1hr 20min)

திருச்சிற்றம்பலம்

# 2nd World Thirumurai Festival & Conference 2014 Programme

Day 1 (Friday 19th September 2014)
Venue : London Sivan Temple

| | |
|---|---|
| 8.30 am - 8.50 am | Inaugural Pooja at Sivan Temple |
| 8.50 am - 9.00 am | Procession carrying Nalvar to Sivan Centre. |
| 9.00 am - 9.05 am | Pooja for Lord Natarajar led by Sivasri Maheswara kurukkal, Chief Priest, London Sivan Temple. |
| 9.05 am - 9.10 am | Lighting of Oil Lamp |
| 9.10 am - 9.15 am | Hoisting the Holy flag of "Thirumurai" |
| 9.15 am - 9.35 am | Pannisai – Thiru Samy Thandapani Othuvar and Sivan Temple Students – Adult Group. |
| 9.35 am - 9.40 am | Blessing – Sivasri Maheswara Kurrukkal – Chief Priest, London Sivan Temple |
| 9.40 am - 9.50 am | Welcome Address – Dr S Jeyanathan/ Mr S J Fatimaharan , Coordinators of the Steering Committee |
| 9.50 am - 9.55 am | Opening Address – Dr T Sriskandarajah, President of London Sivan Kovil Trust and Chairman of the Steering Committee. |
| 9.55 am - 10.05am | Blessings – Thirukailaya Paramparai Thiruvavaduthurai Ahdeena 24th Kuru Maha Sanithanam Srilasri Ambalavana Thesika Paramachariya Swamigal |
| 10.05 am – 10.15am | Blessings – Thirukailaya Paramparai Dharumai Ahdeenak Kaddalai, Kumarasamy Thambiran Swamigal |
| 10.15 am – 10.35 am | Guest Speaker |
| 10.35 am – 10.55 am | Tea Break |
| 10.55 am – 11.15 am | Pannisai – Kumari Martungi Uthayakumar and Kumari Sarmpavi Uthaya kumar. |
| 11.15 am – 11.40 am | Guest Speaker Dr K P Nallasivan. |
| 11.40 am – 12.00 pm | Guest Speaker Mr M Manivasagam. |
| 12.00 pm – 12.40 pm | Keynote speech - Thirukailaya Paramparai Thiruvavaduthurai Ahdeena 24th Kuru Maha Sanithanam Srilasri Ambalavana Thesika Paramachariya Swamigal |
| 12.40 pm – 13.40 pm | Lunch |
| 13.40pm – 14.00 pm | Two research papers. 14.00pm – 14.25pm Guest Speaker, Dr R Natarajan. |
| 14.25 pm – 14.50 pm | Guest speaker Dr P Mathuranayagam. |
| 14.50 pm – 15.15 pm | Guest Speaker Mr K Sivakumar |
| 15.15 pm – 15.45 pm | Three Research Papers. |
| 15.45pm – 16.15pm | Pannisai – Chidambaram Pon Muthkumaran Authuvar |
| 16.15 pm – 16. 30 pm | Concluding Remarks Dr S Rajasundaram/ Mr S J Fatimaharan |

Programme coordinator Dr Kandiah Sivakumar
Compere Mr. Wimal Sockanathan

## Programme Day 2 (Saturday 20th September 2014)
### Venue : Sedgehill School Auditorium

| | |
|---|---|
| 9.00 am - 9.10 am | Procession Carrying Nalvar to Sedgehill School Auditorium. |
| 9.10 am - 9.15 am | Lighting of Oil Lamp |
| 9.15 am - 9.20 am | Hoisting the Holy flag of "Thirumurai" |
| 9.20 am - 9.40 am | Pannisai – Othuvar Samy Thandapani and Shree Ghanapathy Temple Students – Adult Group. |
| 9.40 am - 9.45 am | Welcome Address – Dr S Rajasundaram, Building & Finance sub-committee Chairman LSKT and Deputy Chairman of the Steering Committee. |
| 9.45 am -9.55am | Welcome Address – Datho R S Mohan Shan, Chairman, Malaysia Hindu Sangam |
| 9.55 am – 10.00 am | Opening Address – Dr T Sriskandarajah, President of London Sivan Kovil Trust and Chairman of the Steering Committee. |
| 10.00am - 10.10 am | Blessings – Kayilaimamunivar Naganatha Sivam Kurukkal, Chief Priest at London Murugan Temple. |
| 10.10am – 10.20 am | Review of Conference proceedings on Research articles – Dr Maruthanayagam. |
| 10.20am - 10.50am | Blessings & Keynote speech - Thirukailaya Paramparai Dharumai Ahdeenak Kaddalai, Kumarasamy Thambiran Swamigal. |
| 10.50 am – 11.10am | Introduction to Chidambaram Natarajar Temple - Video presentation |
| 11.10 am – 11.30 am | Tea Break |
| 11.30 am – 12.00pm | Bharatha Natyam: Thiruvathirith Thirunaal – Manikavasagar by Saiva Munnetta Sangam Naalvar Tamil Academy. |
| 12.00 pm – 12. 20pm | Guest Speaker Dr R Natarajan |
| 12.20pm – 12.40pm | Distribution of Certificates in Recognition of Achievement of Students of Saiva Siddhantham at London Sivan Temple and Saiva Munnetta Sangam by Thirukailaya Paramparai Thiruvavaduthurai Ahdeena 24th Kuru Maha Sanithanam Srilasri Ambalavana Thersika Paramachariya Swamigal |
| 12.40 pm – 13.40 pm | Lunch |
| 13.40pm – 14.00pm | Pannisai – Selvi Arrthe Nagaratnam & Selvi Sundaraamma Maheshwaran, Shree Ghanapathy Temple |
| 14.00 pm – 14.20pm | Introduction to Thiruketheswaram Temple - Video presentation 14.20 pm – 14.30pm – Speech – Mr S Ganeshkumar. |
| 14.30 pm – 14.40 pm | Speech – Mr Kumaran Sriskandarajah. |
| 14.40 pm – 15.00 pm | Guest speaker Dr K Rafel Kobler |
| 15.00 pm - 15.20 pm | Tea Break (Youth Parallel Sessions Commence 15.10hrs) 15.20pm – 15.40pm Pannisai Mr K Cumareshan, Thirumurai Sangam, London. |
| 15.40pm – 15.55pm | Sivasri Vasanthan Kurukkl , Chief Priest, Sri Karpaha Vinayagar Temple, Walthamstow, London. |
| 15.55 pm – 16.05pm | Research paper in Tamil. |
| 16.05pm - 16.15pm | Research Paper |
| 16.15pm – 16.40pm | Guest Speaker Dr K P Nallasivan |

| | |
|---|---|
| 16.40pm – 17.05pm | Guest speaker Dr P Mathuranayagam |
| 17.05pm – 17.30pm | Guest Speaker Mr K Sivakumar |
| 17.30pm – 18.00pm | Pannisai – Chidambaram Pon Muthkumaran Authuvar |
| 18.00pm – 18.30pm | Bharatha Natiyam: Bharatha Natyam Thirunavukkarasar, Choreographed by Smt. Uma Chandratheva, London Tamil Centre. |
| 18.30pm - 18.45pm | Concluding Remarks & Announcement, Dr S Rajasundaram/ Dr K Sivakumar/Dr S Jeyanathan. |
| 18.45pm - 19.30pm | Dinner |

Distribution of Certificates in Recognition of Achievement of Students of Saiva Siddhantham at London Sivan Temple and Saiva Munnetta Sangam will be coordinated by Mr Anandathiyagar

Programme coordinator Dr Kandiah Sivakumar
Compere Mr. Wimal Sockanathan

## Programme Day 3 (Sunday 21st September 2014)
Venue : Sedgehill School Auditorium

| | |
|---|---|
| 9.00 am - 9.05am | Lighting of Oil Lamp |
| 9.05am - 9.10am | Hoisting the Holy flag of "Thirumurai" |
| 9.10 am - 9.30am | Pannisai- Thiru Samy Thandapani Othuvar and Chidambaram Pon Muthukumaran Othuvar |
| 9.30 am - 9.40 am | Welcome Address – Dr S Jeyanathan/ Mr S J Fatimaharan, Coordinators of the Steering Committee |
| 9.40 am – 9.45am | Welcome Address – Mr V Kandasamy ANS.PJK., Deputy Chairman, Malaysian Hindu Sangam |
| 9.45 am - 9.50 am | Opening Address – Dr S Rajasundaram, Building & Finance sub-committee Chairman LSKT and deputy chairman of the Steering Committee. |
| 9.50am – 10.00am | Blessing by Sivasri Kamalanatha Kurrukkal, Chief Priest, Nagabhushani Amman Temple, Edmonton, London. |
| 10.00am - 10.30 am | Blessings and Keynote speech - Thirukailaya Paramparai Dharumai Ahdeenak Kaddalai, Kumarasamy Thambiran Swamigal |
| 10.30am – 10.50 am | Introduction to Thiruvanamalai Temple - Video presentation |
| 10.50 am – 11.10 am | Tea Break |
| 11.10am – 11.35am | Guest Speaker – Dr P Mathuranayagam. |
| 11.35am – 11.50am | Pannisai, Keerthana Vasanthakurrukkal and Lalana Vasanthakurrukkal |
| 11.50am – 12.05pm | Pannisai, Selvan Kapilan Marutharajah and Selvi Sruthi Suresan. |
| 12.05pm – 12.35pm | Bharatha Natyam – Sundaramoorthy Swamigal – Vanthondar Vallaku by Students of Mrs Shantha Annapoorani, Director of Sri Meenatchi Bharathanatya Palli. |
| 12.35 pm – 13.35 pm | Lunch |
| 13.35pm – 14.05pm | Pannisai – Dr Saravanan Jeyanathan |
| 14.05pm – 14.25pm | Guest Speaker Dr R Lambotharan. |
| 14.25 pm – 14.35pm | Poet Greetings Pullavar Sivanathan |
| 14.35pm – 14.55pm | Introduction to Thirukoneswaram - Video presentation 14.55 pm - 15.15pm Tea Break (Youth Parallel Sessions Commence 15.10hrs) |
| 15.15pm – 15.45 pm | Bharatha Natiyam: Thirugnanasampanthar Choreographed by Smt. Sujatha Sathees, London Sivan Temple School. |

| | |
|---|---|
| 15.45pm - 15.55pm | Research paper. |
| 15.55pm – 16.15pm | Pannisai Students of Saiva Munnetta Sangam Naalvar Tamil Academy. |
| 16.15 pm – 16.35pm | Guest Speaker Mr M Manivasagam |
| 16.35pm – 16.55pm | Guest Speaker Dr R Natarajan |
| 16.55 pm – 17.25pm | Pannisai – Chidambaram Pon Muthkumaran Authuvar |
| 17.25pm - 17.45pm | Concluding Remarks & Announcements (Steering Committee members + Swamigals + Key speakers) / Kandapuranam God's Greeting |
| 17.45pm – 18.30pm | Dinner |

Programme coordinator Dr Kandiah Sivakumar
Compere Mr. Wimal Sockanathan
Parallel Youth Sessions (Saturday 20th & Sunday 21st September):

Scholars to run the sessions:
(A) Dr P MATHURANAYAGAM (B) Dr R NATARAJAN
(C) Dr R LAMBOTHARAN
(D) Dr K P NALLASIVAM

Topics to be covered: Saturday 20th September 2014

Session 1: 15.10pm to 16.30hrs
1) Introduction and Basics of Thirumurai
2) Thirumurai and the Existence of God

Session 2:
16.40pm to 18.00hrs
3) Thirumurai and the Role of Women
4) Thirumurai and Scientific Concepts

Topics to be covered: Sunday 21st September 2014

Session 3:
15.10pm to 16.30hrs
5) Thirumurai and How we are Expected to Live
6) Thirumurai and the Fine Arts

Session 4:
16.40pm to 18.00hrs
7) Thirumurai and Suffering
8) Thirumurai and the Concept of why We are Here

*Note each session will last for 1hr 20min

# ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்
## பன்னிரு திருமுறை பற்றிய ஒரு நோக்கு

*- மு.க. மாசிலாமணி இலக்கிய விமர்சகர், எழுத்தாளர்*

என்று தோன்றியதென உறுதியாகக் கூறமுடியாத அளவிற்கு மிகத் தொன்மையும் இலக்கிய. இலக்கணச் செழுமையும் நீண்ட தொடர்ச்சியான வரலாற்றுச் சிறப்பு கொண்டதும் இன்றும் வழக்கிலுள்ளதுமான ஒரு சில உலக **செம்மொழிகளில்** - Classical languages தமிழும் ஒன்று. தமிழ்மொழிக்கெனத் தனிச் சிறப்புகள் பலவுண்டு. உலகின் ஒப்பரிய சமயங்களான சைவம், வைணவம், பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற எல்லாச் சமயங்களும் தத்தம் சமயக் கொள்கைகள் கோட்பாடுகளை விளக்கும் அருமையான பல இலக்கியங்களை இயற்றிப் பெருமை கொள்வதற்கு இடமளித்த மொழி தமிழே. தமிழ் இலக்கியம் என்ற பெருஞ் சுரங்கத்தில் சமயச் சார்பில்லாத செந்தமிழ் ஆக்கங்களே இல்லை என்னும் அளவிற்குப் பெரும்பாலும் சமயம் சார்ந்த நூல்களே நிறைவாகவுள்ளன. ஒவ்வொரு சமயத்தாரும் உருகி உருகிப் பாடித் தமிழைப் பக்திக்கும் உருக்கத்திற்கும் உரிய தெய்வீக மொழியாகச் சிறப்படையச் செய்துள்ளனர்.

தமிழைப் **"பக்தியின் மொழி"** எனப் போற்றுவர் ஈழத்துத் தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளார். தமிழ்க் கவிதைகளில் சிறந்த பாடல்கள் இறையுணர்வு பற்றியும் இயற்கையருள் பற்றியுமே பேசுவதாக – "There are excellent works in Tamil poetry on the subject of divine attributes and the nature of virtue"- Father Becchi – பெஸ்கி பாதிரியார் குறிப்பிடுகிறார். "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" எனப் போற்றப்பட்ட பெரியபுராணப் பக்தி நூலின் ஆசிரியர் சேக்கிழாரோ **"ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" எனத் தமிழ்மொழியைத் "தெய்வத்தமிழ்"** என்றே அறுதியிட்டு உறதிபடக் கூறியுள்ளார். இவ்வாறு இறையனுபவ உணர்வுகளை மிக இலவகமாகச் சித்தரிக்கும் சிறப்புப் பெற்ற மொழி ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தெய்வீகவுணர்வ பொங்கிப் பிரவகிக்கும் தெய்வத்தமிழ்த் திருநூல்களைப் பக்திப் பனுவல்களைப் பல நூற்றுக் கணக்கில் தோற்றுவித்துள்ளது.
சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த கி.பி. 3ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் தமிழ்நாடு சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடைய வேந்தர்களின் ஆட்சியில் இருந்தது. தமிழ் மக்களும் இயற்கையோடியந்த வாழ்க்கையை நடாத்தினர். ஆதிகாலத்திய இலக்கியங்களும் மக்களால் பெரிதும் போற்றப்பட்ட காதல், வீரம் ஆகிய பண்புகளைப் படம் பிடித்துக்காட்டும் காலத்தால் அழியாத சொல்லோவியங்களாக மிளிர்ந்தன.

சங்ககாலத்தைத் தொடர்ந்து தமிழகத்தின் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட சமணர்களான களப்பிரர் என்ற அரசவம்சத்தினர் ஆட்சியில் தமிழ் மக்களின் வாழ்வியல் நெறிகள் சிதைந்து சின்னாபின்னமாயின. கோயில்கள் இடிக்கப்பட்டு சமணப் பள்ளிகள் நிறுவப்பட்டன. தமிழர், தம் உயிரினும் மேலாகப் போற்றி வளர்த்த இசை, கூத்து. நடனம், ஆடல், பாடல் போன்ற கலைகள் யாவும் அரச ஆதரவின்மையினாலும் சமணர்களின் எதிர்ப் பிரசாரங்களினாலும் கைவிடப்பட்டன. ஒட்டு மொத்தமாகப் பழம் பெருமைமிக்க ஒரு இனத்தின் நாகரீகம், பண்பாடு, வாழ்க்கை விழுமியங்கள் அனைத்தையுமே இருள் கௌவிக் கொண்டது. அத்தகையதொரு இருள் சூழ்ந்த நிலையிற்றான் செந்தமிழரின் செழுமைமிக்க வாழ்வியல் நடைமுறைகளுக்குப் பண்பாட்டுக் கருவூலங்களுக்குப் புத்துயிரளித்து மீண்டும் அவற்றினை உயர்நிலைக்குக் கொண்டுவர இறையருள் பெற்ற அவதார புருஷர்களான சைவ நாயன்மார்கள் - **"திராவிடச் சிசு"** என ஆதிசங்கரரால் போற்றப்பட்ட ஞானசம்பந்தர் **"தமிழ் மொழித் தலைவர்"** எனச் சேக்கிழாரால் விதந்து கூறப்பட்ட நாவுக்கரசர் – ஆகியோர் தலைமையில் இன்தமிழ் மக்களை ஓரணியின் கீழ் ஒன்றிணைத்த இயக்கத்தினையே வரலாற்றாசிரியர்கள் "பக்தி இயக்கம்" எனக் குறிப்பிடுவர். அவ் அருளாளர்கள் அடியார்கள் புடைசூழக் கைவிடப்பட்ட சிவத்தலங்களுக்குத் தலயாத்திரை மேற்கொண்டு பண்ணமைந்த பக்திப் பாசுரங்கள் பல்லாயிரக்கணக்கில் பாடினர். அவர்கள் வெறுங் கவிஞர்கள் மட்டுமல்லர். புறச் சமயங்களின் வன்முறை சார்ந்த தீவிர எதிர்ப்பிரசாரங்களாலும் வேதனைமிக்கப் போதனைகளாலும் வாழ்க்கையில் வெறுப்புற்று சீரழிந்த மக்களுக்கு மண்ணில் நல்ல வண்ணம் வாழும் மாண்புறு மனித வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பிக்க உருவான "பக்தி இயக்கம்" என்ற அந்தப் பேரியக்கத்தின் அரிய செய்திகளைத் தெளிவாகவும் அழுத்தம் திருத்தமாகவும் சொல்வதற்கு ஒரு கருவியாகவே கவிதையினைப் பயன்படுத்திய தெய்வீகக் கவிஞர்கள் அவர்கள். சிவநெறியைச் செந்தமிழ் நன்நெறியை உயர்த்த தெய்வத் தமிழால் முடியமென நிலைநிறுத்திய அவ்வருளாளர்களால் வழிநடாத்தப்பட்ட பக்தி இயக்கம் தமிழகத்தில் வரலாறு காணாத ஒரு மறுமலர்ச்சியினைத் தோற்றுவித்தது. செந்தமிழ் என்றுமில்லாதவாறு தெய்வத்தமிழாக வளம் பெற்றது. இயற்றமிழ், இசைத்தமிழ் இரண்டும் ஒன்றிணைந்து

பெருவளர்ச்சி எய்தின. தெய்வீகத் தமிழிசை கடல்மடை திறந்த வெள்ளம் போல் பெருக்கெடுத்தது. மன்னனைப் புகழ்ந்து பாடும் மரபிற்குப் பதிலாக இறைவனின் பெருமையை மனம் ஒன்றிய நிலையில் உள்ளம் உருகிப்பாடும் கவிதை மரபு உருவாகித் தெய்வத்தமிழ் பெருநெறியாகச் சிறப்புற்றது. புலன்களை அடக்கு எனப் புறச் சமயங்கள் அழுத்தியுரைக்கப் புலன்களையும் முழுமையாக இறைவழிபாட்டில் செலுத்தி உய்தி பெறலாமென அருளாளர்களின் அன்பு நெறி வழிகாட்டியது. இறைவன் மீது ஆறாக் காதல் என்னும் உணர்ச்சிப் பெருக்கினை மக்கள் உள்ளந்தோறும் ஆழ வேரூன்றத்தக்க வகையில் அவர்கள் மொழியில் இன்னிசைப் பாடல்களைப் பொழிந்தனர். அவர்கள் இறைவனுடன் மானுடன் கொள்ளும் ஆன்ம உறவினைத் தம் பக்திப் பாசுரங்களில் மிகத் தெளிவாக உணர்த்தினர். அவ்வருளார்களின் அருளுபதேசங்கள், நல்லுரைகள் சாதாரண மக்களிடைய பெரும் மாற்றத்தினைத் தோற்றுவித்தன.

சமூக வாழ்க்கையில் இறை வழிபாடு இன்றியமையாத ஒன்றாக முக்கியத்துவம் பெற்றது. அதனால் சமுதாயத்தின் முக்கிய மையங்களாக கோயில்கள் சிறப்பிடம் பெற்றன. அக்காலம் வரை கோ- அரசன், இல்- அரண்மனை என உயர்வாகப் பேசப்பட்ட அரச அரண்மனைகளிலும் பார்க்க உயர்ந்தனவையாகவும் சிறந்தவையாகவும் நிர்மாணிக்கப்பட்ட இறைவன் வீற்றிருக்கும் மிகப் பெரிய கட்டிடங்களே கோயில் அல்லது ஆலயம் என அழைக்கப்பட்டன. தெய்வத்தமிழ் முதன்மைப்படுத்திய இறை வழிபாடு விண்முட்டும் கோபுரங்களுடனும் வியக்க வைக்கும் சிற்பங்களுடனும் தமிழ்ப் பண்பாட்டின் ஒரு முக்கிய கூறாகத் **திராவிடக் கட்டிடக்கலை –** Dravidian Architecture என்ற கோயிற் கட்டிடக்கலை பெரு வளர்ச்சியுற்றது. கோயில்கள் கலைக் கூடங்களாகவும கலைகளின் காப்பிடங்களாகவும் முக்கியத்துவம் பெற்றன. அரசர்களின் அரண்மனைகளைத் தேடிச் சென்று அவர்களைப் பகழ்ந்து பாடிப் பரிசு பெறப் பயன்படுத்திய தமிழ், கோயில்களில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் இறைவனை மனமுருகிப் பாடிப் பணிய வேண்டுமென்ற நிலையினைத் தோற்றுவித்தது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய தேவார ஆசிரியர் மூவரும் பாரதத்தில் தம் காலத்திலிருந்த 275 வரையான சிவத்தலங்களுக்கு அடியாருடன் தலயாத்திரை செய்து பதிகம் பாடியுள்ளாரென டாக்டர் மா. இராசமாணிக்கனார் **"சைவசமய வளர்ச்சி"** என்ற தன் ஆய்வு நூலில் குறிப்பிடும் செய்தி அக்காலத்தில் தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் கோயில்கள் நிறைந்திருந்தன என்பதனையும் பாடப்படுபவர் - இறைவன், பாடுபவர் - இறைவனின் அடியவர்களென்பதையும் தெளிவுபட எடுத்துப் பேசுகின்றது.

திருநாவுக்கரசரின் உழவாரப்பணி கோயில்களைத் தமது உடமையாகக் கருதிப் பேணிக் காக்கின்ற உணர்வு சமுதாயத்தில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆழப் பதிந்தது. **"பாடல் பெற்ற தலம்"** என்ற தனிப் பெருஞ் சிறப்புடன் கோயில்கள் மிக உயர்வாகப் போற்றப்பட்டன. **"உலக வரலாற்றிலேயே இந்துக் கோயில்களுக்கு நிகரான நிறுவனங்கள் மிக அருமையாகவே உள்ளன"** எனப் ரோராசிரியர் நீலகண்ட சாஸ்த்திரி போன்ற வரலாற்றாசிரியர்களால் விதந்து குறிப்பிடுமளவிற்குத் தெய்வத்தமிழ் கோயில்களை முதன்மைப்படுத்தின.

இறைவன் முன்னிலையில் எல்லோரும் சமம். இறைவனே எல்லோருக்குந் தலைவன், **"ஒன்றே குலம் ஒருவனே தேவன், அன்பே சிவம்"** போன்ற உலக ஒருமைக் கோட்பாடு, ஆன்ம நேய ஒருமைப்பாடு போன்ற உயர்ந்த சிந்தனைகள் மக்கள் மனதில் ஆழ வேரூன்றியதுடன் பலமரபினர், பலசாதியினர் பல்வேறு இடத்தினர் என வாழ்ந்த மக்களை தெய்வத்தமிழ் ஒன்று சேர்த்தது. இவ்வாறு கி.பி 7ம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாட்டில் உயர்ந்த பண்பட்ட புத்தெழுச்சி ஒன்று உருவாகி மறுமலர்ச்சி அடைவதற்கு அருளாளர்களின் தெய்வத் திருமுறைகளே அடிப்படையாக அமைந்தன.

ஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் வரை 27 சிவனருட்செல்வர்கள் பாடிய ஏறத்தாள 18350 வரையான பன்னிரு திருமுறையில் அடங்கும் அருட்பாசுரங்கள் உலகப் பக்தி இலக்கியங்களில் இமயம் போன்றவை. அளவிலும் இசைச் சிறப்பிலும் அவற்றிற்கு இணையாக நிகராக உலகின் வேறெந்த மொழியிலுமில்லை என்பது பேரறிஞர்கள் துணிபு. தெளிந்த, தேர்ந்த, பொருளாழமிக்க, ஒலிநயமான இன் சொற்களால் இனிய பாவகைகளைக் கையாண்டு ஓதுவோர் கேட்போர் உள்ளங்களை உருக்கி இறைவனுடன் ஒன்ற வைக்கும் ஆற்றல் தெய்வத்தமிழ்ப் பாசுரங்களான திருமுறைகளுக்கே உரிய தனிச் சிறப்பாகும். தாம் பெற்ற இறையனுபவத்தை மனுக்குலம் முழுமையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற பெருநோக்குடன் பாடப்பெற்ற இப்பாசுரங்கள் வடமொழி வேதங்களுக்கு நிகராகத் **"தமிழ்வேதம்"** எனவே போற்றப்படுகின்றன. இதனைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் பல இடங்களில் அழுத்திக் கூறுவர். **"தமிழ் வேதம் பாடினார் தாளம் பெற்றார்"** என்றும் **"வேதந் தமிழால் விரித்தார்"** என்று ஞானசம்பந்தர்

தேவாரங்களையும் **''வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்''** என திருநாவுக்கரசர் தேவாரங்களையும் தமிழ் வேதமெனவே போற்றுகின்றார்.

இவ்வருட் பாசுரங்களை சிவனே தம்முள் இருந்து தன்னைப் பாடிக் கொண்டதாகவும் எனவே அவை சிவனுடைய வாக்குகளே என்றும் திருமுறை ஆசிரியர்களே கூறுவர். **''நித்தமா ஏத்தும் ஊருளான் எனதுரை தனதுரையாக''** என ஞானசம்பந்தரும் **''பண்ணிய செந்தமிழ் மாலை பாடுவித்தென் சிந்தை மயக்கறுத்த திருவருளினானை''** எனத் திருநாவுக்கரசரும் இறைவனே தம்மைக் கருவியாகக் கொண்டு தம்மைப் பாடிக் கொண்டதாகக் கூறுவன சிந்திக்கத்தக்கன. அது மட்டுமன்றி **''அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக''** எனச் சிவனே அடியெடுத்துக் கொடுத்துப் பாடும்படிச் சுந்தரரை பணித்தமை திருமுறைப் பாசுரங்களில் தனக்கிருக்கும் பெருவிருப்பினையும் அவையே உலகை உய்விக்க உகந்தவை என்பதையும் இறைவனே வெளிப்படுத்தியுள்ள சிறப்பு திருமுறைகளுக்குண்டு.

**''ஆன சொல்மாலை ஓதும் அடியார்கள் வானில்**
**அரசாள்வர் ஆணை நமதே''**

என உறுதியான ஆணையிட்டுத் தேவாரங்களை ஓதுவதால் பெறும் பயன் கூறும் சம்பந்தர் வேற்றுமொழியாளர் ஆட்சியில் தமிழ் மக்களை ஒன்றிணைத்து இறையுணர்வினையும் தமிழ் உணர்வினையும் மக்களிடையே வளர்த்து அதன் மூலம் மக்களை வழிநடாத்திய தலைவராகத் தமிழ், சமூக வரலாற்றில் போற்றப்படுகின்றார். நீண்ட தமிழ் வரலாற்றில் பலர் தம் பெயரைத் தமிழுடன் இணைத்து வெளிப்படுத்தியுள்ளாரெனினும் **''தமிழ்ஞான சம்பந்தன்''** என்றும் **''ஞானசம்பந்தன் ஞானத்தமிழ்''** என்றும் தன்னுடைய பெயருக்கு முன்னும் பின்னும் 300 மேற்பட்ட இடங்களில் தமிழோடு தன்னுடைய பெயரை இணைத்துப்பாடியவர் சம்பந்தர் ஒருவரே. திருமுறைகளைத் தொகுத்தவரும் 11ம் திருமுறை ஆசிரியருமான நம்பியாண்டார் நம்பி தனது பாடலொன்றில்

**''ஆறு தேறுஞ் சடையான் அருள்மேவ அவனியர்க்கு**
**வீறு தெறுந் தமிழால் வழிகண்டவர்''** என்றும் சம்பந்தருக்குப் ஏறத்தாள 200 ஆண்டுகளுக்குப் பின் தோன்றிச் **''சுந்தரர் செந்தமிழ்''** என்று போற்றுமளவிற்குத் தேவாரம் பாடிய சுந்தரரும்
**''நாளுமின்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்''**என்றும் ஞானசம்பந்தரின் தெய்வத் தமிழிசைப் பணியைப் போற்றியுள்ளனர். மேற்படி இருவரின் கூற்றுக்களை வழிமொழிபவர் போல் பெரியபுராண ஆசிரியர் சேக்கிழாரும்

**''திசையனைத்தின் பெருமையெல்லாந் தென்திசையேவென்றேற**
**அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல''** சம்பந்தர் அவதாரம்

செய்ததாகக் கூறுவதும் ஒப்பு நோக்கத் தக்கது.

மானிடரின் மனமாசினை நீக்கி உய்தியளிக்க வல்ல ஞான நூலான திருவாசகத்தின் பொருள் தில்லையம்பல நடராசனே என அதன் ஆசிரியரான மணிவாசகரினால் கூறப்பட்ட பெருமைக்குரிய அருள் நலமிக்கத் தெய்வத் திருநூலே திருவாசகம். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் அப் பக்திப் படைப்புக்கு இணையாக ஒரு ஆக்கம் உலக மொழிகளில் மிகமிக அரிதாகவே உள்ளன என்று கூறுமளவிற்குக் கல்நெஞ்சையும் கனிய வைக்கும் பக்தி ரசத்தின் உச்சமாகத் திகழும் திருவாசகத்தையும் தெய்வத் தமிழ் கொண்டிருக்கிறது. மதத் தொண்டு செய்ய தமிழ் நாட்டுக்கு வந்த பிரித்தானிய கிறிஸ்தவ போதகர் G.U.போப், முதலில் தமிழைக் கற்கத் தொடங்கி அதன் இனிமையால் ஈர்க்கப்பட்டு திருக்குறள், திருவாசகம் போன்ற அருமையான நூல்களைக் கற்றார். உருக்கத்தின் உச்சிக்கே கொண்டு செல்லும் பெற்றி வாய்ந்த திருவாசகம் என்ற என்புருக்கம் ஆன்மிகப் பொக்கிஷத்தை – ஊழநெ அநடவபைெ டீைவநசயவரசந என ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தமிழ் பக்திக் கவிதைச் சிறப்பினை மேற்குலகத்திற்கு உணர்த்தியுள்ளார். தனது கல்லறையிலும் "Rev. G. U. Pope - A student of Tamil literature" எனப் பொறிக்கும்படியும் அறிவுறுத்திய போப் தெய்வத் தமிழைப் போற்றிய பேரறிஞராவார்.

தேவார, திருவாசகப் பாசுரங்களின் சாரமாகவும் விளக்கமாகவும் விளங்கும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியன ஒன்பதாந் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. ஒன்பது அருளாளர்களால் பாடப்பெற்ற ஒன்பதாம் திருமுறைப் பாடல் எண்ணிக்கையில் 301ஐ மட்டுமே கொண்ட அளவிற் சிறியதாயினும் ஆலயங்களில் ஓதப்படும் பஞ்ச தோத்திரங்களில் பதினெண்ணாயிரம் வரையிலான பாடல்களைக் கொண்ட ஏனைய திருமுறைகளிலிருந்து மூன்று பாடல்களே ஓதப்பட இத்திருமுறையிலிருந்து திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என இரு பாடல்கள் ஓதப்படுவதே ஒன்பதாம் திருமுறைக்கான தனிச் சிறப்பாகும். முதல் எட்டுத்

திருமுறை களும் இசைப்பாக்களேயாயினும் இது ஒன்றிற்கே 'இசைப்பா' எனப்பெயர் வழங்கப்பட்டிருப்பதும் ஒன்பதாம் திருமுறையின் மற்றொரு சிறப்பாகும்.

**"என்னை நன்றாகப் இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**

என இறை நெறியை உள்ளவாறுணர்ந்து மனுக் குலம் உய்வதற்கு ஆற்றுப்படுத்தும் அருள் நூலை அடியேனைக் கொண்டு தமிழில் பாடுவிக்கவே தன்னை இறைவன் படைத்தானெனக் கூறுந் திருமூலர் சைவ சமய உண்மைகள் தமிழிலிருக்க வேண்டுமென்பதே இறைவனுடைய பெருவிருப்பமென்பதையும் தெளிவுபடக் கூறுவர். பத்தாந் திருமுறையான திருமந்திரம் என்ற தமிழாகம நூல் தமிழிலுள்ள ஒப்பற்றதொரு சாஸ்திர நூல் மட்டுமன்றி நெறிமுறையான விழுமியங்களை விளக்கும் வாழ்வியல் நூலுமாகும்.

திருவாலவாயில் உறையும் சொக்கநாதர் பாடிய **"திருமுகப்பாசுரம்"** முதல், பதினொரு திருமுறைகளைச் சைவ உலகத்திற்கத் தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பி திருநாவுக்கரசர் மீது பாடிய **"ஏகாதச மாலை"** வரையிலான 40 பிரபந்தகளின் தொகுப்பே பதினொராந் திருமுறையாகும். பன்னிரு ஆசிரியர்களால் பாடப்பட்ட 1420 பாசுரங்களைக் கொண்டது இத் திருமுறை. பொதுவாக எல்லாத் திருமுறைகளும் சிவபெருமானையே போற்றிப் பாடுவனயாயினும் இத்திருமுறையில் மட்டும் சிவன் பாடிய திருமுகப் பாசுரப் பாடலும் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட சிவபெருமான் மும்மணிக்கோவை, சிவபெருமான் திருவந்தாதி, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை ஆகியனவும் ஏனைய திருமுறைகளுக்கில்லாத 11ம் திருமுறைக்கேயுரிய தனிச் சிறப்பாகும். தேவார ஆசிரியர்கள் மூவருக்கும் முன்னோடியாகவும் திருமுறை ஆசிரியர்கள் 27 பேரில் ஒரேயொரு பெண்பாற்புலவரான காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இத்திருமுறையில் அடங்குவது அதன் மற்றோர் சிறப்பாகும். தமிழ்த் தெய்வமான முருகனிடம் ஆற்றுப்படுத்தும் திருமுருகாற்றுப்படை, பெரிய புராணம் பாடுவதற்கு ஆதாரமாக அமைந்த திருத்தொண்டா திருவந்தாதி ஆகியன 11ம் திருமுறையிலிருப்பதும் ஆற்றுப்படை, உலா, கோவை, கலம்பகம், அந்தாதி போன்ற இத்திருமுறையிலுள்ள பிரபந்தங்கள் பிற்காலத்தில் அவ்வகையான பல சிற்றிலக்கியங்கள் தோன்றித் தமிழிலக்கியம் வளம்பெற முன்னோடியாக அமைந்ததும் 11ம் திருமுறையின் சிறப்பாகும்.

சங்ககாலத்திற்குப் பின் தமிழர்களான சோழராட்சிக் காலத்தில் தமிழை தெய்வத் தமிழாக வீறு கொண்டு எழச்செய்த சிவனடியார்களின் வாழ்க்கை வரலாற்றைப் விளக்கும் பக்தி இலக்கியம் சேக்கிழாரால் பாடப்பெற்ற பெருங்காப்பியமான பெரியபுராணமாகும். இது தமிழின் சீர்மையை விளக்கும் ஒப்பற்ற படைப்பாகும். பல்லவராட்சிக் காலத்தில் ஆரம்பித்த கோயிலை முதன்மைப்படுத்திய **"கோயிற் பண்பாடு"** வளர்ந்து 1ம் இராசராசன் போன்ற சோழப் பேரரசர் காலத்தில் சமய, சமூக, பண்பாட்டு மையமாக கோயில்கள் முக்கியத்துவம் பெற்றன. இவ்வளர்ச்சிக்கு அச்சாணியாக விளங்கிய நாயன்மார்களின் வரலாற்றை பக்தி உணர்வும் இலக்கிய ரசமும் இணைந்த இன்பம் பயக்கும் படைப்பாக பெரியபுராணத்தை தந்த தெய்வப் புலவர் சேக்கிழார் சைவ வரலாற்றில் ஒப்பற்றவர்.

முறைப்படுத்தப்பட்ட தெய்வத் தமிழ்ப் பாசுரங்களின் தொகுப்பான பன்னிரு திருமுறைகள் வேத மந்திரமாக விளங்குவன.

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திர மென்ப"**

எனத் தொல்காப்பியம் கூறும் மந்திர வரைவிலக்கணத்திற்கு அமையுமாறு இறை சக்தி உள் நின்றுந்த நிறைமொழி மாந்தர்களான அடியார்களின் நாவிலிருந்து வேதசாரம் போல் வெளிவந்த ஆணை மொழிகளே திருமுறைகள். அவை முறைப்படி நியமந் தவராது ஓதிவர பயன் விளைவிப்பன. ஆதலால் அவை பூசிப்பதற்கும் கிரமமாக ஓதுவதற்கும் உரியவை. மறைத்து வைக்கப்பட்டிருந்த திருமுறைகளைத் தேடிக் கண்டெடுத்து சைவத் தமிழ் உலகிற்கு அளித்தது மட்டுமன்றிக் கோயில்களில் அவற்றினை நியமந் தவறாது ஓதுவதற்கு காத்திரமான ஒழுங்குகள் மேற்கொண்ட 1ம் இராசராசன் போன்ற அரசர்களின் ஆட்சிக் காலமே தமிழர் வரலாற்றில் **"பொற் காலம்"** - Golden age ஆகும். சிறந்த சிவபக்தனான இவன் தான் நிர்மாணித்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் கிரமமாக திருமுறைகளை ஓதுவதற்கென 48 ஓதுவார்களை நியமித்து திருமுறைகளை ஒலிக்கச் செய்தான். இம்மன்னின் அரும் பெரும் பணிகளைக் கல் வெட்டுக்கள் விரிவாகப் பேசுகின்றன. இவனின் மகனான 1ம் இராசேந்திர

சோழன் ஓதுவார்களுக்கு மேலாகத் **''தேவாரநாயகம்''** என்பவரையும் நியமித்துத் திருமுறை ஓதுவதனை விரிவாக்கினான்.

மேற் குறித்த சோழ அரசர்களைப் போலவே இரண்டாம் இராசராசனும் கும்பகோணததில தான் நிர்மாணித்த தாராசுரம் சிவன் கோயிலில் ஓதுவார்களை நியமித்து திருமுறைகளை ஓதுவித்தான். இவ்வாறு சோழ மன்னர்கள் திருமுறைகளைப் பரப்ப மேற்கொண்ட நடவடிக்கைகளால் அவற்றின் பெருமை எங்கும் பரவிற்று. திருமுறைகளைப் போற்றும் ஆர்வம் மேலோங்கியிருந்த சோழர் ஆட்சிக்காலத்திலேயே தமிழர் பண்பாடும் வளர்ச்சியின் உச்சத்தினை எய்திற்று. சோழப் பேரரசின் இறுதிக் காலத்தில் திருமுறைகள் ஓதுவதும் குறைவடைய அப்பேரரசும் பலமிழந்து வீழ்ச்சியடைந்த செய்தியை கல் வெட்டுக்கள் பேசுகின்றன. ஆகவே தமிழர் வாழ்வு மீண்டும் சிறப்புற்றோங்குவது தமிழ் வேதமான திருமுறைகளைப் போற்றுவதிலேயே தங்கியுள்ளது. திருமுறை முற்றோதல். திருவாசகம் முற்றோதல் என ஆங்காங்கே இடம்பெற்று வந்தாலும் கோயில்களில் திருமுறைகளுக்குரிய சிறப்பிடம் வழங்கப்பட வேண்டும். திராவிட வேத பாராயணம் எனும் போது மட்டும் சில கோயில்களில் பஞ்ச புராணப் பாசுரங்களும், சில கோயில்களில் மேற்படி ஐந்துடன் திருப்புகழும் சில கோயில்களில் தேவாரமும் புராணமும் ஓதம் முறை பின்பற்றப்படுகிறது. சில போயில்களில் அவ்வாறு ஓதுவதற்குக்கூட சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

பாரதப் பண்பாட்டிற்குத் தமிழ் மொழி வழங்கிய அரும் பெரும் சொத்தான பன்னிரு திருமுறை என்ற பக்தி இலக்கியம் நீண்ட தமிழ் இலக்கியப் பெரும் பரப்பின் கணிசமான பகுதியாக விளங்குகிறது. மேலும் கம்பர், திருத்தக்கதேவர், பட்டினத்தார், அருணகிரிநாதர், குமரகுருபரர், இராமலிங்க வள்ளலார், பாரதி போன்ற பிற்காலப் பெரும் புலவர்கள் பலருக்கும் யாப்பு, பொருள். இசை எனப் பலவழிகளில் திருமுறைகள் முன்னோடியாகத் திகழ்ந்தன. அத்துடன் ஆன்மிகப் பண்பாட்டிற்கும், வாழ்க்கை வளத்திற்கும், கட்டிடம், சிற்பம், ஓவியம், இலக்கியம், இசை, நடனம், கூத்து போன்ற நுண்கலைகளின் எழுச்சிக்கும் கேந்திர நிலையங்களாகிய விளங்கிய கோயில்களில் திருமுறைகளுக்கு மிக முக்கியத்துவ இடம் அளிக்கப்பட வேண்டும். இல்லங்கள், பாடசாலைகள், போது மன்றங்கள் என எங்கும் திருமுறைகள் ஓதப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இன்றை இளம் சிறார்களை நாட்டின் நாளைய நற்பிரசைகளாக விளங்கும் வகையில் திருமுறைகளின் சிறப்பை உணர்த்த வேண்டும். **''அன்பே சிவம்'', ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'', ''யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி'', ''யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்''** போன்ற உலக அரங்கை அரவணைக்கும் நற்சிந்தனைகளை சிறார்கள் விளங்கும் வகையில் எடுத்துக் கூறி திருமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

ஓதுவார் ஒருவரின் சிறப்பான பணியினால் அண்மைக் காலங்களில் இலண்டன் மாநகரில் திருமுறைப் பண்ணிசைத் தமிழ் சிறப்பாக ஒலிப்பதுடன் இளஞ் சிறார்களிடையே அது பரவி வருவதும் ஆலயங்களிலும் பிற அரங்குகளிலும் அவர்கள் திருமுறையைப் பண்ணுடன் பாடுவதைக் கேட்கும் போது மனம் மகிழ்கிறது. எனினும் இன்னும் சில ஓதுவார்களின் சேவையினைப் பெற்று இச் செயல் விரிவாக்கப்படுவதன் மூலம் மேற்குலகில்

1. **திருநெறிய தமிழிசைத் தமிழும் வளரும்**
2. **இளஞ் சிறார்களும் தாய்மொழியான தமிழைக் கற்கும் வாய்ப்பும் ஏற்படும்.**

தெய்வத் திருமுறைகள் உரியவாறு போற்றப்பட்டு வளர்த்தால்தான் **''ஆய்ந்தோதிய ஒண்தமிழ்'', ''சிவனடியைப் பரவிய செந்தமிழ்''** எனத் திருமுறைகளைச் சைவத்தமிழ் உலகிற்கு அளித்த நாயன்மார்களால் விதந்து போற்றப்பட்ட தமிழும் அதற்குச் சொந்தக்காரர்களான தமிழரும் உலகில் உயர்ந்து சிறப்பெய்துவர்.

உ
கற்பகபதி

# வோல்தம்ஸ்ரோ
# ஸ்ரீகற்பக விநாயகர் கோவில்

2-4, Bedford Road, London E17 4PX,
Tel : 0208 527 3819

அற்புத அருள்புரி கற்பகக் கணபதி
பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்

**எமது ஆலயம் ஆலயத் திருப்பணிகள் மட்டுமன்றி சிறுவர்களுக்கு தேவாரம், பஜனைகள், கற்றுக்கொடுப்பதோடு முதியவர்களுக்கான ஆலோசனை, கலந்துரையாடல்கள் அத்துடன் தாயகத்தில் இன்னலுறும் எம்மவர்களுக்கு கரம்கொடுத்தல் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய பணிகளையும் ஆற்றுகின்றது.**




## 31.08.2015
Sri karpaha Vinayagar Flag Hoisting Day

## 13.09.2015
Sri Karpaha Vinayagar Chariot Festival

# ஐரோப்பாவில் திருமுறைகள் ஊடாக ஆலய அனுபவம் வளர்க்கப்படுகிறதா?

*சைவப்புலவர் வைரவன் கோகிலன்*

தாயகத்தில் நாங்கள் சைவ முறைமைகளை பெரியவர்களிடமிருந்தும் ஆலயங்களிலிருந்தும் பெற்றோம். குறிப்பாக ஆலயங்களும் ஆலயத்தில் இருக்கின்ற சைவப் பெரியார்களுமே சைவநெறியை வளர்த்தனர். ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றபோதும்கூட திருமுறைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் முறைமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான சைவநற் சிந்தனைகள் அருள்மிகு ஆறுமுக நாவலர்பெருமானின் சிந்தனைகளாக அமைகின்றன. எனவே நாவலர்பெருமானின் சிந்தனைகளை முன்வைத்து இந்த ஆய்வு நோக்கப் படுகிறது.

சங்கற்பத்துடன் (எண்ணம் சொல் செயல் மூன்றையும் ஒரு நிலையில் வைத்துச்) செய்யும் சமய காரியங்களும் புண்ணிய செயல்களுமே விரதம் (உறுதியுடன் இறைவனுக்கருகில் இருத்தல் விரதம்) என்று சைவசித்தாந்த அறிஞர் பண்டிதர் மு.கந்தையா அவர்கள் கூறுகின்றார். அவர் கூறும் சமய காரியங்கள், புண்ணிய காரியங்கள் பற்றியும் இங்கு ஆராயப்படுகிறது.

இவர்கள் எமக்குத் தந்துள்ள சிந்தனைகள் விளக்கங்கள் கூடத் திருமுறைகளை முதன்மையாகக்கொண்டே அமைந்துள்ளன. ஐரோப்பாவில் அமைந்திருக்கின்ற ஆலயங்களில் சைவப்பெரியார்கள் காணப்படுவதே அரிதாக இருக்கின்றது. அது மட்டுமல்லாது பெரும்பாலான ஆலயங்களிற் பணிபுரிகின்ற பரிபாலன சபையினரிடையே சைவத்தைப் பற்றிய திருமுறைகளைப் பற்றிய புலமை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக ஆலயங்களுக்கு வழிபாடு செய்ய வருகின்ற மக்களுக்கு முறைமையான சைவஅறிவைக் கொடுப்பதென்பதோ அதேவேளை திருமுறைகளின் சிறப்புக்களை தெளிவாக எடுத்துச் சொல்வதென்பதோ மிகவும் சிரமமாகவே இருந்துவருகின்றது. எனவே எவ்வாறான முறையில் அவற்றுக்கு தீர்வு காணலாம் என்பதனை இக்கட்டுரை நோக்குகின்றது. மகோற்சவ காலங்களிற்கூட மக்கள் பிள்ளைகளுடன் ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருவதற்கு விரும்புவார்கள். ஆனால் புறச்சூழல் அவர்களுக்கு இடமளிப்பதில்லை. இவ்வாறான சூழலில் மிகையான மக்கள் வழிபாடு செய்வதற்கு வரும் தினங்களைக் கவனத்திற்கொண்டு அந்த நாட்களில் நாங்கள் திருமுறைகளை ஒழுங்கான முறையில் திட்டமிட்டு சொல்லிக்கொடுப்பதாலும், சைவசித்தாந்தக் கருத்துக்களையும் ஒவ்வொருவரின் வயதுக்கேற்ற முறையில் சொல்லிக்கொடுப்பதாலுமே பிள்ளைகள் மத்தியில் சமய அறிவையும் சாத்திர அறிவையும் வளர்த்துக்கொள்ளமுடியும். இதனை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம் என்பதனை இக் கட்டுரை நோக்குகின்றது.

ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் சைவம், திருமுறைகள் பற்றிய வழிபாட்டு முறைகள் பற்றிய கருத்துக்களையும், பண்டிதர் மு. கந்தையா அவர்களின் ஆலயம் சார்ந்த கருத்துக்களையும் எடுத்து நோக்கி, திருமுறைகள் சார்ந்த, சைவம் சார்ந்த, ஆலயம் சார்ந்த வழிபாட்டு முறைகளை மாறுபாடன சூழலில் வாழ்கின்ற எம்மவர்கள் மத்தியில் எவ்வாறு எடுத்துச் செல்லலாம் என்பதனையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

பெரியோர்கள் திருமுறைகள் அந்தந்த நாட்டு மொழிகளில் கருத்துக்களைச் சொல்லக்கூடிய முறையில் மொழிபெயரப்புச் செய்து, அதைப் புரிந்துகொள்ளக்கூடிய தன்மையை ஏற்படுத்தியும் உள்ளனர். இருந்தபோதும் திருமுறைகள் தமிழோடு சம்பந்தமுடையது. ஆதலினால் தமிழ் வளர்ந்தாற்றான் திருமுறைகளின் சிறப்புக்களை தெளிவாக உணர்ந்து புரிந்துகொள்ளமுடியும். சைவத்தையும் தமிழையும் ஒன்றைவிட்டொன்று பிரித்துக்கொள்ளமுடியாதது. எனவே தமிழ் கற்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். திருமுறைகளின் பருமட்டான கருத்துக்களை வேற்றுமொழிகளில் அறிந்துகொண்டாலும்கூட ஆழமான கருத்துக்களைத் தமிழைத் தெரிந்துகொள்வதாலேயே முழுமையாக அறிந்துகொள்ளமுடியும். எனவே அதனைப் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறி அதனுடாகச் சைவத்தையும் வளர்ப்பதற்கான வழிமுறைகளையும் ஆராயவிருக்கிறது.

திருமுறைகளே மக்களை இயக்கும் சக்தியாக விளங்குகின்றது. வேதம் ஒரு அறியப்படுபொருளாக இருக்கின்றதே தவிர நடைமுறையில் இல்லை. சிவாகமங்கள், உபநிடதங்கள் எல்லாம் அவற்றை விளங்கிக்கொள்ளக்கூடிய மிக உயர்ந்தவர்களுக்கூடாவே நாம் அறியக்கூடியதாகவுள்ளது. ஆனால் சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருப்பது தமிழ் வேதம் என்று சொல்லப்படுகின்ற திருமுறைகளே.

அதுமட்டுமல்லாது திருமுறைகளிலேயே வாழும்முறை அறிந்து வாழும் வாழ்வியல் கருத்துக்களும், வரலாற்றுக் கருத்துக்களும் செறிந்து காணப்படுகின்றன.

இவற்றின் முக்கியத்துவத்தை நாம் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறுவதனூடாகவே பிள்ளைகள் சமய அனுபவத்தைப் பெறுகின்றனர். பிள்ளைகளுக்குச் சமய அனுபவம் ஆலயத்துக்கூடாவே கிடைக்குமே தவிர, வெறுமனே சமயக் கல்வியைப் படிப்பதால் மட்டும் சமய அனுபவம் ஏற்பட்டுவிடாது. வாழ்விடச் சூழலுக்கேற்ப திருமுறைகள் சார்ந்து சில முறைகளைக் கையாள்வதே நம் அனைவரதும் பணியாக இருக்கின்றது.
--------- " என் கடன் பணி செய்து கிடப்பதே."

சைவப்புலவர்
வை. கோகிலன்
யேர்மனி.

## திருப்புகழ் - இசைவழி வழிபாடு
**("Thiurppugazh – The musical way of worship")**

*கட்டுரை ஆசிரியரின் பெயர் சுகன்யா அரவிந்தன்*

திருமுறைமாநாட்டு ஆய்வுக்கட்டுரைகள் தொகுப்பில் 371ம் பக்கதில் வெளிவந்துள்ள "Thiurppugazh – The musical way of worship" (திருப்புகழ் - இசைவழி வழிபாடு) என்னும் ஆங்கில ஆய்வுக்கட்டுரையின் ஆசிரியரின் பெயர் சுகன்யா அரவிந்தன். (Suhanya Aravinthon) இவர் சென்னைப் பல்கலைகழகத்தில் முனைவர் பட்ட ஆய்வாளராக உள்ளார்.

இவர் ஆய்வுக்கட்டுரையில் பெயரைக் குறிப்பிடாததினால் திருமுறை ஆய்வுக்கட்டுரைகளில் வெளியான இவரின் ஆய்வுக்கட்டுரையில் பெயர் அச்சாகத் தவறிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்.

# THINESH JEWELLERY & TEXTILES

**22ct Gold Jewellery & Designed Indian Clothes**
**Designer Sarees & Punjabi Suit**

என்றும் நியாயமான விலையில், புதுப்புது வடிவங்களில் நீங்கள் விரும்பும் தங்க நகைகளை
பெற்றுக் கொள்ள நம்பிக்கையும் நாணயமும் நிறைந்த ஒரு நிறுவனம்

**உங்கள் மனம் கலரும் வண்ணங்களில் பட்டுப் புடவைகளைப்**
**பெற்று கொள்ள நாடுங்கள்**

01.07.2014 முதல்
எமது ஸ்தாபனத்தாரின்
மாபெரும் ஆடித்
தள்ளுபடி மலிவு
விற்பனை ஆரம்பம்.
அனைத்துபுடவைகளும்
50% விலைக்கழிவில்.



**276, Lewisham High Street, London SE13 6JZ,**
**Tel: 0208 6139569**
**Web: www.thinesh-JT.com**

# ENROL NOW FOR SEPTEMBER 2014

**TEL: 0208 688 5777**

## CROYDON METROPOLITAN COLLEGE

A CENTRE OF ACADEMIC EXCELLENCE

**100% A-C GRADES AT AS LEVEL**
**91% A-B GRADES AT AS LEVEL**
**ACHIEVED AT CMC IN SUMMER 2014**

**1 CMC STUDENT ACHIEVES 4A*S AND GOES TO OXFORD UNIVERSITY TO STUDY MEDICINE.**

- FULL TIME COURSES IN ALEVEL, GCSE, HND & HNC
- PREPARATIONS FOR 11+
- **HOME OFFICE APPROVED**
- **HIGHLY TRUSTED SPONSOR**
- **OFSTED APPROVED**

### Travelling to CMC

By Train - Nearest stations are East Croydon/West Croydon *(See map)*
By Bus - 50, 60, 119, 312, 407, 412, 466, 468, 612
By Tram - Nearest stop is at George Street

### General Information

Croydon Metropolitan College
30-32, South End, South Croydon, Surrey, CR0 1DN

The Chartered Institute for IT

**CMC NOW PROVIDES BCS HIGHER QUALIFICATIONS**

WE ARE AN OFFICIAL EXAMINATION CENTRE FOR ALL UK'S LEADING EXAM BOARDS

SUBJECTS PROVIDED HERE AT CMC:

- MATHEMATICS
- ENGLISH LITERATURE
- BIOLOGY
- CHEMISTRY
- PHYSICS
- GEOGRAPHY
- HISTORY
- GOVERNMENT & POLITICS
- PSYCHOLOGY
- ECONOMICS
- RELIGIOUS STUDIES
- BUSINESS STUDIES
- PHILOSOPHY
- GERMAN
- FRENCH
- SPANISH
- ICT
- ESOL

*'CMC EMBRACES OUR INDIVIDUALITY AND HELPS IT FLOURISH'*
*- IMRAN ALI (AS STUDENT)*

*30-32, SOUTHEND, CROYDON, SURREY, CR0 1DN*
*Tel: 02086885777*
*Fax: 02086885776*
*Email: admin@croydonmet.org.uk*



## *Siva Yoga Siddhantham*



Thorough Babaji and eighteen siddha's grace the second world Thirumurai festival is going to take place in London. We congratulate the organisers of this event. As we all know, it is an uphill task to organise such an event. Let us all pray for the presence and blessings of Babaji and the 18-siddhas to make this a successful event. By their grace, let us all promote Siva yoga Siddhantham through the scientific art of Yoga. ........................ Yogi Ram Sunthar of UKBYS (Universal Kriya Babaji Yoga Sangam)

The great siddhar Thirumoolar says in these two lines:
"வளியினை வாங்கி .வயிற்றில் அடக்கில் பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாந்......

if one breaths in more and more air (that is: if one practices Breathing (Pranayam), using various techniques then even the body gets old (with narai, thirai and mooppu (old age, grey hair & desease)) one will feel always young. வளி means air. Then he sys:

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

people do not know how to breath propely. If they learn the ratio of proper breathing, ie: practicing pranayam correctly, then they can kick the lord of death (கூற்றை = yaman, the lord of death) that is to say they can live for many many years healthly.

One of the meanings for the word "VAASI" is breath. Vaasi Yogam is therefore, in yogic terms Pranayama or the scientific art of mastering the breath. Breath is life. One can live without food or water for days but without breath one cannot live even a few minutes. Pranayam is the most important way of increasing pranic energy and oxygen in the system, especially with today's sedentary life style it can be easily practiced anywhere. The Siddhas developed breathing exercises to energize the system, to calm the mind for meditation by regulating the prana (life force) and to activate the Kundalini Energy.

Prana or life energy is also known as Chi by the Chinese. Mana by the Polynesians, Orendo by the Amerindians and Od by the ancient Germans. Like electricity, prana travels along pathways called Nadis in the subtle or light body (Vital-Body) and is present in every cell of our body. Modern scientists are only just beginning to understand the different forms of energy within the microcosm and studies by a German researcher Dr Popp (1984), have demonstrated the presence of Bio-photon energy at a cellular level which seems to be Prana itself.

Dr Popp's study was particularly aimed at showing how a high raw diet which is packed full of life force can change energy emissions at a cellular level thus giving a scientific slant to the saying "You are what you eat". A good supply of Pranic energy from both food and breath is therefore necessary to maintain a healthy life-style. Siddha Roma Rishi in his works recorded that people were living to at least a hundred years of age.

Roma Rishi also observed that people were breathing 21,600 times daily– this is what the third and fourth lines of the verse say. If 21,600 is divided by 24 then again by 60 it gives a respiration of 15 per minute. These centenarians were breathing at a rate of 15 respirations a minute which is very close to the figure of 18 respirations a minute which today is considered a good rate of breathing by modern medical standards.

**சித்தர்கள் கண்டயோகம்:**

*"ஓம் என்ற கெட்ட புத்தி மாணா கேளே!*
*உலகத்தில் மானிடர்க்காம் ஆண்டு நூறே:*
*ஆம் என்றே இருபத்தோர் ஆயிரத்தோடு*
*அறுநூறு சுவாசமல்லோ ஒரு நாளைக்குப்*
*போம் என்று போனதனால் நாள்குறைந்து*
*போச்சு அது போகாவிட்டால் போவதில்லை;*
*தாமொன்று நினைக்கையிலே தெய்வம் ஒன்று*
*தான் நினைந்த தன்மைல்லோ விதிகள் தாமே"!.*

***...........ரோம ரிஷி ஞானம் 13ம் செய்யுள்***

***Ulakathil manidarkkam aandu nurey***
***Aam entray irubathor aayirathodu***
***Arunuru suvasamello oru nalaikku***
***Pom entru ponathinal nal kurainthu***
***Pochuthu atu pokaviddal povathilai***
***Tham ontru nenaikkayile theivam ontru***
***Than ninaintha thanmai allo vithigal thame...***

***................................Romarishi song of wisdom verse no.....13***

If a person breathes at the rate of 15 respirations per minute, his span of life is 100 years. As revealed by Babaji, the direct disciple of Agasthiar, the law of inverse proportion applies to the rate of breathing.

It means: "Greater the rate of breathing smaller the span of life; lesser the rate of breathing greater the span of life", If the rate of breathing is 5 respirations per minute then the span of life should be 300 years. This is how Siddhas lived for hundreds of years. Then in the fifth and sixth lines Sage Roma says:

***"If it goes it goes; if it does not go it will not go"***

That is to say, if the respiration per minute is 1 then the span of life is 1500 years. If a Yogi attains Samadhi, the breathless state of communion with God he will not die. This is called the state of physical immortality or Soruba-Samadhi in Tamil Siva Yoga Siddhantham.

One must learn to breathe slowly and deeply in order to reduce the rate of breathing from 18 breaths /minute to 15 breaths /minute to live a long and healthy life. To show one should breathe 21,600 times per day, the Siddhar, Thirumoolar advised the construction of the golden kopuram in Chidambaram Nadarajar Temple (Thillai) with 21,600 tiles. If one breathes 21,600 times per day, the 72,000 major nadis (psychic channels) will be purified. Therefore, 72000 nails were also used in the construction of this kopuram.

On the top of Babaji Yoga Hall, a similar Nadarajar Temple kopuram with 21,600 golden tiles & 72,000 golden nails has also been constructed by "The Saiva Munnetra Sangam", UK, No 2, Salisbury Rd Manor Park London E12 6AB, UK.

Proper breathing (Pranayam) teaches one, how to re-charge the body and to control the mental state by regulating the Prana (life-force). Let us all practice Babaji's Kriya yogam to attain Immortality as said by the great yogi Bharathiar: "யோகத் திருத்திவிடு - அல்லாலென்றன் ஊனைச் சிதைத்துவிடு"

*......................... Yogi Ram Sunthar of UKBYS (universal kriya Babaji Yoga Sangam)*


## OM SHAKTHIVEL OM

# SHAKTHI VEL TEMPLE

## OPENING HOURS:

## Mon - Tue: 8am - 3pm & 7pm - 11pm

## Fri: 8am - 3pm & 6pm - 11pm



**Shakthivel Hindu Association: 657, Green Lanes, London, N8 0QY**

**Phone: +44 (0)203 640 8113**

**Email: omshakthivelan@gmail.com**

**Web: www.shakthivel.co.uk**

**SHAKTHI.VELAN.7**


SURIYA JEWELS
சூர்யா ஜிவல்லர்ஸ்
"உண்மை வெல்லும்"
விதவிதமாய்,
வித்தியாசமான
டிஸைன்கள் உங்கள்
அழகிற்கு அழகூட்டிடும்.
உங்கள் பழைய பவுண்களை கொடுத்து
புதிய நகைகளை வாங்கலாம்
அது மட்டுமல்ல நீங்கள் செய்யும்
Orderகள் குறித்த நேரத்தில்
செய்து தருவதில்
வல்லுனர்கள்
மலிவான விலையில் தரமான தங்கத்திற்கு Eastham இல்
292 HIGH STREET NORTH, LONDON E12 6SA
Tel: 020 8552 2224

திருச்சிற்றம்பலம்

# சைவ திருமுறைகள்.....

சைவசமய நூல்கள் என்பதற்க்கப்பால் ஒரு கண்ணோட்டம்.....

ஆக்கம்:- Dr.(வைத்திய கலாநிதி) Mrs(திருமதி), கையிலைமணி கருணாதேவி இரத்தினராசா.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்" என்கிறது ஒரு ஔவையர் பழம்பாடல்.

(பிள்ளையார் அகவல் எனும் நூலை படித்தால் அதை ஆக்கிய ஔவையார் யோகாசனத்தில் மிகவும் புலமை பெற்றவர் என்பது தெரியும்).

இதன் கருத்து, திருக்குறள், நான்கு வேதங்கள், தேவாரம், திருவாசகம் எல்லாம் திருமந்திரம் சொல்வதைதான் சொல்லுகிறது என்பதும், எனவே இவற்றை படிக்கும் பலனை திருமந்திரம் மட்டும் படிப்பதாலேஅறிந்துவிடலாம் என்பதும் உண்மையாகிறது. இப்படிப்பட்ட பத்தாவது திருமுறையாம் திருமந்திரத்தை ஏன் எமது பாடசாலைகள் பிள்ளைகளுக்கு முக்கியபடுத்தி அறிமுகபடுத்தவில்லை நோய்தடுக்கும் நோய்தீர்க்கும் யோகாசனத்த்திற்கு தமிழ் பாடநிரலில் ஏனோ முக்கிய இடமில்லை. (இது ஒரு வைத்தியரான எனக்கு மிகுந்த மனவேதனை அளிக்குமொன்றாகும்).

இது எமது மொழி இன்றும் இளமை மாறாமல் வளத்ததுடன் இருப்பதையும் தெரிவிக்கிறது. அத்துடன் தமிழர்களின் சரித்திரமும் இதில் அடங்கியுள்ளது. இவையெல்லாம் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்தடிருப்பதால் அந்தந்த காலத்தில் தமிழர்கள் வாழ்வும் வளமும் எப்படி இருந்தன என்பதனை அறியவும் ஏதுவாகிறது.

**பன்னிரண்டு திருமுறைகளும் பின்வருமாறு:-**

**முதலாம் இரண்டாம் மூன்றாம்** திருமுறைகள் திருஞான சம்பந்தர் மூர்த்திநாயனாரின் தேவாரபதிகங்களாகும். இவை திருக்கடைக்காப்பு என்று அழைக்கப்படும். இவர் இலங்கையின் திருகோணமலை, திருகோணேசுவரரை போற்றி திருகோணமலை பதிக்கத்தையும், திருக்கேஸ்வரரை பாடி திருக்கேஸ்வர பதிகத்தையும் அருளிச்செய்தார்.

**நாலாம் ஐந்தாம் ஆறாம்** திருமுறைகள் திருநாவுக்கரசுநாயனார் அருளிய தேவாரங்கள் ஆகும்.

**ஏழாம்** திருமுறை சுந்தரமூர்த்திநாயனார் அருளிய திருப்பாட்டு ஆகும்.
எட்டாவது திருமுறை திருவாசகமும் திருச்சிற்றம்பலக்கோவையாரும் ஆகும். இயற்றியவர், பாண்டியனாட்டின் பிரதம மந்திரியாக இருந்த மாணிக்கவாசகர் ஆவர். இவர் இறைவனால் தடுத்தாளப்பட்டு ஆவுடையார் கோவிலை கட்டியவர். இங்கே இருக்கும் சிற்பங்கள் ஒவ்வொருவரும் கண்டு களிக்கவேண்டியவை .

**ஒன்பதாவது** திருமுறை திருவிசைப்பாவும் திருப்பால்லாண்டு, சேந்தனார், திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருசோத்தம நம்பி, சேதிராயர்.

**பத்தாவது** திருமுறை பதினேட்டு தமிழ் முதன்மை சித்தர்களில் ஒருவரான திருமூலரால் அருளிச்செய்யபட்ட திருமந்திரம் ஆகும். இது மூவாயிரத்து நாற்பத்தாறு (3046) பாடல்களை கொண்டது.

**பதினோராம்** திருமுறை பிரபந்தம் என அழைக்கப்படும் நாற்பது (40) நூல்கள் அடங்குக்கின்றன . இது திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமாள் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகியோரால் அருளிச்செய்யப்பட்டன.

**பன்னிறெண்டாம்** திருமுறை, அநபாய குலோத்துங்க சோழ பேரரசின் முதன்மை அமைச்சராக பணிபுரிந்த சேக்கிழார் பெருமானால் அருளி ச்செய்யப்பட்ட திருத்தொண்டர் புராணம் ஆகும். இது நாலாயிரத்து இருநூற்றி ஐம்பத்தி மூன்று (4253) பாடல்களை கொண்டது. இது அறுபத்திமூன்று (63) நாயன்மாரின் வாழ்க்கை வரலாற்றை பாடல்களாக கூறுகின்றது. இது ஐந்தாவது வேதம் என்று அழைக்கப்படுகிறது.

திருமுறைகளை ஆக்கி எமக்கருளியவர்கள் எப்படி இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டார்கள் என்பதும் அவர்கள் வாழ்க்கை வரலாறுகள் எமக்களிக்கும் மிகவும் சுவாரசிகமான பாடங்களும் சொல்லில் அடங்காதது.

ஆலய அமைப்பு, கட்டிட கலை, திருக்கோவில் அமைப்பு, திருவழிபாடு , தெய்வங்களின் மந்திரம், எந்திரம் ஆகியன பற்றி கூறுகின்றன. இவை அனைத்தும் திருமூலர் எழுதிய திருமாந்திரத்த்தில் உண்டு.

திருமூலர் வரலாறு பற்றி குறிப்பிடுவது சாலச் சிறந்தது என்று நினைக்கின்றேன்.
திருமூலர் காலம், சமணசமயமும் புத்தசமயமும் எமது மண்ணுக்கு வரமுந்திய கடைசாங்க காலமாகும். அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவரான திருமூலர் பதினென் தமிழ் முதன்மை சித்தர்களில் ஒருவரும் ஆவார். இவர் கைலாய பரம்பரையில் வந்தவர். இவரது முழுப்பெயர் சுந்தரநாதர்.

இனி, இவர் எப்படி திருமந்திரமாம் தமிழ் வேதத்தை, ஐந்தாம் வேதத்தை அருளினார் என்று பார்ப்போம்.

அ + உ = "ஓ" என்பதனை பரம்பொருள், பரநாதம் பரவிந்து வழியாக அ, உ ஆகியவையின் சேர்க்கை மூலம் "ஓம் என்பதனை சதாசிவமூர்த்திக்கு உணர்த்தினார்கள். இதன் விளக்கமாக கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கிய முகங்களின் வாயிலாக நான்கு வேதங்களையும் அருளிச்செய்தார். மேலும் இந்த நான்கு முகங்களுக்கும் மேலே நடுவில் வடகிழக்கு திசையை நோக்கிய வெண்மையான ஈசானமுகத்தின் (இதை தான் கைலாயமலை விளக்குகிறது) மூலம் ஆகமப்பொருளை தொகுத்து அனந்தருக்கு உபதேசம் செய்தார். அனந்தர் அதனை ஸ்ரீகண்டருக்கு அருளிசெய்தார். ஸ்ரீகண்டர் அதனை நந்திக்கு அருளிசெய்தார். நந்தி அதனை திருமூலர், பதஞ்சலி, வியாகிரபாதர், சிவயோக முனிவர், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் (இந்த கடைசி நால்வரும் சனகாதியர் என அழைக்கப்படுவர்) ஆகிய எண்மருக்கு உபதேசித்தார்.

திருமூலர் தான் கற்றதை மாலங்கன், இந்திரன், சோமன், பிரம்மன், உருத்திரன், காலாங்கன், கஞ்சமலையன் ஆகிய எழுவருக்கு உபதேசித்தார்.

யோகேஸ்வரனான சிவபெருமான் யோகக்கலையை பார்வதியின் சேவையில் மகிழ்ந்து அவவுக்கு அருள, அவர் அதனை நந்தி பெருமானுக்கு அருளினார். நந்தி அதனை திருமூலருக்கு அருளிசெய்தார்.

இவர் தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்திய முனிவரிடம் உள்ள நட்பினால் தமிழ்நாடு நோக்கி பொதியமலை நோக்கி பயணிக்கும் வழியில் உள்ள திருக்கேதாரம், நேபாள பசுபதிநாதர், அவிமுத்தம் (காசி), திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்), திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி, திருவதிகை வீரட்டானம், சிதம்பரம் எல்லாம் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறை அடைந்தார். இவர் திருவாவடு துறையினை ஒட்டியதாக அதன் தென்புறம் உள்ள காவிரிக்கரையில் உள்ள சாத்தனூரில் மாடு மேய்ப்பனான மூலனை இழந்து தவித்த மாடுகளுக்கு உதவ அவனுடலில் புகுந்தார் திருமூலர். ஆனால் இறைவன் அருளால் அவர் உடல் மறைய, அவர் மூலன் உருவில் திருமூலாரானார்.

இவர் திருவாவடுதுறையில் அரச மரத்தடியில் யோகம் புரிந்தார். ஒன்பது தந்திரங்களாக பிரிக்கப்பட்ட மூவாயிரம் பாடல்களை கொண்ட திருமந்திரத்தில் யோகநெறியை உலகிற்கு அளித்தவர் திருமூலர் ஆவார். இவருடன் சமகாலத்தில் வாழ்த்தவரான ஒரு தமிழ் சித்தாராம் பதஞ்சலி முனிவர் யோககலையை சமஸ்கிருதத்தில் இயற்றினார்.

இப்பன்னிரு திருமுறைகளிலொன்றான பத்தாம் திருமுறை எனும் திருமந்திரத்தையும் படித்து பயன்பெறுவோமாக.

இவ்வரிய நூல் திருமந்திரம் இல்லத்தில் இருந்தால் இறைவனே இல்லத்தில் எழுந்தருளுவார் என்பர். திருமூலர் வாக்குப்படி அன்பே சிவம் என்று உணர்வோமாக.
மக்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள்:-

1. திருமந்திரம் விளக்கவுரையுடன் பாகம் - 1, 2, 3.
   ஆக்கம்:- சிவகாமியின் செல்வன் டாக்டர் தி.பாலசுப்ரமணியம்.
2. அறுபத்து மூவர் கதைகள் - பெரிய புராணம்.

UCMAS
MENTAL ARITHMETIC - SINCE 1993

This unique educational approach, improves students from their very basic knowledge of numbers to the mastery of mental arithmetic.

# 5yrs+

Contact:

**Select Academy**

**07776 060 003**

**10-20 minutes practice everyday**

**Weekly 2 hour Teaching & Learning sessions**

**Structured syllabus for every level - No repetition**

**Each level completes in 12 weeks**

**Simple level assessments**



ARITHMETIC IS ALL FUN AND GAMES NOW!

| LEFT Brain | RIGHT Brain |
| --- | --- |
| *Logic* | *Creativity* |
| *Analysis* | *Imagination* |
| *Sequencing* | *Holistic Thinking* |
| *Language* | *Non-Verbal* |
| *Computation* | *Visualisation* |



***Developing the potential of the LEFT & RIGHT brain to unleash your Child's Intelligence***

Select Academy

# என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

# Hindu Tamil Cultural Association (Enfield)

www.ambaal.org Tel: 0208 884 3333



## Salangai Vinodham

3rd Year Mega Dance Competition 2014

இந்து தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)
மற்றும் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
பெருமையுடன் வழங்கும்

சலங்கை விநோதம் 2014

## Grand Final

Sunday 5th October 2014
5.00 PM Onwards
Greenford Theatre, Ruislip Road UB6 9QN

Ambaal TV

www.ambaal.org
என்ற இணைய முகவரியிலும்
IPTV Box இலும்
iPad, iPhone போன்ற சாதனங்களிலும்
அம்பாள் தொலைக்காட்சி
ஒளிபரப்பாகின்றது.

உங்கள் வியாபார ஸ்தாபன விளம்பரங்களை
அம்பாள் தொலைக்காட்சியில் மிகவும் குறைந்த
கட்டணத்தில் விளம்பரம் செய்ய
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி:
0208 884 3333

உங்கள் அம்பாள் தொலைக்காட்சியில்
புதிய தொலைக்காட்சித் தொடர்களை கண்டு மகிழலாம்

கலைத் துறையில் உங்கள் பிள்ளைகளை வளர்த்தெடுக்க




Keyboad வகுப்புகள், வீணை வகுப்புகள், மிருதங்க வகுப்புகள்
இவற்றுடன் வாய்ப்பாட்டு இசை வகுப்புகள்

## 'தாயின் நிழல்'

உணவளிப்போம்





உங்கள் விசேட தினங்கள் மற்றும்
விழாக்களுக்குத் தேவையான
அனைத்து விதமான பூமாலை,
பூக்கள், மாவிலை, தோரணம்
போன்ற அனைத்தையும்
என்பீல்ட் நாபூசணி அம்பாள்
ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்

### Temple Opening Times

Mon, Wed, Thurs
08:00 - 13:00
& 17:00 - 21:15

Fri, Sat, Sun:
08:00 - 21:15

Tue: 06:30 - 21:15

# சைவத்தின் தொன்மையாகவும் தொடர்ச்சியாகவும் திருமுறைகள்

சைவப்புலவர் திரு.க. சிவானந்தன். இலண்டன்

## தமிழ் நாட்டில் சைவம்

தமிழ் மக்களுடைய சரித்திரத்திலே மிகப்பழங்காலக் கட்டடத்தை காலநிர்ணயம் செய்யக்கூடிய வரைமுறையான நூல்கள் எதுவுமே இன்று இல்லையென்றே கூறவேண்டும். அதையடுத்து பழங்காலம் என்று கருதத்தக்க கி.மு.500இலிருந்து கி.பி200வரையிலான காலத்திலே எழுந்ததாக பெரும்பாலான வரலாற்றாசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்கள் பல காலவெள்ளத்தின் கோரச்சூழலுக்குத் தப்பி முழுமையாகவோ பெருமளவுக்கு முழுமையாகவோ நமது காலத்திலும் ஒளிவீசித் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒல்காப்புகழ் தொல்காப்பியமும் அணுவைத் துளைத்தேழ் கடலைக் குடித்து குறுகத்தறித்த திருக்குறளும் இவற்றுள் அடங்கும். கடற்கோள்

இவற்றுள்ளே தொல்காப்பியம் மாயவனையும் முருகனையும் கொற்றவையையும் இந்திரனையும் நேரடியாகவே குறிப்பிட்டுப் பேசுகின்ற காரணத்தினால் 2000ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் தமிழ்மக்களிடையே சிவவழிபாடு நிலவி வந்திருக்கின்றதென்பது புலனாகிறது. இயற்கை அனர்த்தங்களினால் உள்நாட்டுப் பூசல்கள், முடியுடை மூவேந்தர்களுக்கிடையிலான சண்டைகள் வெளிநாட்டுப்போர்கள் எத்தனையெத்தனையோ சோதனைகள் வேதனைகள் தமிழ்நாட்டின் வாழ்வியலை பல்வேறு மாற்றங்களுக்குட்படுத்தின. இவற்றினால் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களுக்கு ஈடுகொடுத்து அன்றிலிருந்து இன்றுவரையிலும் சைவசமயம் தொடர்ச்சியாகவே தமிழ்நாட்டில் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

கி.பி 2ம்நூற்றாண்டிலே தமிழ்நாட்டிலே சைவசமயம் முன்னெப்போதுமில்லாத சோதனைகளைச் சந்திக்க நேர்ந்தது. களப்பிரர் என்னும் வெளிநாட்டினர் தமிழ்நாட்டின் அரசுகளை வென்று ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினார்கள். இவர்கள் சமணசமயத்தை அரச மதமாகப் பிரகடனப்படுத்தி மற்றைய மதங்களைக் குறிப்பாக சைவ, வைஷ்ணவ, மதங்களைச் சேர்ந்த மக்களை பெரிதும் அல்லல்களுக்கு உட்படுத்தினார்கள். அதுமட்டுமன்றி சிற்பக்கலை,ஓவியக்கலை, இசைக்கலை, நிருத்தக்கலை, எனப்பல்வகைப்பட்ட கலைகளில் ஒன்றைக்கூட ஆதரிக்கவில்லை. எனவே மக்களது சமயவாழ்க்கையும் கலை வாழ்க்கையும் ஒருங்கே பாதிக்கப்பட்டன. தமிழ்நாட்டின் வரலாற்றில் கி.பி.2ம்நூற்றாண்டிலிருந்து கி.பி.6ம்நூற்றாண்டு வரையிலான காலம் இருண்டகாலம் என்றே வர்ணிக்கப்படுகின்றது.

கி.பி 6ம்நூற்றாண்டின் இறுதியில் தமிழ்நாட்டின் அரசியல் நிலமை பெரிதும் மாறுதல் அடையத் தொடங்கியது. வடக்கே பல்லவர்களான சிம்மவிஷ்ணுவும் அவன் மைந்தனும் களப்பிரர் ஆட்சியை ஒழித்து தமது ஆட்சியை நிறுவினார்கள். தெற்கே கடுங்கோன் எனும் பாண்டியன் மாற்றாராகிய களப்பிரரின் வலிதொலைத்து மதுரையிலே மீளவும் மீன்கொடியைப் பறக்க விடுகின்றான். ஆட்சி தமிழ் அரசர்கள் கைகளுக்கு மாறியபோதும் சமயம் சமணசமயமாகவே தமிழகமெங்கும் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது. இந்த நேரத்திலே இருளைக் கிழிக்கின்ற சூரியனைப்போல் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரிலே ஓர் குழந்தை பிறந்தது. தெரிந்துதான் பெயரிட்டார்களோ தற்செயலாக இட்ட பெயரோ அக்குழந்தைக்கு அறிமையாகிய இருளை நீக்கின்றவன் என்ற கருத்துப்படும்படியாக மருள்நீக்கி என்னும் பெயரை இட்டார்கள். இக்குழந்தை வளர்ந்து சமணசமயத்திற்கு மாறியதும் காஞ்சியிலுள்ள மிகப்புகழ் வாய்ந்த சமணகடிகை ஒன்றின் தலைவராக தருமசேனர் எனும்பெயருடன் விளங்கியதும் அனைவரும் அறிந்த கதைகளே. அந்த நாளில் காஞ்சி உலகத்து நகரங்களுள் செல்வச்செழிப்பாலும் வாணிப வளத்தாலும் கல்விச்சிறப்பாலும் ஓர் இணையில்லா நகரமாக விளங்கியது. கல்வியிற் கரையிலாக் காஞ்சிமாநகர் என்றே தமிழில் வழங்கப்பட்ட இம்மாநகர் பாரவி எனும் மிகப்புகழ் வாய்ந்த சமஸ்கிருதக் கவியினாலே புஷ்பேஷ ஜாதி புருஷேஷ விஷ்ணு நாரீஷ ரம்பா நகரேஷ காஞ்சி என்னும் அமர சுலோகத்தாலே வர்ணிக்கப்படுகிறது. இந்த நாட்டை மகேந்திர பல்லவன் என்ற கீர்த்தியுடைய மன்னன் ஆண்டு வந்தான். அவன் வீணை,யாழ், முதலிய இசைக்கருவிகளை வாசிப்பதிலே தேர்ந்தவனாகவும் சிற்ப சித்திர ஓவியக்கலைகளிலே தேர்ந்தவனாகவம் இருந்தான். பலபல புகழ்பெற்ற கலைஞர்களை ஆதரித்தான். புகழ்பெற்ற சீனதேசத்து யாத்திரீகரான யுவான்-சுவாங் என்பவர் இம்மன்னனது அரசவைச் சிறப்பையும் காஞ்சிநகரின் எழிலையும் வளத்தையும் நேரில் கண்டு புகழ்ந்து மகிழ்ந்துள்ளார் என்பதைச் சரித்திரவாயிலாக அறிந்துள்ளோம். இம்மன்னனும் அவனது சரித்திரப்பிரசித்தி பெற்ற

என்ற பாணரது மனைவியையும் அழைத்துச்சென்று தம்மை உபசரித்த பிராமணர் இல்லங்களிலே அவர்களும் தங்கும்படியாக ஏற்பாடுகள் செய்துள்ளார்.
சமணசமயம் இல்லறத்தை இகழ்ந்து துறவறத்தைப் போற்றியது. "மண்ணில் நல்ல வண்ணம்" என்ற பாடலின் மூலம் திருஞானசம்பத்தப்பெருமான் இல்லறத்தில் இருந்தவாறே இறைவனை அடையமுடியும் என்று போற்றுகின்றார். 1300ஆண்டுகளுக்கு முன்னர் இத்தகைய புரட்சிகளைச்செய்த திருஞானசம்பந்தப் பெருமானுக்கிணையான இன்னுமோர் புரட்சிவாதியை தமிழன்னை இன்றளவும் பெறவில்லை. திருஞானசம்பந்தப்பெருமானின் பெருமைகளைத் தமிழுலகமும் சைவஉலகமும் இன்னும் சரிவர அறிந்து போற்றவில்லை என்றே கூறவேண்டியுள்ளது.

இவ்விரு நாயன்மார்களும் தொடக்கி வைத்த பக்திஇயக்கம் அடுத்த 600ஆண்டுகளுக்குப் பெருக்கெடுத்து ஓர் ஆறாகவே ஓடத்தொடங்கியது. இந்நாயன்மார்கள் காலத்துக்கு 250ஆண்டுகளின் பின்னால் நலிந்து கிடந்த சோழசாம்ராச்சியம் தலைநிமிரத் தொடங்கியது. இரண்டு கால்களையும் இழந்து நடக்கமுடியாது ஊனமுற்றிருந்த விஜயாலயன் என்னும் சோழமன்னன் திருப்புறம்பயம் என்னுமிடத்திலே நிகழ்ந்த போரிலே பல்லவர்க்கு உதவியாகச்சென்று பாண்டியர்களைத் தோற்றோடச்செய்தவன். 96விழுப்புண்களை இம்மகாவீரன் தனது மேனியிலே சுமந்தகாரணத்தினால் புலவர்கள் இவனை "தொண்ணுறும் ஆறும் புண் சுமந்த திருமேனி" என்று புகழாரம் சூட்டிப்பாடியுள்ளார்கள். இவனைத்தொடர்ந்து 350ஆண்டுகளுக்கு சோழர்குலம் உதய ஞாயிறுபோல் ஒளிவிட்டும் பிரகாசித்து வளர்ந்தது. சிற்றரசு பேரரசாக வளர்ந்து சாம்ராச்சியமாக வலிமையுறத்தொடங்கியது. இச்சோழ மன்னர்கள் சைவர்களாதலாலே காவிரியின் கரைகள் தோறும் சிவாலயங்களை எடுப்பித்தார்கள். சிதம்பரத்துக்கு பொற்கூரை வேய்ந்த பராந்தகசோழன் 64கற்றளிச் சிவாலயங்களை நிர்மாணித்தான் எனக்கூறுகிறார்கள். மன்னனுடைய இரண்டாம் புத்திரராகிய கண்டர் ஆதித்தர் என்பவர் ஏழாண்டுகாலம் சோழநாட்டை ஆட்சிசெய்த பின்னர் துறவு பூண்டு சைவத்திருப்பணியிலே ஈடுபட்டு வாழ்ந்தவர். திருவிசைப்பா திருப்பல்லாண்டாகிய ஒன்பதாம் திருமுறையிலே தில்லையெம்பெருமானை வழுத்தி இவர்பாடிய பதிகம் ஒன்று உள்ளது.

வலிமைகொண்ட சோழர்களுடைய சாம்ராச்சியத்திலே தமிழும்சைவமும் போற்றி வளர்க்கப்பட்டன. கி.பி.12ம்,13ம்,14ம், நூற்றாண்டுகளிலே சைவசமயத்தின் கோட்பாடு களையெல்லாம் தத்துவரீதியாக வடிக்கின்ற முயற்சிகள் தோன்றின. இதன் விளைவாக சைவசித்தாந்த சமயத்தில் சாத்திரங்கள் எனப்போற்றப்படுகின்ற பதினான்கு நூல்கள் தோன்றின. இவற்றுள் தலையாய நூல் மெய்கண்டதேவர் எனும் ஞானி இயற்றிய சிவஞானபோதம் எனும் சாத்திர நூலாகும். 15ம் நூற்றாண்டின் பின்னர் தமிழ்நாட்டின் ஆட்சி மீண்டும் வேற்று இனத்தவர் கைகளிலே சிக்கியது. அரச ஆதரவு சைவசமயத்திற்கு கிட்டாது போனாலும் மடங்கள் சைவசமயத்தைப் பேணுவதிலே பெரும் தொண்டாற்றின. பிறமதங்களும் கலாச்சாரங்களும் சைவசமயத்தைப் நலிவடையச்செய்தன. எனினும் அவற்றால் சைவசமயத்தை முற்றாகவே அழித்துவிட முடியவில்லை.
கி.பி.12ம்நூற்றாண்டிலிருந்து கி.பி17ம் நூற்றாண்டுவரையிலே யாழ்ப்பாணஇராச்சியம் சைவப்பாரம்பரியத்தைத் தொடர்ந்து பேணி அளப்பெரும்பணி புரிந்துள்ளமை வரலாறு சொல்லுகின்ற ஓர் செய்தியாகும். சைவத்தை அழிந்து விடாமல் காத்து இலங்கையில் 19ம்நூற்றாண்டின் இறுதியிருந்து இன்றளவும் நிலைபெறச்செய்த தவத்திரு ஸ்ரீலஸ்ரீ நல்லைநகர் ஆறுமுகநாவலர்பெருமான் அவர்களையும் சைவவரலாற்றை எழுதப்புகும் எவராலும் மறந்துவிட முடியாது. தனித்துவமான பண்புகள் கொண்ட இலங்கையில் சைவத்தின் வரலாறு என்னும் விடயம் வேறொரு கட்டுரையில் தனித்து ஆராயப்படும்.
20ம்நூற்றாண்டில் ஏற்பட்ட விஞ்ஞான முன்னேற்றங்களும் தொழில்நுட்ப வளர்ச்சிகளும் மக்களுடைய மனப்போக்கினை புதியதோர் பாதையில் திருப்பின. சமயத்தினை எதிர்த்து நாத்திகவாதம் பேசும் போக்கும் மக்களிடையே பரவலாக வளர்ந்து வருகின்றது. இந்நிலையிலே சைவத்தைப் பராமரித்துப்பேணி வளர்க்கும்பணி கடினமானது என்பதற்கு ஐயமில்லை.புலம்பெயர் நாடுகளிலே சைவசமய சார்புள்ள நிறுவனங்கள் திருமுறைகளை ஓதும் போட்டிகளின் மூலமும் தேவாரத் திருவாசகப் பாடல்களை பயிற்றுவிக்கும் வகுப்புகளின் மூலமும் சைவசித்தாந்தப் பயில்நெறிகளின் மூலமும் சைவத்தை இளஞ்சமுதாயத்தினரிடையே அறிமுகம் செய்யவும் பிரபல்யமாக்கவும் முயன்று வருகின்றன. இம்முயற்சிகளுக்குத் தோள்கொடுக்க வேண்டியது ஒவ்வொரு சைவசமயியினதும் கட்டாய கடமையாகும்.
திருமுறைகளைப்பண்ணோடு ஓதும் இந்த விழாவை மிகப்பிரமாண்டமான முறையிலே இலண்டனில் ஏற்பாடு செய்து சைவ இளைஞர்கள் புனிதமான எமது பாரம்பரியத்திலே தொடர்ந்து வீறுநடைபோட வைத்திருக்கின்ற பண்ணிசைவிழா அமைப்பாளர்கள் இவ்வகையில் எம் அனைவரது பாராட்டுக்கும் நன்றிக்கும் உரித்தானவர்கள் ஆகின்றார்கள். இவர்களது முயற்சி தொடரவும் மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் புகழோடு விளங்கி வளரவும் கருணாமூர்த்தியான எம்பெருமானை அனைவரும் கரம்கூப்பி வணங்குவோம்.

நரசிம்மபல்லவன் என்னும் மாமல்லனும் உலகில் என்றும் அழியாத சொப்பன புரியாக கல்லிலே கலைவண்ணம் கூட்டி மாமல்லபுரம் என்னும் இணையற்ற நகரை உருவாக்கினார்கள். இன்றைக்கும் 1300ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த சிற்பங்களின் நேர்த்தியைக்கண்டு நாம் மெய்மறந்து விடுகிறோமல்லவா.

சைவசமயம் மீண்டும் புத்தொளிபெற்று விளங்கச்சித்தம் கொண்ட எம்பிரான் காஞ்சி நகரத்தையும் கலைகளில் தேர்ந்த மகேந்திரபல்லவன் காலத்தையும் தேர்ந்து எடுத்தான். மருள் நீக்கியார் சூலை நோய்வாய்ப்பட்டுத் தமக்கையாராகிய திலகவதியார் தூண்டுதலினாலே மீண்டும் சைவத்திற்குத் திரும்பி அட்டவீரட்டானத்தலங்களுள் ஒன்றான திருவதிகை வீரட்டானத்தலத்திலே சூலைநோய் நீங்கப்பெற்ற கதையையும் நாமனைவருமே நன்கு அறிவோம்.சமணர்களது தூண்டுதலினாலே நாவுக்கரசருக்கு நஞ்சூட்டிய உணவை வழங்கியும் நீற்றறையில் அடைப்பித்தும் யானையைவிட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டும் அரசன் பல்வேறு துன்பங்களை இழைத்தான். இறுதியாகக் கல்லிலே கட்டிக் கடலிலே எறிந்தபோது திருநாவுக்கரசர் “நற்றுணையாவது நமச்சிவாயவே” என நமச்சிவாயப்பதிகம் பாடிக் கல்லே கலமாகமாறக் கரையேறிய அதிசயத்தை கண்ணாலே நேரே கண்ட மன்னவன் தானும் சைவசமயத்திற்குத் திரும்பினான். பல சைவத்தொண்டுகளைச் செய்தான். குணபரஈஸ்வரம் என்ற பழமையான ஆலயத்தை நிருமாணித்தவனும் இவனே. அதுவரையிலே மரத்தினாலே கட்டப்பட்ட கோயில்களை விடுத்து முதன்முதலாகக் கற்பாறைகளிலே குடைந்து அமைக்கப்பட்ட குடவரைக்கோவில்களை ஆரம்பித்த பெருமைக்கும் இம்மன்னனே உரியவனாகிறான். இவ்வாறு பல்லவராச்சியத்திலே சைவசமயம் மீண்டும் ஒளிவீச ஆரம்பிக்கிறது.
இதற்குச்சில ஆண்டுகளுக்குப்பின்னர் சோழநாட்டிலே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. மூன்று வயதுக் குழந்தையொன்று லோகமாதாவாகிய அன்னையிடம் ஞானப்பாலுண்டு அமுதொழுகும் தேவாரங்களைப்பாடிப் பல அற்புதச் செயல்களைப் புரியத்தொடங்கியது. சோழநாட்டிலும் தொண்டை நாட்டிலும் பல பல ஸ்தலங்களுக்கும் விஜயம்செய்து சைவசமத்திற்குப் புத்துயிர் ஊட்டத்தொடங்கினார் திருஞானசம்பந்தர். பாண்டி நாட்டிலே அச்சமயம் நெடுமாறன் என்ற பராக்கிரமம் வாய்ந்த மன்னன் ஆட்சி செய்து கொண்டிருந்தான். சமணர்களுடைய அறிவுத்திறமையிலும் சாஸ்திர விற்பனத்திலும் அற்புதமான பேச்சு வல்லமையிலும் மனதைப் பறிகொடுத்து அவரது சமயத்தைச் சார்ந்தான். இம்மன்னன் நெல்வேலி என்னும் இடத்திலே கன்னட தேசத்திலிருந்து படையெடுத்து வந்த மிகப்பலம் வாய்ந்த விக்கிரமாதித்தன் என்னும் பேரரசனைப் புறம்காணச்செய்து சரித்திரத்திலே நிரந்தர இடம் பெற்றவனாவான். இவனது போர்கள் காரணமாக முதுகு வளைந்து போகவே கூன்பாண்டியன் எனும் பெயரைப்பெற்றான்.
இவனது மனைவி நல்லொழுக்கங்களில் சிறந்த சோழர் குலத்தைச்சேர்ந்த மங்கையற்கரசி என்னும் உத்தமியாவாள். இம்மன்னனுக்கு அறிவிற்சிறந்த குலச்சிறையென்பார் மகா மந்திரியாகப் பணிபுரிந்தார். இவ்விருவரும் சைவசமயத்தைப் பாண்டி நாட்டினில் நிலைபெறச் செய்யவேண்டும் என்ற விருப்புடனும் மன்னனைச் சமண சமயத்திலிருந்து மீட்கவேண்டும் என்றஅவாவுடனும் உதவிகோரிச் சம்பந்தப்பெருமானுக்கு ஓலையனுப்பினார்கள். அவ்வாறே திருஞானசம்பந்தப்பெருமான் பாண்டி நாடு வந்து சமணர்களது சூட்சிகளை வென்று பாண்டியனது வெப்புநோயை நீக்கி பாண்டிநாட்டிலே சமணசமயத்தை நிர்மூலம் செய்தார். “வாழ்க அந்தணர்” என்ற பாடலின் சிறப்பு வரியாக வேந்தனும் ஓங்குக என்று அவர் வாழ்த்திப்பாடிய காரணத்தினால் கூன்பாண்டியன் தனது கூன்நீங்கி நிமிர்ந்து நின்றசீர் நெடுமாறன் என்று புகழப்பட்டான். நிமிர்ந்தது மன்னன் மட்டுமல்ல சைவமும் கூடத்தான். பாண்டிய நாட்டிலே இழிநிலை நீங்கிச் சைவம் நிமிர்ந்து உயர்நிலை அடையத் திருஞானசம்பந்தப்பெருமானே காரணியானார். அன்றிலிருந்து அவருக்கூடாக ஒரு பக்தி இயக்கமே மலரத்தொடங்கியது. பட்டிதொட்டிகளெங்கும் பரமேஸ்வரனது நாமம் துதிசெய்யப்பட்டது. கோவில்களும், அர்ச்சனைகளும்,மறையொலிகளும் மங்கல இசைகளுமாகத் தமிழ்நாடே ஈசன் திருக்கோவிலாக மாறிற்று.

திருஞானசம்பந்தப்பெருமான் ஆற்றிய அற்புதங்கள் பல. அவரியற்றிய திருப்பதிகங்களிலே புதிய புதிய இசைவடிவங்களைக் காணலாம். யாழிலே அடங்காத யாழ்முறி எனும் பண்ணையும் அவர் அளித்துள்ளார். கொஞ்சும் தமிழிலே இயற்கையின் எழிலையும் வீணை நடனம் போன்ற கலைவல்லாரையும் அவர் வர்ணிக்கும் பாங்கு நினைந்து நினைந்து இன்புறற்பாலது. இதைவிடவும் தமிழ் மொழி மீதும் அவருக்குக் காதல் அதிகம். அவர் தம்மை தமிழ்விரகர் என்றே அழைத்துக்கொள்கிறார். அவர் செய்த சமூகப்புரட்சிகளும் ஏராளம். பாண்டிநாட்டிலிருந்து அழைப்பு வந்தபோது உமது கோள்கள் நன்றாக இல்லையென்று தடுத்த திருநாவுக்கரசரைப்பார்த்து “இறைவன் மனதிலே உறைவானாயின் கோள்கள் நம்மை ஒன்றும் செய்யமாட்டா” என்று வேயுறுதோளி பங்கன் என்ற கோளறு பதிகத்தைப் பாடுகின்றார். சாதிவேற்றுமை பாராது தம்முடன் திருநீலகண்டரென்னும் யாழ்ப்பாணரையும் மதங்கசூளாமணி

# திருத்தலங்களில் பேணப்படும் தாவரங்களின் அறிவியல் மகிமையும் பல்லுயிர்ப்பெருக்கப் பயன்பாடும்

முனைவர்.வே.ராஜேஸ் கண்ணன்

உதவிப் பேராசிரியர், நுண்ணுயிரியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, தமிழ் நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: uvrajesh@gmail.com

## கட்டுரைச் சுருக்கம்

தமிழின் சங்க காலம் தொட்டு இன்றளவும் 'தா''வரம்' என பெற்ற தாவரங்களின் இருப்பிடம், தன்மை மற்றும் பயன்பாடானது, திருத்தலங்களில் மக்களால் வணங்கப்பெறும் ஒரு அங்கமாகவே காணப்படுகிறது. சங்க காலங்களில் நிலத்தினை ஆதாரமாக கொண்டு மக்கள் வாழ்க்கையை வகைப்படுத்தியதனைப் போல இன்றளவும் ஒவ்வொரு திருத்தலங்களிலும் சில குறிப்பிட்ட வகை தாவரங்கள் தவறாமல் இடம் பெற்றுள்ளதை காணமுடிகின்றது.

இவ்வாறு இடம் பெற்றுள்ள தாவரங்கள் அது சார்ந்த திருத்தலங்களின் அன்றாட திருமுறைகளில் உகந்த பொருளாக பங்குபெறுவதோடு நாடிவரும் பக்தர்களுக்கு பல்வேறுமுறைகளில் நேரடியாக பயனளிப்பதாக விஞ்ஞான அணுகுமுறை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பொதுவாகவே அனைத்து வகை தாவரங்களும் ஏதோ ஒரு வழியில் பிற உயிர்களுக்கு உதவி செய்வதாக இருந்தாலும், கால மற்றும் சுற்றுச்சூழல் காரணமாக நாளுக்குநாள் அழிந்து கொண்டு வருகின்றன.

ஏனெனில், சாதகமான சூழல் இல்லாத பட்சத்தில் பெரும்பாலான உயிரிகள் இருப்பிடம் மாற்றிக்கொள்ளும். தகவமைப்பால் தப்பி பிழைத்துக்கொள்ளும். சூழலில் தாவரங்கள் இத்தகவமைப்பு இல்லாவிடினும் சில குறிப்பிட்ட வகை தாவரங்கள் திருத்தலங்களில் வளர்க்கப்படுவதால், இன்றைய மக்களின் வர்த்தக கண்ணோட்டம் இவ்வகை தாவரங்களின் மேல்படுவது குறைவாக இருப்பதற்கு அது சார்ந்த திருத்தலங்களே காரணமாக அமைவது 'பல்லுயிர்ப்பெருக்க பாதுகாப்பு முறை'யாக விளங்குகின்றது.

மேலும், சுற்றுச்சூழலின் முதல் நிலை உணவு உற்பத்தியாளராக அறியப்பெறும் தாவரமானது "உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்" என்ற உயர்மொழிக்கு ஏற்ப இன்றைய காலகட்டங்களில் திருத்தலங்களில் பரவலாக பின்பற்றப்படும் அன்னதானத்திற்கு ஒப்பாகும்.

இவ்வாறாக, 'வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் திருக்கூற்று ஆரோக்கியமான உயிர் உலகம் காக்கும் தாவரங்களின் அறிவியல் மகிமை மற்றும 'பல்லுயிர்ப்பெருக்க' கருத்தாகக்கொள்ள முடிகிறது.

# சிவாகமங்கள் கூறும் முத்திரை வழிபாடு

*சிவஸ்ரீ இரகு கமலநாதக் குருக்கள் BA (Hons)*
*பிரதமகுரு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்.*

முத்ரா என்ற சொல்லுக்கு இறைவழிபாட்டின்போது விரல்களை குறிப்பிட்ட வகையாக வைத்துக் கொள்ளும் முறை என்ற பொருள் ஸம்ஸக்ருத அகராதிகளில் காணக்கிடைக்கிறது. முத்ரா என்ற சொல் ஒரு காரணப் பெயர். முத் என்ற வினைச் சொல் மகிழ்வூட்டும், மனநிறைவளிக்கும் என்று பொருள்படுவது. த்ரா என்ற பதத்துக்கு விரைந்து வெளியேற்றுதல் என்று பொருள். எனவே, தேவதைகளுக்கு மகிழ்வையும் மன நிறைவையும் அளிப்பதுவும், விரைவாகப் பாவங்களை அகற்றுவதும் ஆன கிரியைக்கு முத்ரா என்பதாகக் காரணப் பெயர் அமைந்துள்ளது.

முத்திரைகளின் பெருமையை விளக்கிக் கூறும் ச்லோகங்கள் இவ்வாறு கூறுகின்றன: எல்லா தேவர்களையும் மகிழ்விப்பதாலும், பாவத் தொடர்பைப் போக்குவதாலும் அவை முத்திரை என்று பெயர் பெறுகின்றன. முத்திரைகள் எல்லாக் காமங்களையும் (இன்பம்) (தர்ம-அர்த்த-காம-மோக்ஷம் என்பதே அறம், பொருள், இன்பம், வீடு என்றாகிறது), அர்த்தங்களையும் (செல்வம்), கூட்டுவிப்பதாகும். தந்த்ரங்களில் கற்பிக்கப்பட்ட முத்திரைகளைக் காட்டுவதால், மந்த்ர தேவதைகள் ப்ரீதி அடைவார்கள். அர்ச்சனை, ஜபம், த்யானம் முதலியவற்றின் போதும், ஸ்நானம், ஆவாஹனம், சங்கப்பரதிஷ்டை , ரக்ஷணம், நைவேத்யம், முதலிய கிரியைகளின்போதும், அந்தந்த (பூஜா) கலபங்களில் கூறப்பட்ட முத்திரைகளை உரிய ஸ்தானங்களில், உரிய லக்ஷணங்களுடன் காண்பிக்க வேண்டும்.

முத்திரைகளைப் பற்றிய சில விளக்கங்களை நம்மில் பலருக்குப் பரிச்சயமான ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயண முறையை ஒரு உதாரணமாகக் கொண்டு காண்போம். மனனத்தால் (ஜபிப்பதனால்) ஸாதகனைக் (ஜபிப்பவனைக்) காப்பவை (மநநாத் த்ராயதே ) மந்திரங்கள் பலவகை: ஓர் அக்ஷரம் உள்ளவை பிண்டம்; இரண்டு அக்ஷரம் உள்ளவை கர்த்ரீ: மூன்று முதல் ஒன்பது அக்ஷரங்கள் கொண்டவை பீஜம்; ஒன்பதுக்கு மேல் அக்ஷரங்கள் கொண்டவை மந்த்ரங்கள்.

மந்திரங்கள் அனாதியானவை. இறைவனோடு மூச்சுக் காற்றென ஒன்றியவை. அவற்றை மானஉஷ சக்திகள் உருவாக்கவில்லை. அவை பேறு பெற்றவர்கள் பாக்கியசாலிகள். ரிஷிகள் மந்திரங்களை முதலில் கண்டறிந்து, அவற்றின் சக்தியை உணர்ந்து, உலக நன்மைக்காக அவற்றை வெளியிட்டவர்கள். ஒரு மந்திரத்தை ஜபிக்கத் தொடங்கும் முன் வலக்கையால் சிரஸ்ஸைத் தொட்டு, அந்த மந்திரத்தைக் கண்டறிந்து சொன்ன முனிவரை நினைவு கூர்ந்து, அவரை வணங்குவதாகப் பாவனை செய்வதுதான் குரு ந்யாஸம். இவ்வாறு சிரஸ்ஸைத் தொடும் செய்கை ஒரு முத்திரை.

மந்திரம் அமைந்துள்ள சொற்கட்டுக்கு (சந்தத்திற்கு) சந்தஸ் என்று பெயர். அதற்கு வணக்கம் செலுத்துவதே சந்தஸ் ந்யாஸம் என்பது. சந்தஸ்ஸை நினைவு கூர்ந்து, உதட்டின் மேல் வலது கையால் தொடும் முத்திரையே சந்தஸ் ந்யாஸம். அந்தந்த மந்திரத்துக்கு உரிய தேவதையை இதயத்தில் அமர்த்துவதாகப் பாவித்து இதயத்தைத் தொடுவது தேவதா ந்யாஸம்.

மந்திரம் என்பது, மரம் போன்று பலன் தரும் வரிந்த சக்தி வடிவம். இதன் விதை போல, கருவாக, இதன் சூக்ஷ்ம சக்தி அனைத்தையும் தன்னுள் அடக்கி வைத்துள்ள சொல் வடிவமே பீஜம். அந்த பீஜத்தில் அடங்கியுள்ள வீரியமே சக்தி. சக்தி தேவையின்றி வேறிடத்தில் செல்லாமல், அதனைப் பிணைத்து வைத்திருக்கும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் என்ற மாலா மஹா மந்திரத்துக்கு ஐம் என்பது பீஜம்; ஸெள: என்பது சக்தி; க்லீம் என்பது கீலகம்; (இந்த ஐம் ஸெள: க்லீம் என்ற மூன்று அக்ஷரங்களும் சேர்ந்து ஸ்ரீ பாலா மந்திரம் என்ற தனிப் பெயரும் பெற்றுள்ளன). ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ர பாராயணத்துக்கு முன்னால் ந்யாஸம் செய்யும்போது, இந்த அக்ஷரங்களைச் சொல்லி, அங்கங்களைத் தொட்டு, அங்கு அவை நிலைத்திருப்பதாக பாவனை செய்கிறோம். இந்த கிரியைகள் பீஜ ந்யாஸம், சக்தி ந்யாஸம், கீலக ந்யாஸம் எனப்படும். எந்த உறுப்புகளை எவ்வாறு தொடவேண்டும் என்பது அவரவரது குரு போதித்த ஸம்ப்ரதாயத்தைப் பொறுத்தது.

இவ்வாறே விநியோக ந்யாஸம், கர ந்யாஸம், அங்க ந்யாஸம் முதலியனவும் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாராயணத்துக்கு விதிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றால் (அ) மந்திரங்கள் உச்சரிக்கும்போது, முத்திரைகளுக்கு முக்கிய இடம் உண்டென்பதும், (ஆ) அந்த முத்திரைகளும் குரு பரம்பரைக்கு ஏற்ப பேதங்களாகும் என்பதும் பெறப்படும். அதே வகையில்தான், மந்திரங்களை ப்ரயோகித்து சிவாலய பூஜா கிரியைகள் நடக்கும்போது, பல வகையான முத்திரைகளுக்கு அக்கிரியைகளில் முக்கியத்துவம் தரப்படுகின்றது. அவற்றை சிவாச்சாரியார்கள் பயிற்சி பெறும்போது, குருமுகமாகக் கற்றறிவர். பின்னர் அவர்கள் அவற்றைப் பிழைகளின்றி, ச்ரத்தையுடன்

ப்ரயோகிக்கும்போது, கிரியைகளைச் சூழ்ந்து வரும் மந்திரங்களின் பலன்கள் பூரணமாக ஸித்தியாகின்றன. முத்திரைகள் வெறும் அங்க சேஷ்டைகள் அல்ல; அவை பொருள் பொதிந்தவை; கிரியைகளுக்கு பூரணத்துவத்தை அளிப்பவை.

நல்ல செயல்முறைகளுக்குத் தந்த்ரங்கள் என்று பெயர். மந்திரங்களை உபயோகித்து பூஜை செய்யும் விதி முறைகளும் தந்த்ரங்களே. அத்தந்த்ரங்கள் எழுதப்பட்டுள்ள நூல்களையும் தந்த்ரங்கள் என்றே அழைப்பர். ஆகமங்கள் அனைத்தும் அத்தகு தந்த்ர நூல்களே.

வேதங்களில் ஓம் என்ற ப்ரணவமும், ஸ்வாஹா, ஸ்வதா, வஷட், வௌஷட், வேட், வாத் முதலிய மந்திரங்களும், பூ; புவ; ஸுவ; என்னும் வ்யாஹ்ருதிகளும் முதல் முதலாகக் கூறப்படுகின்றன. பிற்காலத்துத் தந்த்ர சாஸ்திரங்களில் ஹம், ஹாம், ஹும், ஹூம், ஹ்ரீம், ஹ்ராம், ஹ்ரோம், ஸ்ரீம், ஐம், ஏம், க்லீம், பட் முதலிய ஒலிச் சேர்க்கைகள் குறிப்பிடப்படுகின்றன. இவை அனைத்தும் மந்திர சக்தி வாயந்தவை. இவற்றை ஆகம நூல்கள் பீஜாக்ஷரங்கள் என்று பெயரிட்டு திருக்கோவில் கிரியைகளுக்குப் பெரும் அளவில் பயன்படுத்துகின்றன. பூஜா மந்திரங்களை முறைப்படி குருவிடமிருந்து கற்றுக் கொள்ளும்போது, பீஜாக்ஷர மந்திரங்களின் ப்ரயோகமும் கற்றுத் தரப்படும்.

யந்த்ரம் என்ற சொல்லுக்கு ஒரு பொருளையோ சக்தியையோ தேக்கி வைத்திருக்கும் கருவி, ஒரு செயல் புரிகையில் அதற்குப் பயன்படுத்தப்படும் கருவி, சாதாரண அறிவுக்கெட்ட சக்தியைத் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டு விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு சாதனம் என்றெல்லாம் பொருள் காணப்படுகிறது. எனவே மந்திரங்களின் மூலம் பூஜா விதிகளைக் கூறும் தந்த்ர நூல்கள், யந்த்ரங்களின் விவரங்களையும், அவற்றை உபயோகிக்க வேண்டிய முறைகளையும் கூட வெளியிடுகின்றன. மந்திரங்களை ப்ரயோகித்துப் பலனடைய உதவும் தந்த்ரங்களாம் முத்திரைகமைச் சரியாக உபயோகிப்பதால், அம்மந்திரங்களுக்குரிய தெய்வங்கள் மகிழ்கின்றனர் என்பதும், முத்திரைகள் காட்டும்போது அவை யந்த்ரங்களோடு சம்மபந்தப்பட்டிருந்தால், அந்த யந்திரங்கள் தாங்கியுள்ள, தாங்க வேண்டிய, சக்திக்கான தேவதைகளும் திருப்தி அடைவது உறுதி.

முத்திரைகளுக்கு இன்னொரு முக்கியத்துவமும் உண்டு. பெரும்பாலான முத்திரைகள் அப்போது ஓதப்பட்டுக்கொண்டிருக்கும் மந்திரச் சொற்களின் பொருளையும், வழிபாட்டு உபாங்கத்தையும் அனுசரித்தே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. நடைபெறும் சிவ பூஜா கிரியைகளை, மந்திரங்களின் வாயிலாக அறிய முடியாதவர்களும்கூட, முத்திரைகளைக் கண்ணுற்று, அவற்றை ஊகித்து உணரலாம்.

இனி வரும் பக்கங்களில், சிவாலயங்களில் பயன்படுத்தப்பெறும் பல்வகையான முத்திரைகளில் சில, தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. முத்திரைகளின் சித்திரத்தைக் வைத்துக்கொண்டு, அவற்றில் பயிற்சியற்றோர் தேர்ச்சி பெறலாம் என்ற நோக்கில் அவை இங்கு சேர்க்கப்படவில்லை ! முத்திரைகளை பூஜா விதிகளோடு சேர்த்து, குரு மூலமாகத்தான் கற்றறிய வேண்டும்; அச்சிலேறி வருவதைப் பார்த்துக் கற்றுக் கொண்டு முத்திரைகளை ப்ரயோகிக்க இயலாது; ப்ரயோகித்தாலும் அவை பலன் தராதென்பதோடுகூட, அவ்வழி பெரும் தவறுங்கூட. இந்த புத்தகத்தில் காணப்படும் முத்திரைகளின் படங்களும் விளக்கமும், ஆலய வழிபாட்டிற்குச் செல்வோர், சிவாச்சாரியார் செய்யும் கிரியைகளின் பொருளை, முக்கியத்துவத்தை, உணர்ந்து கொள்ள உதவுவதற்காகவே அச்சேறி வருகின்றன.

**முத்திரைகளின் விளக்கம்**

குரு வந்தன முத்திரை : ஸுமுகம் : விரித்து, பக்க வாட்டில் சேர்ந்த இரு கைகளையும் உள்ளங்கைகள் நம் முகத்தைப் பார்க்குமாறு உயர்த்திப் பிடித்தல்.. குரு வந்தன முத்திரை : ஸுவ்ருத்தம் : ஸுமுக (1) முத்திரையில் விரல்களை மடக்குதல், கட்டைவிரல்கள் மேல் நோக்கி இருக்க வேண்டும்.

குரு வந்தன முத்திரை : சதுரச்ரம் : மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் கைகளை விரித்து (இடது கை கீழே) மணிக்கட்டு அருகே சேர்த்தல்.

குரு வந்தன முத்திரை : முத்கரம் : கட்டைவிரல்கள் தன்னை நோக்க, இடது முட்டி மீது வலது முட்டியை வைத்தல்.

குரு வந்தன முத்திரை : யோனி : இரு மோதி விரல்களையும், நடுவிரல்களின் பின்பக்கமாக வளைத்துக் கொண்டுவந்து, ஆட்காட்டி விரல்களால் பிடித்துக் கொள்ளவும்; இடது சுண்டுவிரலை வலது சுண்டுவிரலால் பிடித்துக் கொள்ளவும்; கட்டைவிரல் நுனிகளால் நடுவிரல்களின் நடுப்பகுதியைத் தொடவும்.

குரு வந்தன முத்திரை : ம்ருகீ : இரு கைகளின் கட்டை விரல், நடு விரல், மோதிர விரல்களை மடித்து நுனிகளைச் சேர்த்து, மற்ற விரல்களை நீட்டி, தலைக்கு மேல் பிடித்தல்.

அர்க்ய ஸ்த்தாபன முத்திரை : மத்ஸ்யம் : வலது உள்ளங்கை கீழ் நோக்க, இடது உள்ளங்கை அதனைத் தாங்க, கட்டை விரல்களை மட்டும் மீனின் செதில்களைப் போல் அசைத்துக் காட்டுதல்.

அர்க்ய ஸ்த்தாபன முத்திரை : அஸ்த்ரம் : வலது நடு விரல் மற்றும் ஆள்காட்டி விரல்களால் இடது உள்ளங்கையில் மும்முறை தட்டுதல்.

அர்க்ய ஸ்த்தாபன முத்திரை : அவகுண்டனம் : கைமுட்டிகளைக் கீழே காட்டி, வலது ஆட்காட்டி விரலால் ப்ரதக்ஷிணமாகவும், இடது ஆட்காட்டி விரலால் அப்ரதக்ஷிணமாகவும் இலக்கைச் சுற்றிக் காண்பித்தல்.
அர்க்ய ஸ்த்தாபன முத்திரை : தேனு - அம்ருதீகரணம் : ஒரு கையின் சுட்டு விரல் மற்றதின் மோதிர விரலைத் தொடவும், ஒன்றின் நடுவிரல் மற்றதின் ஆள்காட்டி விரலைத் தொடவும் செய்வது. (பால் இறங்கி நிற்கும் பசுவின்மடி போல் காணப்படும்.)

அர்க்ய ஸ்த்தாபன முத்திரை : காலினீ : இடது கை மேல் நோக்க, வலது கையைக் கவிழ்த்து, விரல்களை வளைத்துப் பிடித்தல். இடது கட்டை விரலும் வலது சுண்டுவிரலும் சேர்ந்து காணும் இடைவெறி மூலம் விசேஷார்க்யத்தப் பார்க்க உதவும் முத்திரை.

ஆவாஹனாதி முத்திரை : ஆவாஹனீ : ஸுமுக (1) முத்திரையில் கட்டை விரல்களால் மோதிர விரல்களின் அடிப்பாகத்தை தொட்டு அசைத்தல்.

ஆவாஹனாதி முத்திரை : ஸம்ஸ்தாபனீ (ஸ்தபனீ) : ஆவாஹனீ (12) போலவே கீழ் நோக்கிச் செய்தல்.
ஆவாஹனாதி முத்திரை : ஸந்திதாபனீ : கைமுட்டிகளை விரல்களின் நடுப்பகுதியில் சேர்த்து, கட்டை விரல்களை மேல் நோக்கிப் பிடித்தல்.

ஆவாஹனாதி முத்திரை : ஸந்நிரோதினீ : கட்டைவிரல்கள் உள்ளே மறைய, மற்ற நான்கு விரல்களின் நகங்கள் ஒன்றுக்கொன்று உரச, முட்டிகளைச் சேர்த்துப் பிடித்தல்.

ஆவாஹனாதி முத்திரை : ஸம்முகீகரணீ : விரல்கள் மடங்கிய நிலையில், கைமுட்டிகளை பக்க வாட்டில் சேர்த்து, நிமிர்த்திப் பிடித்தல்.

ஆவாஹனாதி முத்திரை : வந்தனீ : கைகூப்பி, விரல்கள் வளையாது, மார்புக்கு நேரே வந்தனம் செய்தல்.

ஆவாஹனாதி முத்திரை : தத்வம் : மற்ற விரல்கள் நிமிர்ந்திருக்க, இடது கை மோதிர விரல் நுனியைக் கட்டைவிரல் நுனியால் தொடுதல்.

ஆவாஹனாதி முத்திரை : சின் முத்திரை (அ) ஜ்ஞாந முத்திரை : வலது உள்ளங்கை வெளியே நோக்க, மூன்று விரல்கள் நிமிர்ந்திருக்க, ஆள்காட்டி விரல் நுனியைக் கட்டைவிரல் நுனியால் தொடுதல்.

ஆவாஹனாதி முத்திரை : ஸம்ஹாரம் (நிர்யாணம்) : இடக்கை கீழ் நோக்க, அதன் மேலே வலக்கையினை மேலே நோக்குமாறு வைத்து விரல்களைப் பிடித்துக்கொண்டு அசைத்துக் காட்டுதல்.

நியாஸ முத்திரை : முகம் : நான்கு வலக்கை விரல்களால் உதடுகளைத் தொடுதல்.

நியாஸ முத்திரை : கரசம்புடம் : ஸம்புடம் போல், கைகளை எதிர்முகமாகக் குவித்துப் பிடித்தல்.

நியாஸ முத்திரை : அஞ்ஜலி (நமஸ்காரம்) : இரண்டு கைகளையும் சேர்த்து, விரல்களை இணைத்து, பெருவிரல்கள் ஒன்றின் மேல் ஒன்றாகப் பின்னியுற வைப்பது.

நியாஸ முத்திரை : ஹ்ருதயம் : வலக்கையில் நடுவிலுள்ள மூன்று விரல்களால் இதயப் பகுதியைத் தொடுதல்.

நியாஸ முத்திரை : சிரஸ்: வலக்கையில் நடு மற்றும் மோதிர விரல் நுனிகளால் தலை உச்சியைத் தொடுதல்.

நியாஸ முத்திரை : சிகை : வலக்கை கட்டை விரல் நுனியால் சிகை (குடுமி) இருக்க வேண்டிய இடத்தைத் தொடுதல்.

நியாஸ முத்திரை : கவசம் : கைகளை மாற்றி, அனைத்து விரல்களாலும் தோள்களைத் தொடுதல்.

நியாஸ முத்திரை : நேத்ரம் : வலக்கையின் நடுவிலுள்ள மூன்று விரல்களால், இரு கண்கள், அவற்றின் நடுப்பகுதி ஆகியவற்றைத் தொடுதல்.

நியாஸ முத்திரை : அஸ்த்ரம் : வலது நடு விரல் மற்றும் ஆள்காட்டி விரல்களால் இடது உள்ளங்கையில் மும்முறை தட்டுதல்.. நியாஸ முத்திரை : ந்யாஸம் : வலது கை கட்டை விரலால் மடங்கிய மூன்று விரல்களைச் சேர்த்தபின், ஆட்காட்டி விரலால் அங்கங்களைத் தொடுவது.

நிவேதன முத்திரை : க்ராஸம் : மேல் நோக்கும் இடது கையால், கிண்ணத்தில் அன்னம் இருப்பது போல் பாவனையாகக் காட்டுவது.

நிவேதன முத்திரை : ப்ராணன் : வலது கை நடுவிரலையிம் ஆள்காட்டி விரலையும் சேர்த்துக் கட்டை விரலுடன் பிடித்து, இடக்கையின் க்ராஸ முத்திரை மீது நிவேதனம் செய்வது போல ஆட்டிக் காண்பித்தல்.
நிவேதன முத்திரை : அபானன் : வலது கை மோதிர விரலையும் நடுவிரலையும் சேர்த்துக் கட்டை விரலுடன் பிடித்து. இடக்கையின் க்ராஸ முத்திரை மீது நிவேதன் செய்வது போல ஆட்டிக் காண்பித்தல்.

நிவேதன முத்திரை : வ்யானன் : வலது கை சுண்டு விரலையும் மோதிர விரலையும் சேர்த்துக் கட்டை விரலுடன் பிடித்து. இடக்கையின் க்ராஸ முத்திரை மீது நிவேதனம் செய்வது போல ஆட்டிக் காண்பித்தல்.

நிவேதன முத்திரை : உதானன் : வலது கை மோதிர விரலையும் ஆள்காட்டி விரலையும் சேர்த்துக் கட்டை விரலுடன் பிடித்து. இடக்கையின் க்ராஸ முத்திரை மீது நிவேதனம் செய்வது போல ஆட்டிக் காண்பித்தல்.

நிவேதன முத்திரை : ஸமானன்: வலது கையின் அனைத்து விரல்களையும் சேர்த்துப் பிடித்து, இடக்கையின் க்ராஸ முத்திரை மீது நிவேதனம் செய்வது போல ஆட்டிக் காண்பித்தல்.

கணேச வந்தன முத்திரை : தந்தம் : வலக்கையின் நடுவிரலை மட்டும் மேலே நீட்டி, மற்றவற்றை மடக்கிப்பிடித்தல்.
கணேச வந்தன முத்திரை : பாசம் : இரு கை முட்டிகளையும் ஆள்காட்டி விரல்களின் நுனிகள் தொடுமாறு சேர்த்து. கட்டை விரல் நுனிகளும் அவற்றைச் சந்திக்கச் செய்தல்.

கணேச வந்தன முத்திரை : அங்குசம் : வலக்கை நடு விரல் நேராக நீட்டப்படும்: ஆள்காட்டி விரல் அதன் நடுப்பகுதி வரை வந்து முன் நோக்கி வளையும்.

கணேச வந்தன முத்திரை : விக்னம் : இறுகப்பிடித்த வலக்கை முட்டி கீழ் நோக்க, நடு விரல் மட்டும் நீட்டப்படுவது.

கணேச வந்தன முத்திரை : பரசு: உள்ளங்கைகளை ஒன்றை ஒன்று நோக்க, குறுக்கு வாட்டில் சேர்த்து, விரல்களை நீட்டுதல்.

கணேச வந்தன முத்திரை : லட்டுகம் : கையிலடங்கிய லட்டு அல்லது கொழுக்கட்டையைக் காண்பிப்பது போன்ற பாவனை.

கணேச வந்தன முத்திரை : பீஜாபூரம் : மாதுளம்பழம் போலக் கையைக் குவித்துப் பிடித்தல்.
சிவ வந்தன முத்திரை : லிங்கம் : உயர்த்திய வலது கட்டை விரலை முதலில் இடது கட்டை விரலால் பற்றிக் கொண்டு, பிறகு மற்ற இடக்கை விரல்களாலும் சுற்றிப் பிடித்து, இறுதியாக வலது கைவிரல்களால் இடக்கையை இறுகப் பிடித்து. இதயத்தின் அருகே பரிசுத்தமான மனத்துடன் வைத்துக் கொள்வது.

சிவ வந்தன முத்திரை : யோனி : மோதிர விரல்களுடன் சேர்த்து நீட்டிய நடு விரல்களின் மேல், கட்டை விரல்களை வைத்தல்.

சிவ வந்தன முத்திரை : திரிசூலம் : மடக்கிய வலக்கை சுண்டு விரலைக் கட்டை விரலால் அழுத்திக்கொண்டு, மற்ற மூன்று விரல்களை நீட்டிக் காண்பித்தல்.

சிவ வந்தன முத்திரை : அக்ஷமாலா : வளைந்த வலக்கை ஆள்காட்டி விரல் நுனியைக் கட்டை விரல் நுனி தொட, மற்ற மூன்று விரல்களை நீட்டிக் காண்பித்தல்.

சிவ வந்தன முத்திரை : வரம் : கீழ் நோக்கி மலர்ந்து நீண்ட வலது கை.
சிவ வந்தன முத்திரை : அபயம் : மேல் நோக்கி மலர்ந்து நீண்ட இடது கை.
சிவ வந்தன முத்திரை : ம்ருகீ : இரு கைகளின் கட்டை விரல், நடு விரல், மோதிர விரல்களை மடித்து நுனிகளைச் சேர்த்து , மற்ற விரல்களை நீட்டி, தலைக்கு மேல் பிடித்தல்.

சிவ வந்தன முத்திரை : கட்வாங்கம் : கையின் ஐந்த விரல்களையும் மேல் நோக்கிச் சேர்த்து, சற்று வளைத்துப் பிடித்தல்.

சிவ வந்தன முத்திரை : கபாலம் : இடது கையில் மண்டை ஓடு இருப்பது போல் பாவனை செய்து, அந்தக் கையை இடது பக்கமாக பிக்ஷை கேட்பது போல் நீட்டுதல்.

சிவ வந்தன முத்திரை : டமருகம் : சற்றே விரிந்த வலக்கை முட்டியை, நடு விரலை மட்டும் சற்றுத் தூக்கிப் பிடித்து, காதிற்கு அருகே உடுக்கு அடிப்பது போல பாவனை செய்தல்.

பொதுவான முத்திரை : சாபம் (வில்) : உயர்த்திய வலக்கை நடுவிரல் நுனியை, ஆட்காட்டி விரல் நுனியைத் தொடுமாறு செய்தல்.

பொதுவான முத்திரை : சங்கம் : இடது கைக் கட்டை விரலை வலது முட்டியால் பற்றிக்கொண்டு. வலக்கை கட்டை விரலைச் சங்கு ஊதுவதுபோல் பாவனை செய்தல்.
பொதுவான முத்திரை : கட்கம் : வலது கட்டைவிரலால் சுண்டு விரலையும் மோதிர விரலையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு, மற்ற இரு (ஆள்காட்டி, நடு விரல்களையும் ஒன்றோடு ஒன்று சேராமல் நீட்டுதல், (ஆள்காட்டி, நடு) விரல்களைச் சேர்த்து வைத்து நீட்டுவதே கட்க முத்திரை என்றும் சேர்க்காமல் நீட்டுதல் கோவிடாண முத்திரை என்றும் கொள்வதுண்டு)

பொதுவான முத்திரை : சர்மம் (கேடயம்) : இடது கையைக் குறுக்காக நீட்டி விரல்களை மடக்குதல்.

பொதுவான முத்திரை : முஸலம் : இடது முட்டி மீது வலது முட்டியை வைத்தல்.

பொதுவான முத்திரை : வீணா : விணை வாசிப்பது போல் கைகளால் பாவனை செய்து தலையையும் அசைப்பது.

பொதுவான முத்திரை : புஸ்தகம் : கை முஷ்டியைத் தன்னை நோக்கிப் பிடிப்பது.

பொதுவான முத்திரை : கும்பம் : வலது இடது கட்டை விரல்கள் பக்க வாட்டில் உரசுமாறு இரு கை முட்டிகளையும் சேர்த்து நீட்டுதல்.

பொதுவான முத்திரை : ப்ரார்த்தனா : இரு கை விரல்களையும் விரித்துப் பக்க வாட்டில் தன்னை நோக்கிச் சேர்த்து இதயத்தில் வைத்துக் கொள்ளுதல்

பொதுவான முத்திரை : பசுமுத்திரை : சுண்டு விரல்களின் அடிப் பகுதியை கட்டை விரல் நுனிகளால் தொட்டுக்கொண்டு. இருகைகளையும் ஒன்று சேர்த்துக் குவித்து வணங்குவது. இது முத்தேவியருக்கும் மிகவும் உகந்தது.

நிரீக்ஷண முத்திரை : கட்டை விரல் மோதிர விரலை வளைத்துப் பிடிக்க மற்ற விரல்களை நீட்டுவது.
அப்யுக்ஷண முத்திரை : விரல்களை சேர்த்து நீட்டி, கட்டை விரலை அவற்றுடன் இணைத்து, கவிழ்த்துப் பிடிப்பது. இது சோத்திக முத்திரை, மற்றும் கவிழ்ந்த பதாகை எனவும் வழங்கப்பெறும்.

கோவிடான முத்திரை : ஆள்காட்டி விரலையும், நடு விரலையும் இணையாமல் நீட்டி, சுண்டு விரல் மோதிர விரல்களை மடக்கி இவற்றை கட்டை விரல்லால் அழுத்திப் பிடிப்பது.

சோடிகா முத்திரை; விரல்களை மடக்கி, ஆள்காட்டி விரலால் கட்டை விரல் மத்தியில் விரல் துடிக்கத் தெறிப்பது.. சாண முத்திரை : நடுவிரல்கள் மூன்றையும் இணைத்து, மற்ற விரல்களை விலக்கி நீட்டுவது.
69 மஹா முத்திரை : கைவிரல்கள் நீண்டிருப்பது.

ப்ரஸன்ன முத்திரை : இரண்டு கைகளையும் கூப்பி, இரண்டு கட்டை விரல்களையும் இணைத்து, அவற்றின் நுனிகள் மோதிர விரலின் அடியில் பொருந்த, உள்ளே மடக்குவது. இதை ஆவாஹன முத்திரை எனவும் கூறுவர்.
அதிஷ்டான முத்திரை : இரண்டு கைக் கட்டை விரல்களாலும் உள்ளங்கையைத் தொடுவது.
உஷ்ணீக முத்திரை : கட்டை விரல் நுணியை ஆள்காட்டி விரல் நுணியால் தொடுவது.
யோக முத்திரை : நடுவிரல் நுணியை பெருவிரல் நுணியால் தொடுவது. இதை மோக முத்திரை என்றும் கூறுவர்.
ஆக்ர முத்திரை : சுண்டுவிரல் நுணியை பெருவிரல் நுணியால் தொடுவது.
கடா முத்திரை : இரண்டு கைகளையும் இணைந்து, நடு விரல்கள் மூன்றினாலும் உள்ளங்கைகளைத் தொடுவது.
உஷ முத்திரை : ஒரு கை மோதிர விரலால் மற்றொரு கையில் உள்ளங்கையைத் தொடுவது.

## திருமுறைகள் வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்டன

திராவிட இந்தியா – ந.சி. கந்தையா 1949

## சமயக் கொள்கைகள்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே திராவிட மக்கள் உலகம், உயிர், இறைவன் என்னும் முப்பொருள் உண்மைகளை ஆராயும் உயர்ந்த சமயக்கொள்கை உடையவர்களாயிருந்தார்கள். மொகஞ்சதரோ அரப்பா முதலிய இடங்களிற் கிடைத்த முத்திரைக் கற்களில் பலவகை விலங்குகளின் இடையே ஆலமரத்தின் கீழ் யோகத்தில் வீற்றிருக்கும் கோலமுடைய வடிவம் ஒன்று காணப்படுகின்றது. இவ்வடிவம், கடவுள் உயிர்களுக்குத் தலைவன் (பசுபதி) என்னும் கருத்தை விளங்குகின்றதென ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்கள். அக்காலத்திலேயே மக்கள் யோகத்தின் தன்மைகளையம் அதனால் பெறும் ஆற்றல்களையும் நன்கு அறிந்திருந்தார்கள். பழைய தமிழரின் சமயக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே பௌத்த சைவ மதக்கொள்கைகளும் எழுந்தன. புத்தர் அரசமரத்தின் கீழ் யோகத்திருந்தார். சைனக் கடவுள் அசோகமர நிழலில் இருப்பவர் என்னும் கொள்கைகள் மொகஞ்சதரோ மக்கள் கொண்டிருந்த கருத்தைப் பின்பற்றியே கடவுள் யோகத்திலிருப்பதாகக் காட்டும் வடிவம், கடவுளாய் வருதற்கும் யோகப்பயிற்சி அவசியம் என்பதை அக்கால மக்கள் கொண்ருந்தார்கள் என்பதை உணர்த்துதல் கூடும். பௌத்த சைவ மதங்கள் பழைய திராவிடக் கொள்கைகளைத் தழுவி எழுந்தனவென்பதை வரலாற்றாசிரியர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

பழைய கலத்தில் சமயக் கருத்துக்கள் ஏட்டில் எழுதி வைக்கப்படாது ஆசிரிய மாணாக்கமுறையில் சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தன. இவ்வாறு தலைமுறையாக வந்த சமய உண்மைகள் மறைகள் எனப்பட்டன. உபநிடதங்கள் எனப்பட்ட சமய நூல்களிற் சொல்லப்படும் கருத்துக்கள் திராவிடரின் கொள்கைகளே அக்காலத்தில் பிராமணர் அரச வகுப்பினரின் பாதங்களிலிருந்து உபநிடத உண்மைகளைப் பயின்றார்கள். உபநிடத ஞானங்கள் பிராமணரால் அறியப்படாதவை. இக்கருத்துக்களே தமிழ் மக்களின் சமயக்கருத்துகளாகும். அக்கொள்கைகள் இப்பொழுது சைவசித்தாந்தக் கொள்கைகள் என வழங்கும் சைவசித்தாந்தக் கொள்கைகள் வரலாற்றுக் காலத்துக்கு முன் தொட்டுத் தமிழ் மக்களிடையே வழங்கி வரும் உயர்ந்த கருத்துக்கள் என டாக்டர் பாப் கூறியுள்ளார்.

தமிழருடைய மதம் எல்லா மக்களுக்கும் பொதுவாது. இதுவே வள்ளுவரதும், தொல்காப்பியரதும் மதமாகும். திருக்குறளில் வினைப்பயன், மறுபிறப்பு, உயிரின் அழிவின்மை, பாவ புண்ணியம், இறைவன் இருவினைகளையும் பற்றாமல் இறைவன் நிற்கும் தன்மை, தவம்.

தவத்தினால் பெறும் ஆற்றல் போன்றவை கூறப்பட்டுள்ளன. மந்திர வித்தைகளினாலோ கடவுளுக்குக் காணிக்கைகள் கொடுப்பதினாலே உயிர்கள் உயர்நிலை அடையமாட்டா வென்பதே அறிவுடையோர் மதமாகும்.

